சிலப்பதிகாரம்

நாடகக் காப்பியம்

இயற்றியவர்

கலைஞர் மு. கருணாநிதி

பொதுப்பணி - போக்குவரத்து அமைச்சர்
தமிழக அரசு

அஞ்சுகம் வெளியீடு

சென்னை - 6

பதிப்புரிமை]

[விலை ரூ. 5



164596

O—, & NKRI, C
N67

தமிழக முதல்வர்
பேரறிஞர் அண்ணா
அணிந்துரை

சிலப்பதிகாரம் – காற்சிலம்பின் கதை!

சிலப்பதிகாரம் – கருத்தைக் கவரத்தக்க பெயர்!

சிலப்பதிகாரம் – இனிய சந்தமும் – இன்னிசையும் இயைந்து அதனுள்ளே கோலோச்சிக் கொண்டுள்ளன.

சிலம்பில் – விலைமதிப்பில்லாத

மணிகள் – நிரம்பியிருக்கும். அதுபோல.....

சிலப்பதிகாரம் எனும் இம்முத்தமிழ்க் காப்பியத்தில் இருப்பது – இழைவது – இதயத்தைத் தொடுவது வெறும் கதை மட்டுமல்ல; பழம்பெரும் தமிழகத்தின் உணர்வும் ஆகும்.

இக்காப்பியக்கதை – கட்டுக்கோப்பில் – கருத்தைக் கவரும் தரத்தில் இமய உயர்வில் இருக்கிறது.

இக்காப்பியம் காட்டும் பெண்டிர் இருவகையினர்:

ஒருத்தி – கற்புக்கரசி கண்ணகி!

இன்னொருத்தி – கொழுநன் காலில் கலைகளைப் படைத்த மாதவி!

கண்ணகி – கணவன் தன்னைவிட்டுப் பிரிந்தமையால் கடுந்துயரும் – கண்ணீரும், பெருமூச்சும், புலம்பலும் கொண்டவள்!

மாதவி – பண்புடைப்பாவை – பேரழகுப்பேழை – இன்பம் கொழிக்கும் இயல்புடையாள் – இனிய காதலைக் கலையாக்கிய பெருந்தலைவி – நெஞ்சத்தூய்மையும் நேர்மையும் நிதியெனப் பெற்றவள். பொருளாசையோ – பொருந்தா நெறியோ – பொய் நேசமோ கொண்டவள் அல்லள். கோவலனுக்கென இதய ஆழத்தோடும் – நெஞ்சின் கதகதப்போடும் தன்னைத்தானே துயரக் கடலில் தள்ளிக்கொண்டவள். தன் இன்னுயிரையே அவனுக்கென அளித்தவள்!

கோவலனும் – மலைமலையான பொருளைத் தண்ணீராய்ச் செலவிடும் சாதாரண தரத்தைச் சார்ந்தவனல்ல; மதிப்பும் மதியும் மிக்க இளைஞன். சமுதாயத்தில் உயர்மதிப்புப் பெறும் இடம்பெற்றோன். பெருவணிகர் குலத்துதித்தோன்.

இக்காவியம் காட்டும் கோவலனும் மாதவியும் கண்ட இன்பக்காதல் வாழ்வும் – அவர்கள் இசைத்த இன்னிசையும், அவர்கள் ரசித்த நடனமும், ஏதோ நெறி கெட்ட இளைஞனும், வெறுக்கத்தக்க மங்கையும் வாழ்ந்த வாழ்வு அல்ல!

அது இரு காதலரின் வாழ்க்கை!

அந்தக் காதல் வாழ்வின் காட்சி – கொடுமைநிறை முதலை தன் இரையை விழுங்கும் காட்சி அல்ல! சிந்தை கவரும் வெண்ணிற அன்னம், சிந்துபாடும் சிற்றூற்றில் இசைமுழங்க நீந்தி மகிழும் காட்சிக்கு ஒப்பானது!

இது; தன்னலம் துறந்து - இதய அன்பை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும் உயர்தனிக் காதல்!

ஒருபுறம் கண்ணகி கண்ணீர் சிந்தி இருப்பினும், கோவலன்-மாதவி காதற் கதை-குமட்டலோ எரிச்சலோ ஊட்டுவதாயில்லை!

இங்கே காதல் உணர்வு பெருக்கெடுக்கும்போது; கண்ணகிக்கு என்ன நடந்தது? -எனச் சிந்திக்கும் நிலை இருப்பினும், அதையும் மீறி நாம்-'என்னே இரு உள்ளங்களின் இணைப்பு! என்னே-ஒப்புயர்வற்ற காதல்' என்று மாதவி-கோவலன் காதல் பற்றி நினைக்கும் வகையாய்க் காப்பியம் அமைந்துள்ளது.

பெருந்தமிழ்ப் பேராசிரியனின் படைப்புக் கரம் இத்தகு பாத்திரங்களை நேர்த்தியாய்ப் படைக்காதிருந்திருப்பின்-நிச்சயம் இக்கதை நம்முள் வெறுப்பையே விதைத்திருக்கும்!

ஆனால்-இளங்கோ எனும் சேரநாட்டு-இளவரசுக் கவிஞர்-கதையின் போக்கை ஒப்புவமையற்ற வகையில் கொண்டு சென்றிருக்கிறார்.

அதனால்தான்-நெறியான பாதை அல்ல என்றாலும் நாமும் கண்ணகியைப்போல் பொறுமையுடனும், காழ்ப்பு உணர்ச்சி இன்றியும் கோவலன் மாதவியுடன் இருப்பதைப் பொறுத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

காதல் காட்சி, அடுத்து நம்மைச் சோகமும் துயரும் உள்ள பக்கத்திற்கு அழைத்துச் செல்கிறது.

கோவலனும் மாதவியும் புதிதாகக் கண்டெடுத்த காதல் உலகில் மூழ்கி-ஈருடல் ஓருயிராய் இன்பத்தேன் பருகும் வேளையில் - கண்ணகி - இக்'கடும் வேதனைச்' செய்தியைக் கேட்டபின்னும்-இதயம் வடிக்கும் குருதிக் கண்ணீரையும் தாங்கும் சக்தி பெற்றவளாக விளங்குகிறாள்.

கோவலனுடன் தனது மணவாழ்வைத் துவக்கும்போது-எத்துணை நம்பிக்கை ஒளி அந்த நங்கையிடம் தோன்றியிருக்கும்?

அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!

மலையிடைப் பிறவா மணியே என்கோ!

யாழிடைப் பிறவா இசையே என்கோ!

—என்றெல்லாம் கூறி தன் காதல் உணர்வைக் காட்டினானே கோவலன்!

ஆனால், பாட்டும் கூத்தும் வீற்றிருக்கும் மாதவியின் மாளிகைக்குள் நுழைந்து, தனது கண்ணகியைத் துயரமுள் காட்டில் விட்டுவிட்டான்!

தமிழ் இலக்கியத்தின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தினால் கவரப்படாத தமிழ்க் காவியக் காதலர் யாருமே இருக்கமுடியாது!

இளங்கோவின் **மாயமந்திர காவியத்தூரிகை,** இக்கவின் தமிழ்க்கதையின் ஒவ்வொரு அங்கத்தையும் இயற்கைக்கு ஒவ்வியதாய் ஆக்கி—

'சிலம்பு' எடுத்துப் படிப்போரை - வளம் பெரிய பழந் தமிழ் நாட்டிற்கே அழைத்துச் செல்கிறது!

தமிழகத்தின் சிறப்பெழிலை உயிர்ப்பித்து, இயற்கை அழகை நம்முன் நடமிடக் காட்டி, பல வண்ணக் காட்சிகளை நம் பார்வைக்குக் கொணர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளின் அணிவகுப்பைத் தொகுத்துரைத்துப் – பழம் பெரும்வாழ்வின் நாடித்துடிப்பை – நல்லோர் புகழ நாற்புறமும் சூழ்ந்த அந்நாள் நல்லறிவை இளங்கோ நமக்குக் காட்டுகிறார் – இக் காப்பியம் மூலம்!

சேரமான் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை – என் தம்பி கருணாநிதி – தனது 'வளமிகு செழுந் தமிழ்ச் சொல்நிறத்தால்' நாடகமாகத் தருவது பொருத்தமானதே. கருணாநிதியின் – தமிழ் ஆளுந்திறன், பாத்திரங்களைப் படைக்கும் உயர்தனி ஆற்றல் ஊரும் உலகமும் அறிந்தது; அறிந்து மகிழ்ந்தது; மகிழ்ந்து பாராட்டியது!

அத்திறன் – சிலப்பதிகாரத்தை அவர் நாடக உருவில் ஆக்குவதற்குரிய உரிமையைத் தருகிறது.

அக்காவியத்தின் உயர்தரத்தை அப்படியே வைத்துக்கொண்டு சில நிகழ்ச்சிகளை மாற்றியிருக்கிறார். நம்மால் விளக்கமளிக்க முடியாததுபோலவும், நமக்குத் தேவையில்லாதது போலவும் தோன்றுகின்ற சம்பவங்கள் சிலவற்றிற்குக் காரண காரியத் தொடர்புடையதும் நம்பத்தக்கதுமான மாற்றங்களைச் செய்திருக்கிறார்.

கருணாநிதி எழுதியுள்ள இந் நாடகநூலில் கிரேக்க வணிகன் எனும் பாத்திரம் வருகிறது. கோவலனை மாதவி தன் மாளிகைக்கு அழைத்துச் செல்லும் காட்சிக்கு அந்தப் பாத்திரம் ஒரு சாதனமாக – கருவியாக அமைகிறது.

இது கோவலனின் செயலுக்குப் பொருத்தமான விளக்கமாகும்!

கோவலன் மகிழ்ச்சியும் – களியாட்டமும் வேண்டி மாதவி வீட்டிற்குச் செல்லவில்லை.

தமிழ்நாட்டின் பெயரைக் காக்க – தமிழ் அணங்கு, ஒரு கிரேக்கக் கிழவனின் கைப்பிடியில் வீழாமலிருக்கக் கோவலன் செயற்பட்டதாக அக்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது!

''தாங்கள் ஏன் ஒருமுறை மாதவியைச் சந்தித்து – அடைய முடியாத பொருளைப் பற்றி ஏங்காதே என அறிவுரை கூறி அவள் மனத்தை மாற்றக்கூடாது?''

—இது மாதவி இல்லம் போக விரும்பாத கோவலனிடம் கண்ணகி விடுத்த வேண்டுகோள்! மாதவியின் அழகுதரும் நெறி மயக்கத்தால் எழுந்த உணர்ச்சிப் பிழம்பல்ல – கோவலனை மாதவியிடம் சேர்த்தது!

கோவலன் மாதவியிடம் கலையின் குறைவில்லா நிறையுருவைக் கண்டான்; வேறென்றையுமல்ல!

கோவலன் தானே உருவாக்கிக் கொள்ளாத சூழ்நிலைதான் கோவலனை மாதவி இல்லத்திற்கு அழைத்துச் சென்றது.

அவன் அறிவுரை கூற அங்கு சென்றான். ஆனால் இசை மயமான புது வாழ்வின் துணைவனாக அங்கே இருந்துவிட்டான்.

இன்னொரு முக்கியமான மாறுதல்; சிலப்பதிகாரத்தில் கண்டுள்ள ஒரு நிகழ்ச்சியில் கருணாநிதியால் சிறப்புமிகு முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரம் தரும் விளக்கப்படி அரண்மனையின் தலைமைப் பொற்கொல்லர் தான் உண்மையான குற்றவாளி என்பது அறிந்த ஒன்று. இதனால் – இப்பழியால் பொற்கொல்லர் சமுதாயத்தின் சுயமரியாதையே பாதிக்கப்படும் உணர்வு ஏற்படுகிறது.

இளங்கோவடிகளுக்கு அத்தகு உள் நோக்கம் இருந்ததென யாரும் கூறிட முடியாதெனினும், அந்தப் பொற்கொல்லர் சமுதாயம் முழுமையுமே பெரியதொரு வெறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது.

இந்த வெறுப்பைப் – பழியைக் கருணாநிதி துடைத்தெறிந்தார். பல்வேறு சமூகங்களுக்கிடையேயுள்ள நல்லெண்ண - நல்லுறவில் அசைக்க முடியாத நம்பிக்கை யுடையவராதலால், இப் பழியைத் துடைத்திட விரும்பினர். அவரது எழுத்தோவியத்தில் போற்றத்தகும் முறையில் அந்த நற்பணியைச் செய்தார்.

பொற்கொல்லர் அல்ல – பாண்டிய நெடுஞ்செழியனின் அரண்மனைக் காவலன் ஒருவன்தான் உண்மையான குற்றவாளி என இந்நூலில் குறிக்கப்படுகிறது!

சமூக நீதிக்காக இந்த மாற்றம் செய்யப்பட்டது. இத்தகைய மாற்றங்களை பழம் பெரும் இலக்கியங்களில் செய்வது மிக மிக நியாயமானது; தேவையானது! இந்த மாற்றம் மிகச் சிறந்த நோக்கோடு செய்யப்படுகிறது.

இந்த மாற்றத்தைப் பாராட்டி – வாழ்த்தியவர்கள் – பழி கூறப்பட்ட அந்த சமுதாயத்தினர் மட்டுமல்ல; பழம் பெரும் இலக்கியங்களை நவீன முறையில் தருபவர்களும் வாழ்த்தியுள்ளனர்; பாராட்டியுள்ளனர்!

இந்த மாற்றம் தவிர – இக் காப்பியத்தின் முழு உருவம் - உரை நடையில் பாராட்டத்தகும் வழியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரத்தின் இலக்கிய எழிலோ உருவோ சிதையா வண்ணம்—சிலம்பில் காணும் செந்தமிழ் இனிமை — இளங்கோ தந்த இன்றமிழ் இனிமை மாற்றுக் குறையாது இந்நூலில் இருப்பது மெச்சத் தகுந்தது!

சிலப்பதிகாரத்தின் முதற் பகுதி ஒரு இளைஞரின் காதல் வாழ்வுக் கதையாயிருக்கிறது. அதன் பிற்பகுதி உயர்ந்துயர்ந்து—நம் நெஞ்சப் பெருமூச்சை உருவாக்குவதாய் அமைகிறது.

நிகழ்ச்சிகள் வேகமாய் நடைபோடுகின்றன; நாடகத் திருப்பங்கள் வந்து சேர்கின்றன.

மாதவியின் பேரழகில் மூழ்கியிருந்தவன், தான் ஒரு அறிமுகமற்றவனுய்த் தனக்கே தென்படுகிறான்.

ஒப்புயர்வற்ற காதற் கூடமாய் எந்த இல்லம் இருந்ததோ—அது வெட்கத்திற் குரிய வெற்றிடமாய்த் தோன்றியது.

அவன் திரும்புகிறான் — தெளிவுள்ளவனுய் — திரவியமற்றவனுய் — கண்ணகிக்கு இழைத்த அநீதிபற்றி உணர்ந்தவனுய்—உள்ளம் நொந்தவனுய்—வருத்தம் கொண்டவனுய் — பாதியில் துவண்டுபோன நல்வாழ்வைத் துவக்கும் ஒரே நோக்கம் உடையவனுய்–புதுவாழ்வைக் காணும் துடிப்புள்ளவனுய்! அந்தப் புதுவாழ்வு கண்ணகி தவிர வேறு யார் தரமுடியும்?

கண்ணகியை மீண்டும் கோவலன் அடையும் காட்சியைக் காணும்போது— மகிழ்ச்சிக் கண்ணீரும் நம்பிக்கையும் முந்திக்கொண்டு வரும்!

கண்ணகி பொறுத்திருந்து காத்தது வீண்போகவில்லை!

இதோ—கோவலன் மீண்டும் அவளிடம் வருகிறான்; இன்பவாழ்வைக் காண—இல்லம் காண!

மீண்டும் அவர்கள் இல்லம் ஒளிபெறும்; மகிழ்ச்சி துள்ளும்!

மீண்டும் மகிழ்ச்சிப் பிணைப்பும்; இணைப்பும்; இனிமைச் சிரிப்பும் தோன்றும்; ஒளியிழந்து கிடந்த மாளிகையில்—இருளும், மிரளும் தனிமையும் சூழ்ந்த மாளிகையில் மீண்டும் ஒளி!

இதோ கோவலன் வந்துவிட்டான்—காதல் எனும் மணி விளக்கேற்ற!

கண்ணீர் இனித் தேவையில்லை கண்ணகி! கடும் வேதனை இனியில்லை! புன் சிரிப்புக்காட்டு; புவிமகிழச் சிரித்திடு! ஆனந்தம் மேலிட—ஆடிடு நடனம்!

யாரை நீ இழந்தாயோ—அவனை நீ பெற்றுவிட்டாய்! தனிமையில்—கொடுமையில் இனியும் நீ இருக்கவேண்டியதில்லை. இதோ வந்துவிட்டான் கோவலன்.

—இத்தகைய நம்பிக்கையோடும்—நல்லுணர்வோடும்—ஏன்—ஆனந்தக் களிப்பிலும் கோவலனின் வருகையை நாம் வரவேற்கிறோம். ஆனால்...!

புகழ்மிகு புலவராம் இளங்கோவடிகள் நம்மையும்—கண்ணகி கோவலனையும்—மகிழ்ச்சி திரும்பிய புது வாழ்விற்கு இட்டுச் செல்லவில்லை. ரத்தக் கண்ணீர் வடிக்கும் காட்சிக்கு நம்மை அழைத்துச் செல்கிறார்.

கோவலன் தலை கொய்யப்பட்டபோது – கடுங்கோபம் கொண்டெழுந்த கண்ணகியைச் சித்தரித்த கருணைநிதி, உணர்ச்சி இமயத்திற்கு மேலும் மேலும் எழுகிறார்.

எந்தப் பெண்தான்–தன் கணவனின் சாவைத் தாங்கிடமுடியும்? எந்தப் பெண்தான்–தன் கொழுநனுக்கு இழைத்திட்ட கொடுமையை–இழிவைத் தாங்கிடமுடியும்?

இதோ-கோவலன் தலையிழந்து–தவருகக் குற்றம் சாட்டப்பட்டு–அவசரத்தில் நீதி வழங்கப்பட்டு–கல்லாக்களிமகன் ஒருவனால் கொல்லப்பட்டுக் கிடக்கிறான்.

ஆனால், ஆதரவற்ற ஒரு பெண்ணான கண்ணகியால் என்ன செய்யமுடியும்? இச்செயலுக்கு அரசர்குடிப் பிறந்த மன்னனே பொறுப்பு!

செயல் தவறானது; ஆனால் செய்தவன் சாதாரண மனிதனல்ல; கடும் வலியும்–கற்றறிந்த நெஞ்சும் கொண்ட பாண்டியன் உத்திரவிட்டு நிகழ்ந்த செயல் இது!

ஏன்? எப்படி?

இக்கேள்விகள் கண்ணகி முன் எழுந்தன; அவளது கோபக்கனல் அனைவரையும் உலுக்கிவிடுகிறது! அவள், இழந்ததை நினைத்து வருந்திட – வாளாயிருக்க மறுத்தாள்!

கோவலன் மீது பழிப் பெயர் ஏறிட அனுமதிக்க மறுத்தாள்! ''இல்லை! இல்லை! இந் நிலத்தில் நீதி நிலைத்திட வேண்டும்! நீதி-அதை நான்பெற்றே தீருவேன்!'' — இடி முழக்கமென முழங்கினாள். கொலு மண்டபம் நோக்கி நடைபோட்டாள், நீதி கேட்டுப் பெற!

தனது வாதங்களை முன் வைத்தாள் கண்ணகி! அவளது எழுச்சி மிகு பேச்சையும் - எச்சரிக்கையையும் மு. க. எடுத்துரைக்கும்போது மயிர்க்கூச்செறிகிறது.

கண்ணகியோடு தாமும் சேர்ந்து அவள் காட்டும் சினத்திலும் – பழிப்பிலும், குற்றம் சாட்டுதலிலும், எழுச்சியிலும் பங்கு கொண்டு பாராளும் மன்னன் முன் வாதாட வேண்டும் என்ற உணர்வை - உள்ளத்து எழுச்சியை அந்தக் காட்சி உருவாக்கி விடுகிறது.

வெடிக்கிறது எரிமலை - கொந்தளிக்கிறது கடல் - கூந்தல் மலர் இழந்த கைம் பெண் நீதி தேவதையாக மாறுகிறாள்.

"மன்னனு! நீ? ஏ! பாண்டியனே!

மன்னனும் நீயல்ல; வளநாடும் உன்னுடையதல்ல!"

- என்று முழங்குகிறாள் பத்தினித் தெய்வம். அனைத்தும் அடங்கி - ஆத்திரம் வெளிப்படுகிறது!

இத்தகு காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால் கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி கொண்டுள்ளார், தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

"பேசுங்கள் — கொவ்வைக் கனிவாய் திறந்து பேசுங்கள் அத்தான். ஒருமுறை பேசுங்கள் அத்தான். உங்கள் கண்ணகி வந்திருக்கிறேன் பேசுங்கள், அத்தான் பேசுங்கள் — உங்கள் கண்ணகி வந்திருக்கிறேன்!"

கண்ணீர் கடலென ஓட அவள் புலம்புகிறாள், புலம்புகிறாள்! ஆனால் பதில் ஏதும் இல்லை! கோவலன் கூடாகி விட்டான்.

"நீங்கள் பேசவேண்டாம்! உங்களுக்காக இந்த உலகத்தையே பேசச் செய்கிறேன்."

—என்று கூறிய கண்ணகி உலகத்தையே பேசவைத்தாள்; அவள் காலத்து உலகை மட்டுமல்ல; நிகழப்போகும் காலத்து உலகை யெல்லாம் பேசவைத்தாள்!

நூல் முழுவதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்பிற்குத் தேவையான செழுஞ் சொல்லோட்டத்தை — சீரிய — அழகு அமைப்பை உருவாக்கித் தருகிறார்.

மு. கருணாநிதியின் இந் நாடகமே ஒரு சிலம்பு! இளங்கோவடிகளின் தங்கம் அதில் இருக்கிறது, இந்தப் புகழ்மிக்க எழுத்தாளரின் (கருணாநிதியின்) ஆற்றலும் இதில் அபரிமிதமான அளவுக்கு இருக்கிறது.

சிலப்பதிகாரம் - காலத்தையும் கடந்த கருத்தமைதி கொண்டது. அதன் போதனை - தமிழ்நாட்டில் மட்டும் முடங்கிக்கிடப்பதல்ல!

அது - வையகம் முழுமைக்கும் உரிய பாடம்! இத்தகைய உயர்ந்த தரமுள்ள காவியம், உலகமா காவியங்களில் ஒன்றெனக் கருதப்பட வேண்டும்.

இந்நாடக நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது இக்காலத்தின் தேவையாகும். இதற்குப் பொறுப்பான ஆசிரியர் நமது போற்றுதலுக்கும் பாராட்டிற்கு முரியவர். திரு. டி. ஜி. நாராயணசாமி நூலின் கருத்தழகிற்கும், கருணாநிதியின் நடை யழகிற்கும் ஏற்ப மொழிபெயர்த்துள்ளார்.

இந்நாடக நூலை வெளிக் கொணர்வதன் மூலம் தம்பி கருணாநிதி தமிழ் இலக்கி யத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்.

இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டுவந்ததன் மூலம், சிலப்பதிகாரம் வழியாய் இளங்கோவடிகள் தந்த உணர்வும் - உயர்ந்த செய்தியும், தமிழகத்தைவிடப் பெரிதான உலகிற்குப் பரவ வழி ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பரந்த உலகிற்கு நாம் ஏதாவது உன்னதப் பொருளைத் தரமுடியும்.- எனில் அது நமது தமிழ்க் காவியங்களே! - ஐம்பெருங் காப்பியங்களே! அதிலும் அரிதாய்ப் புகழ் ஒளிவிடும் சிலப்பதிகாரமே!

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் நீண்ட நாள் நினைப்பை - தேவையை நிறைவேற்றுகிறது. இந் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பை வரவேற்பதில் நான் பெருமகிழ்வடைகிறேன்!

ஐயிரண்டு திசையிலும், நமதருமைத் தமிழ் நகர் தந்த மலர்க்குலத்தின் மணம் பரவி நிலவிடுக!

கீர்த்தி மிக்கது தமிழகம் - என்பதை உலகம் உணர்ந்திடட்டும்!

வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

அன்பன்,

அண்ணாதுரை.

[அறிஞர் அண்ணா அவர்கள் கருணாநிதியின் 'சிலப்பதிகார நாடகம்' ஆங்கில மொழிபெயர்ப்பு நூலுக்கு வழங்கியுள்ள முன்னுரையின் தமிழாக்கம் இது.]

நூலாசிரியர் கலைஞர் மு. கருணாநிதி மூன்னுரை

பூம்புகார் - இதுதான் இன்றையப் பூம்புகார் - எத்தனையோ கடற்கரைகளில் அலைகள் பாடும் கீதத்தைக் கேட்டிருக்கிறோம். ஆனால் இந்தக் காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் மோதுகின்ற அலைகள் எழுப்புகின்ற சோக கீதம், நம்மை எங்கேயோ ஒரு உலகத்துக்கு இழுத்துச் செல்லுகின்றது. வற்றுத இன்பம் கொழிக்கின்ற வரலாற்று உலகம். தேன்மாரி பொழிகின்ற தீந்தமிழ் இலக்கிய உலகம்.

காவிரியாறும் கடலும் முத்தமிட்டுக் கொள்ளும் இந்த இடத்திலேதான் அழகுத் திரு நகராம் பூம்புகார்ப் பட்டினம் இருந்தது.

பட்டினப்பாக்கம் – மருவூர்ப்பாக்கம் – நாளங்காடி எனப் பிரிக்கப்பட்டிருந்த பூம்புகாரின் முப்பகுதிகள் – திருமாவளவன் கரிகால் சோழனுக்கு அவந்திமன்னன் பரிசாக அளித்த தோரணவாயில் – வச்சிரநாட்டு அரசன் காணிக்கையாகத் தந்த முத்துப்பந்தர் – மகத தேசத்து வேந்தன், கப்பமாக அளித்த பட்டிமண்டபம் அத்தனையும் இன்று கடலுக்கடியில் மூழ்கிக் கிடக்கின்றன.

ஆனால், பூம்புகார் நகரத்துப் புகழும் பெயரும் யாராலும் மூழ்க அடிக்கப்பட முடியாதவை.

சேர இளவல் – செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகள் இயற்றிய 'சிலப்பதிகாரம்' உள்ளவரையில் பூம்புகாரின் புகழும், மதுரையின் மாண்பும், வஞ்சியின் வீரமும் பொதுவாகத் தமிழகத்தின் சிறப்பும் தாழாது - தாழாது!

தமிழ்த்துறவி இளங்கோவடிகள் சித்தரித்த கண்ணகியும் கோவலனும் கனி மொழியாள் மாதவியும் நீதிக்கு உயிர்தந்த நெடுஞ்செழியப் பாண்டியனும் இமயம்

சென்று கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர்ந்த வீர செங்குட்டுவனும் நம்மைப் பார்த்துத் தமிழரின் புகழை எத்தனை முறை பாடினாலும் தெவிட்டாது தெவிட்டாது என உரைக்கிறார்கள். அந்த உணர்வே இந்த நாடகக் காப்பியம்!

தமிழ்மீதுள்ள அன்பால் – பற்றால் – பாசத்தால் – தமிழ்காத்துத் தமிழரின் நலங் காக்கும் தொண்டர்க்குத் தொண்டனாகிய நான்;

மணங்கமழும் தமிழே!
மனங்கவரும் தாயே!
இன்ப மொழியே!
அன்பு விழியே!
உயிரான தமிழே! உலகில்
உயர்வான மொழியே!
உனைப் போற்றிப் புகழ்வதன்றி
வேறுபணி எனக்கிலையே

என்ற உற்சாக மிகுதியால் இந்த முயற்சியில் ஈடுபட்டேன்.

தமிழர்க்கு ஒரு நீண்ட கால வரலாறு உண்டு. அவர்களின் ஆணை கடல்கடந்து சென்றதுண்டு. அவர்களின் அன்பு உறவு கொண்ட நாடுகள் பல உண்டு. சிலப்பதிகாரம் உணர்ச்சிமிக்க கதையோட்டம் கொண்டது மட்டுமல்ல; விரிவான தமிழக வரலாற்று நூலுமாகும்.

சிலப்பதிகாரக் கதாபாத்திரங்கள் கண்ணகி – மாதவி – கோவலன் ஆகியோரின் பிறப்பிடமான பூம்புகார் நகரம்;

நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி.

என்று 'பட்டினப்பாலை' சிறப்பிக்குமளவுக்கு வெளிநாட்டு வாணிபத் தொடர்புகொண்ட துறைமுகப் பட்டினமாகும். அதனைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டிருந்த சோழ வேந்தர்களில் திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் புகழ்மிக்க பேரரசனுவான். இந்தக் கரிகாலனின் காலம் கி. மு. 60 முதல் கி. மு. 10 வரை என்பதாகத் தமிழ் வரலாற்றுச் சான்றோர் குறிப்பிடுகின்றனர். கரிகால் பெருவளத்தானுக்கு ''குராப் பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன்'' என்ற ஒரு பெயருமுண்டு. இந்தப் பெயர் அவன் மறைந்த பிறகு இடப்பட்டதாகும். இவன் 'திருவிடைக் கழி' அல்லது 'குராப் பள்ளி' என்னும் இடத்தில் உயிர் நீத்ததால் அப்பெயர் பெற்றான். இவனைப் பற்றிய புறப்பாட்டு ஒன்றைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் எனும் புலவர் அந்தப் பாட்டில் பாண்டிய மன்னன் ஒருவனையும் இணைத்துப் பாடியிருக்கிறார். அந்த மன்னனின் பெயர் பெருவழுதி. இவன் ''வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி'' என்று அழைக்கப்பட்டான்; மறைந்த பிறகு!

''நீ அறந் தங்கும் உறையூரின் கண் அரசன்; இவனோ தமிழ் குலுங்கும் மதுரையில் குளிர்ந்த செங்கோலையுடைய வேந்தன்! நீ, தண்புனல் காவிரிக்கு உரியவன்; இவனோ போரின்கண் மாட்சிமைப்பட்ட பாண்டியர் குடியில் ஏறு போன்றவன்! பொதிகைமலைச் சந்தனமும் திரைகடல் முத்தும் மும்முரசமும் கொண்டவன்! நீவிர் இரு பெருந்

தெய்வங்கள் ஒருங்கு நின்றுற்போல் காட்சி தருகின்றீர்! இன்றுபோல் என்றும் நிலைத்திடுக நுமது நட்பு! வென்று வென்று போர்க்களத்தில் மேம்படுக உமது வேல்! புலி, கயல் பொறித்து உண் வெற்றியைப் பிற நாட்டுக் குன்றுகளில் செதுக்கிடுவீராக!''

புறம் ஐம்பத்தெட்டாவது பாடலில் இந்த அழகிய கருத்தினைத் தந்து காரிக் கண்ணனுர், சோழன் கரிகாலனையும், பாண்டியன் பெருவழுதியையும் ஒரு சேர வாழ்த்துகிறுர்.

இதனைக்கொண்டு கரிகாலன் காலத்துப் பாண்டியன் பெருவழுதியென்று முடிவு கட்டுகிறோம். கரிகாலன் காலமோ கி. மு. 60 முதல் கி. மு. 10 வரையில்.

அந்தக் காலத்திலேதான் ரோமாபுரியில் அகஸ்டஸ் சீசர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்திருக்கிறுன். அதாவது கி. மு. 39 முதல் கி. பி. 14 வரையில்!

இந்தக் காலக் கணக்கை ஆராய்வதிலிருந்து அகஸ்டஸ் சீசருடன் நட்புறவு கொண்டு தூதுவரை அனுப்பிவைத்த பாண்டியன், பெருவழுதியாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியவர்களாகிறோம்.

ரோமாபுரிக்கும், தென்னகத்திற்கும் இந்தக் காலத்திற்கு முன்பே வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டு இரு நாட்டுக்காரர்களும் அளவளாவி மகிழ்ந்தனர். கரிகாலனும், பெருவழுதிப் பாண்டியனும் மகுடம் புனைந்த பிறகு ரோமாபுரித் தொடர்பு வேகமாகத் தழைத்து வளரலாயிற்று. அகஸ்டஸ் சீசர் காலத்தில் ஒங்கி எழுந்த அந்த உறவு பல ஆண்டு காலம் நீடித்தது. நீரோ மன்னனின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு தான் அந்த உறவு சிறிது சிறிதாகத் தேய்ந்து மாய்ந்தது என்று கூறலாம்.

தமிழகமும் ரோமும் கொண்டிருந்த தொடர்புகளுக்குச் சான்று பகரும் வகையில் புதை பொருள் ஆராய்ச்சிகள் துணை நிற்கின்றன!

கிரேக்கரையும் ரோமானியரையும் யவனர்கள் என்ற பெயரால் அழைத்து, அந்த யவனர்களைத் தங்கள் அரண்மனைகளில் காவல் வீரர்களாக வைத்திருந்தனர் தமிழ் மன்னர்கள் என்பதற்கு இலக்கியங்கள் சாட்சி கூறுகின்றன. ''கடிமதில் வாயிற் காவலிற் சிறந்த – அடல்வாள் யவனர்'' என்ற சிலப்பதிகாரப் பாட்டு தக்க எடுத்துக் காட்டாகும்.

நக்கீரனுர் பாடிய ஐம்பத்தாருவது புறப் பாட்டில் ''யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்'' எனக் காணும் வரி, யவனர்கள் தமிழகத்தில் மது வகைகளைக் கொணர்ந்து விற்றுவந்தனர் என்பதை உணர்த்துவதாகும்.

தென்னகத்திலிருந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் மிக முக்கியமானது மிளகு! அலாரிக் என்பவன் ஒரு காலத்தில் ரோமை வெற்றி கண்டபோது இழப்பு ஈட்டுத் தொகையில் மூவாயிரம் ''பவுண்டு'' தமிழ்நாட்டு மிளகும் தரவேண்டுமென்று உடன்படிக்கை செய்து கொண்டானும்.

முசிறிக்குத் தெற்காக இருக்கும் குளச்சல் என்னுமிடத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மூழ்கி எடுத்த முத்துக்களும் ரோமுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.

டாலமி என்பவன், ரோமுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் ஒன்றுக ''காபெரிஸ்'' துறைமுகம் என்ற ஒரு பெயரையும் எழுதிக் காட்டுகிறுன். காவிரிப்பூம்பட்டினத்தையே அவ்வாறு அழைத்திருக்கக் கூடுமெனக் கூறுவர் அறிஞர். அவன் ''புடோக்கி'' என்று ஒரு துறைமுகத்தைக் குறிப்பிடுகிறுன். அது அநேகமாகப் புதுவையாக இருக்க வேண்டுமென்று கூறுகிறுர்கள். பாண்டி நாட்டுக் கொற்கைப்

பெருந்துறைக்கு அருகில் முத்துக்களும், சங்குகளும் மிக அதிகமாகக் கிடைத்து, அவைகள் உலகில் எல்லாப் பகுதியினராலும் பாராட்டப்பெற்றன.

கொற்கை முத்துக்கு ஈடு இணை இல்லை யென்பதை,

"மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்து"

...என்ற அகப்பாட்டு அழகுற விளக்குகிறது.

முத்தும், நுண்ணிய பருத்தி ஆடைகளும், எலி மயிராலும், பட்டாலும் நெய்யப்பட்ட உடைகளும், ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து குதிரைகளும், மது வகைகளும், கண்ணுடிச் சாமான்களும் கொற்கைப் பெருந்துறையில் வந்து இறங்கிய வண்ணமிருந்தன.

அழகான கப்பல்களில் தங்கத்தை ஏற்றிக்கொண்டு யவனர்கள் வருவார்களாம். பிறகு மிளகை ஏற்றிக்கொண்டு திரும்புவார்களாம். முசிறித்துறை முழுவதும் அந்தக் கப்பல்களின் பேரொலி கேட்கும் என்று சங்க இலக்கியங்கள் பெருமை பேசுகின்றன.

புகார் துறைமுகத்தில் எல்லா நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும் மாலுமிகளும் வந்திறங்குவார்கள்; அவர்கள் எல்லோரும் ஒரே இனத்தவர்போல ஒற்றுமையாகப் பழகி வாழ்வார்கள் - என்று தமிழிலக்கியம் கூறுகிறது. யவனர்கள் பலர் தமிழ் மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்ற செய்தி யொன்றே இருசாராரிடையிருந்த நல்லெண்ணத்தை விளக்கும் கண்ணுடியாகும்.

இத்துணை வரலாற்றுச் சிறப்பு - வாணிபச் சிறப்பு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு - எதிர் காலத்துக்குப் பயன்படும் வகையில் இழையோடும் ஒரு கதையினூடே பழந்தமிழகத்துப் பழக்க வழக்கம் பண்பாடு அரசியல் முறை கலைத்திறன் அனைத்தையும் விளக்கிய பெருமை இளங்கோவடிகளைச் சேரும்.

சிலப்பதிகாரக் கதை, தமிழ் நாட்டில் எத்தனையோ புதிய கதைகளுக்கு அடிப்படையாக அமைந்துதவியிருக்கிறது. அதன் இலக்கிய நயம் - கலை அம்சம் - வரலாற்றுச் செழுமை - பாத்திரங்களின் மாண்பு - இவைகளையெல்லாம் முற்றிலும் புறக்கணித்து விட்டுத் தமிழகத்து நாடக மேடைகளில் - திரையரங்குகளில் முரண்பட்ட வகையில் சிலப்பதிகாரக் கதையை உருவாக்கி நடித்து வந்தனர்.

கண்ணகி — கர்ணகி ஆனாள்.
மாதவி — மாதகியானாள்; ஏன்
பாதகியும் ஆனாள்.
கோவலன்; கோவிலன் ஆனான்—
மாசாத்துவான் — மாச்சோட்டான் செட்டியென்றும்
மாநாய்கன் — மாணிக்கன் செட்டியென்றும் மாற்றப்பட்டனர்.

அது கண்டு சிலப்பதிகாரம் உணர்ந்தோர் புழுங்கித் துடித்தனர்.

மூலக் கதையின் ஆசிரியர் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டுவது போன்ற மாற்றங்களும் – அவரால் படைக்கப்பட்ட பாத்திரங்களின் பண்பு கெடாமல் தரப்படுகிற உருவகமும் – மறுக்கத்தக்கன அல்ல. காலத்திற்கேற்ற சில மாற்றங்களைக் கதையின் நோக்கம் கெடாதவாறு அமைப்பதும் தவறல்ல. மூலக் கதை ஆசிரியர் விட்ட கருத்துக்களையோ, காட்டத் தவறிய காரணங்களையோ, அடிப்படைக்குக் குந்தகமின்றிப் புகுத்திடுவதும் குற்றமல்ல.

இந்த நோக்கத்துடன் நான், சில மாறுதல்களைச், சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக்கும் இந்த முயற்சியில் கையாண்டிருக்கிறேன்.

எடுத்துக் காட்டுகளாகச் சில:-

* மாதவி, கூனியிடம் ஒரு மாலையைக் கொடுத்து, வீதியிலே நின்று விலை கூறச் சொல்லி, அதை வாங்கக்கூடியவனைத் தான் மணந்து கொள்வதாக நிபந்தனை விதிக்கிறாள். இதில் நான் சிறு குறை கண்டேன். கோவலனைப் போன்ற கலைத் திறனும் அழகுங்கொண்ட ஒரு வாலிபனிடம் உள்ளத்தைப் பறி கொடுக்கக் கூடிய மாதவி, மாலையை வாங்குகிற யாரோ ஒருவனுக்கு - (அவன் கூன்-குருடு-கிழடு யாராக இருந்தாலும்) மாலையிடுவது என்ற நிபந்தனை பொருத்தமாகத் தெரியவில்லை. அதனால்; மாலையை மையமாக வைத்து மண நிபந்தனை விதிக்கும் வரையில் இளங்கோவடிகளுடன் ஒத்துப் போய்—பிற்பகுதியை நாடகத்திற்கேற்றவாறு சுவையான நிகழ்ச்சி யொன்றாக ஆக்கிக் கொண்டேன். அந்த நிகழ்ச்சியில் வரும் 'கிரேக்கக் கிழவன்' பாத்திர வாயிலாகப், பழந் தமிழகத்திற்கும் கிரேக்கத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கவும் முற்பட்டேன்.

* மாலையை வாங்கிய கோவலன் மாதவி வீட்டுக்குப் போய்விடுகிறான் என்பது சிலப்பதிகாரம். அவன் கண்ணகியின் பால் கொண்ட அன்பு அவ்வளவு விரைவிலும் எளிதிலும் திடீரென முறிந்துவிடக் கூடியதாகத் தோன்றவில்லை. "மலையிடைப் பிறவா மணியே! அலையிடைப் பிறவா அமிழ்தே!" என் றெல்லாம் கண்ணகியிடம் காதல் காவியம் பாடியவன் அவ்வளவு எளிதில் அவளை மறப்பது இயலுமோ? என்ற கேள்விக் கணை தாக்கிற்று. அதனால் நான் செய்துள்ள மாற்றம், கோவலன் கண்ணகியின் பால் கொண்டிருந்த அன்பினைப் புலப்படுத்தவும், கண்ணகியின் மாண்பினை மேலும் உயர்த்திக் காட்டவும் பயன்படுவதாக எண்ணினேன்.

* கோவலனைக் கண்ணகியிடம் சென்று வருமாறு மாதவியே வலியுறுத்தி அனுப்புவதும் அதற்கிணங்கக் கோவலன் செல்வதும், மாதவியின் நல் உள்ளத்தை விளக்குவதற்கு இளங்கோவடிகளுக்குத் துணைபுரியும் மாற்றமேயாகும்.

* மாதவியோ பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைகொண்டு கோவலனைத் தேடியவள் அல்லள். அவன்மீது மயங்கியிருப்பவளும் அல்லள். ஆனால் பொருள் எல்லாம் இழந்து கோவலன் வறியனாகிறான். இது எவ்வாறு என் றெழுந்த என் ஐயத்திற்கு விடைபகரவே புதிய நிகழ்ச்சி உருவாயிற்று. மாதவிக்குத் தெரியாமல் அவள் இல்லத்தார் கோவலனின் செல்வத்தைக் கண்ணகி வாயிலாகப் பெறுகின்றனர். அதனை அறிந்த மாதவி, அந்தப் பொருளை யெல்லாம் கோவலனின் தாய் தந்தையரிடம் திரும்பச் சேர்க்கிறாள்; இது ஒருமாற்றம்; மாதவியின் பண்பை மேலும் உயர்த்தும் மாற்றம்.

* சிலம்பு திருடியவர் பொற்கொல்லர் என்று ஒத்துக்கொள்ளாதது; கதையைக் கெடுக்காமல் காலத்திற்கேற்பச் செய்த மாற்றம்.

* நெடுஞ்செழியப் பாண்டியன் புறப்பாடல் எழுதியதை அடிகள் குறிக்காமல் விட்டுள்ளார்! அதனை நான் குறித்துள்ளேன்.

* கானல் வரியில் இளங்கோவடிகளின் கதையமைப்பில் வரும் திருப்பத்திற்கு வலிவூட்டும் வகையில் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

* சிலம்பு, வளையல், காதணி இவைகளை ஒற்றையாக விற்றுப் யாரும் வாங்குவது கடினம். அதனால் கோவலன் இரண்டு சிலம்புகளையுந்தான் விற்பதற்கு எடுத்துப் போயிருக்கவேண்டும். அப்படி இரு சிலம்புடன் சென்றிருந்தால் அவன்மீது பழியே வந்திருக்காது. கதையின் உச்சக்கட்டம் உருவாகியிருக்காது. கண்ணகியின் கனல் வடிவைக் கண்டிருக்கமுடியாது. அதனால் இளங்கோவடிகள், கோவலன் ஒற்றைச் சிலம்புடன் புறப்பட்டதாகக் கூறுகிறார். இங்கு நான் அதற்கான காரணத்தைக் கூறி, அடிகளார் உருவாக்கிய நிகழ்ச்சிக்கு மேலும் உரமூட்டியிருப்பதாகக் கருதுகிறேன். கண்ணகி, இரண்டு சிலம்புகளையுந்தான் கழற்றித்தர முனைகிறாள். ஆனால் கோவலன் ஒற்றைச்சிலம்பு போதுமென்கிறான். ஏன்? அதனை விளக்கிட ஒரு மாற்றம்!

இப்படிச் செய்துள்ள மாற்றங்களும், இணைப்புக்களும் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக ஆக்குவதில் பெரிதும் துணைபுரிந்திருக்கின்றன.

இந்த நாடகம் தமிழிலே மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பரவிட மொழி பெயர்த்துதவிய நண்பர் டி. ஜி. நாராயணசாமி அவர்களுக்கும், அச்சியற்றிய பி. என். கே. மற்றும் ஐடியல் அச்சகத்தார்க்கும், ஓவியர்கள் அமுதன், விஜயா ஆகியோர்க்கும், புகைப்படங்கள் உதவிய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் திரு. நாகசாமி அவர்கட்கும், அஞ்சுகம் வெளியீட்டார்க்கும், உடனிருந்து ஒத்துழைத்த அருமைத் தோழர் ஆனந்தம் மற்றும் கோபாலசாமி, தினகரன் ஆகியோர்க்கும் என் நன்றி.

மதிப்புரை வழங்கி இந்நூலுக்கு மகுடம் புனைந்த என்னருந்தலைவர் — தமிழக முதல்வர் — பேரறிஞர் **அண்ணா** அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கம்.

அன்புள்ள,



காட்சி - 1

வஞ்சி மூதூரில் முரசறைதல்

[சேர நாட்டுத் தலை நகரான வஞ்சி மூதூரில் இளவரசன் செங்குட்டுவன் பிறந்த நாள் விழாவுக்கான அறிவிப்பு!...ஆனையின் மீது முரசறைவோன் அமர்ந்திருக்கின்றான். ஆனையை அழகுபடுத்தியிருக்கும் நெடிய ஆடையில் வில் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் முகத்தில் தொங்கும் வேலைப்பாடமைந்த துகில் மீதும் வில் சின்னம் காணப்படுகிறது. அசைந்தாடி வரும் ஆனை வஞ்சித் தலைநகரின் வீதிகளிலே புதிய எழுச்சியைத் தோற்றுவிக்கிறது. முரசறைவோன் செய்தியை முழக்குகிறான் பூரிப்போடு!]

முரசறைவோன்: வாழ்க தமிழ்! வெல்க தமிழகம்! இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க இமயம் சென்று விற்கொடி நாட்டிய வீரர் பெருந்தகை சேரர் தலைவர் நெடுஞ் சேரலாதர் அன்புத் திருமகனும் ஆற்றல் மிகு வீரனும் செங்குட்டுவன் பிறந்த நாள் விழாவை இன்று சேர மண்டிலமெங்கும் சிறப்புறக் கொண்டாடக் கொட்டுவோம், கொட்டுவோம் முரசம்! வாழ்க இளவரசன் செங்குட்டுவன்! வாழ்க சேரர் தரணி! வாழ்க செந்தமிழர் தாயகம்!

[முரசு முழங்குகிறது]

காட்சி - 2

செங்குட்டுவன் பிறந்தநாள் விழா

வஞ்சி

[செங்குட்டுவனின் தனி மாடம். அவனை அழகு படுத்திக் கொண்டிருக்கிறாள் அவன் துணைவி வேண்மாள்.]

செங்குட்டுவன்: வேண்மாள்! விழாக்கோலம் பூணச் செய்து என்னைக் கொலு மண்டபத்திற்கு அனுப்புகிறாயே, இதுபோலவே போர்க் கோலம் பூணச் செய்து களத்திற்கு வழி அனுப்ப வேண்டிய காலமும் வருமல்லவா?

வேண்மாள்: பிறகென்ன; விழுப்புண் பெறுதவர்கள் வீரர்கள் அல்லவே! களத்திலே ஏற்படும் காயங்களை ஆற்றுவதற்கு என் உதட்டிலே வைத்திருக்கிறேன் மருந்து!

செங்கு: கண்ணே! ஆண்டுதோறும் பிறந்த நாள் விழா நமக்கு மாத்திரம் வருகிறது...

வேண்: நமக்கொன்று பிறக்கவில்லை என்கிறீர்களா?...இன்று கொலு மண்டபத்திற்கு வரும் நிமித்திகனிடம் ஆரூடம் கேளுங்களேன்; எப்போது நீங்கள் தந்தையாவீர்கள் என்று!

[அப்போது மகிழ்ச்சியுடன் இளங்கோ நுழைகிறான்]

இளங்கோ: ஆரூடமா? நிமித்திகனிடமா? அவன் பொய்யுரைகளை நீங்களும் நம்புகிறீர்களா அண்ணி?

செங்கு: [புன்னகை தவழ] இளங்கோ?

இளங்: விழாவுக்கு நேரமாகிறது அண்ணா! புறப்படுங்கள்!

செங்கு: நான் முன்பே தயார்! உன் அண்ணி தான் மெருகு கொடுத்துக் கொண்டேயிருக்கிறாள் அலங்காரத்துக்கு!

இளங்: அண்ணி! விடை கொடுத்து அனுப்புங்கள் அண்ணனுக்கு! நான் வாயிற்புறம் காத்திருக்கிறேன், அண்ணா!

செங்கு: இரு இரு இளங்கோ! நானும் வருகிறேன்! குறும்புக்காரா!...வேண்மாள்!...

["வருகிறேன்" என்பதை விழியால் உணர்த்திவிட்டுத் தம்பியுடன் செங்குட்டுவன் தனி மாடத்தை விட்டு வெளியேறும் காட்சியை வேண்மாள் பார்த்தவாறு மகிழ்ச்சிப் பெருமூச்சு விடுகிறாள்.]

காட்சி - 3

விழாவும் விளைவும்

சேரன் அரண்மனை

[பிறந்த நாள் விழா நடைபெறும் கொலுமண்டபம் மிக்க அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. வேந்தன் நெடுஞ் சேரலாதனும் அரசி நற்சோணையும் அமர்ந்திருக்கிறார்கள் அரியாசனத்தில்! வில்லேந்திய வீரர்குல மங்கையரின் கூத்து நடைபெறுகிறது. செங்குட்டுவனும் இளங் கோவும் மண்டபத்தில் நுழைந்திடும்போது, கூத்தாடும் பாவையர், அவர்களை எதிர்கொண் டழைத்து அரசர் இருக்கையிடம் அழைத்துச் செல்கிறார்கள். இருவரும் பெற்றோரை வணங்கி அருகே அமர்கிறார்கள். தொடர்ந்த கூத்து முடிகிறது. நெடுஞ்சேர லாதன் எழுந்து வாழ்த் துரையாற்றுகிறான்]

நெடுஞ்சேரலாதன்: அவை யத்துப் பெருமக்காள்! சேர நன்னாட்டின் செழிப்பையும் புகழையும் பெருக்கிடும் ஆற் றல் பெற்ற செங்குட்டுவனை மகனைப் பெற்றதை எண்ணி எண்ணி என் மனம் துள்ளு கிறது இன்று! தம்பியுடை யான் படைக்கஞ்சான் எனும் பழமொழிக்கேற்ப இளங் கோவை இசையோனைப் பெற்ற என்னருஞ் செல்வனை வாழ்த்துகிறேன், இந்த நன் னாளில்! விரைவில் செங்குட்டு வன் முடிசூடி செங்கோல் ஏந்தி, தமிழ் அறம் வளர்ப் பான் என்றும்...அந்நாள் அண்மையில் அமையுமென் றும் அறிவிக்கின்றேன்...

அவையோர்: வாழ்க செங்குட் டுவன்! செங்குட்டுவன் வாழ்க!!

[நிமித்திகன் குறும்புச் சிரிப்புடன் எழுகிறான்]

நிமித்திகன்: வாழ்க செங்குட்டுவன்! வாழ்க எதிர்கால மன்னர் இளங்கோ!!

சேரலாதன்: என்ன? நிமித்திகரே! என்ன கூறுகிறீர்?...

நிமித்திகன்: நான் கூறவில்லை அரசே! ஊழ்வினை அப்படித்தான் கூறுகிறது! முடிபுனையும் உரிமை மூத்தமகன் செங்குட்டுவனுக்குத் தான் உண்டெனினும்... விதிபுனையும் கதையோ வேறுக இருக்கிறது! இளையவன் இளங்கோ தான் சேர மண்டிலத்தை ஆளுவானும்...

சேரலாதன்: [வியப்புடன்] என்ன?...

அவையோர்: மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டமா?

[செங்குட்டுவன் முகம் மாறுகிறது. அதை இளங்கோ கவனிக்காமல் இல்லை.]

இளங்: இல்லை! இல்லை!! என் அண்ணனே ஆளப் பிறந்தவர்!

சேரலாதன்: இளங்கோ! நிமித்திகர் வாக்குப் பொய்க்காது!

இளங்: பொய்க் காது படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது!... இது உண்மைக் காது!...அவர் ஆடங்கேட்டுக் கலங்காது!...

நிமித்திகன்: ஊழ்வினையை மாற்ற இயலாது இளங்கோ!...

இளங்: ஏன் இயலாது? "ஊழையும் உப்பக்கம் காண்குவர் உலிவின்றித் தாழாது உஞற்றுபவர்" எனக் குறள் கூறும் கருத்தை உண்மையாக்குகிறேன்! நீர் கூறும் விதியை மதியால் வெல்லுகிறேன்!

நிமித்திகன்: மூத்தவன் இராமன் காடாள வேண்டும்; இளையவன் பரதன் நாடாள வேண்டும் என்ற விதியை யாராவது மாற்ற முடிந்ததா?

இளங்: பரதனும் ஆளவில்லை; இராமனும் ஆளவில்லை; பதினான்கு வருடம் பாதரட்சை அல்லவா நாடாண்டது! நிமித்திகரே,பழைய இதிகாசங்களைக்காட்டி விதியை நிலைநிறுத்த எண்ணுதீர்! இதோ...நான் படைக்கிறேன் புதிய இதிகாசம்! உமது ஆடுடத்தை அறிவால் வெல்லுகிறேன்...அண்ணனையே அரசுக்குரியவராக்குகிறேன்! ஏற்றுக் கொள்ளும் நிமித்திகரே எனது அறைகூவலை! உமது கூற்று தூள்! தூள்!! தூளாகப் போகிறது பாரும்!...வருகிறேன்!...

[இளங்கோ மண்டபத்தை விட்டு வெளியேறுகிறான். அவை, வியப்பில் ஆழ்கிறது. அரசரும் அரசியும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்கிறார்கள், வேதனையோடு!]

காட்சி - 4

இளங்கோ துறவு

சேரலாதன் மாளிகை

[ஆங்கு சேரலாதன், நற்சோணை, செங்குட்டுவன், வேண்மாள் இருக்கிறார்கள். செங்குட்டுவன் முகம் இப்போது ஒளியோடும் தெளிவோடும் இருக்கிறது.]

செங்குட்டு : இளங்கோ யார்? என் தம்பி தானே! நான் ஒருவன் பிறக்கவில்லை யென்று கருதிக்கொண்டு அவனுக்கு முடி சூட்டுங்களேன்!...

சேரலாதன் : மூத்தவனிருக்கும்போது இளைய வனுக்கு...முறையல்லவே செங்குட்டுவா!

செங்குட்டு : இறைவனருள் அப்படித்தான் இருப்பதாக நிமித்திகர் கூறிவிட்டாரே! தந்தையே! தம்பிக்கே நாடு உரியதாகட்டும்! விதி வழி அவனுக்கு வரவேண்டியதை நான் தடை செய்யமாட்டேன்! படைத் தள பதியாக இருந்து நாட்டையும் தம்பியையும் பாதுகாப்பேன்....

["அண்ணா" என மென்மையான குரல் கேட்டு அனைவரும் திரும்புகிறார்கள்.

இளங்கோ, இளங்கோவடிகளாக மாறி நிற்கிறான்!

துறவுக் கோலம்!...]

செங்கு : தம்பி! இது என்ன கோலம்?

இளங் : தூய்மையுள்ளங் கொண்ட அண்ண னுக்காகத் தம்பி ஏற்றுக்கொண்ட துறவுக் கோலம்! இளங்கோ அரசனல்ல; இளங்கோ அடிகள்!...

நற்சோணை : இளங்கோ, என் ஆசை மகனே, உன்னை இப்படிக் காண வேண்டுமென்பது விதியா?



இளங் : விதி இதுவல்ல தாயே! நான் வேந்தனாக வேண்டுமென்பது விதி!
இது, மதி!

செங்கு : தம்பி! வேண்டாம் இந்தக் கோலம்! ஏற்றுக்கொள் சேரப் பேரரசை! என் உள்ளமெல்லாம் நிறைந்தவனே! எழில்மிகு வஞ்சித்தலைநகரின் வீதிகளில் ஏறுபோல் பவனி வரவேண்டிய நீ, துறவிக் கோலம் பூண்டு, துடிக்க விடாதே எங்களை!...

சேரலாதன் : அன்புத் திருமகனே! உன் தியாக உள்ளத்தைத் திறந்து காட்டிவிட்டாய்! தென்னகத்து மண்ணிலெல்லாம் புகழ் மணக்கச் செய்து விட்டாய்! ஆலை பெற்று வளர்த்த எங்களைப் பித்தராக்குவது முறையா என எண்ணிப் பார்!...

நற்சோணை : ஆமாம் கண்ணே! இளங்கோ! ஈட்டிகள் ஆயிரத்தை எங்கள் இதயத்தில் பாய்ச்சாதே!

[வேண்மாள் கண்ணீர் விட்டவாறு தூணில் சாய்ந்திருக்கிறாள்.]

அதோ பார்; உன் அண்ணி கண்ணீர் விடுவதை.....அப்பா துடிப்பதை.....அண்ணன் கலங்குவதை.....பெற்றவயிறு புலம்புவதைக் கேளடா மகனே, கேள்!

இளங் : யாரும் என்னைத் தடுக்க வேண்டாம்!...விதியை வெல்வதற்கு நான் தேர்ந்தெடுத்த முடிவு இது! விதி விட்ட வழியில் நடப்போமென்று இருந்தால் வேதனைக் களமாகி விடும் தமிழ்நாடு! விதிப்படியே வெற்றி தோல்வி யென எண்ணியிருந்தால் ...அப்பா இமயத்தின் நெற்றியிலே விற் கொடியைப் பறக்கவிட்டிருக்க முடியாது! விதியை எதிர்க்கிறேன்...மேலும் மேலும் எதிர்க்கிறேன்! எடுத்த எடுப்பிலேயே எனக்குக் கிடைத்த வெற்றி இது! என்னை வாழ்த்தி வழியனுப்புங்கள்!...

செங்கு : இளங்கோ! எங்கு போகிறாய்?

இளங் : இன்பத் தமிழகத்தை விட்டு எங்கும் போய்விட மாட்டேன். தலைநகருக்கு அருகேயுள்ள குணவாயிற் கோட்டத்திலேயே தங்கப் போகிறேன்! அடிக்கடி அனைவரையும் சந்திக்கிறேன்.

அப்பா!...

அம்மா!...

அண்ணி!...

அண்ணு!...

வருகிறேன்.....

[அனைவரது விழிகளிலும் நீர் பெருகி வழிகிறது]

[இளங்கோவடிகள் வெளியேறுகிறார் அரண்மனையைத் துறந்து.]

அரண்மனை வாயிற்புறம்.

[இளங்கோவடிகள் வெளியேறுவதைக் காவலர் அனைவரும் கண்கலங்க கவனிக்கிறார்கள்! நாவலர், பாவலர் அனைவருமே அமைதி நிறைந்த சோகத்தோடு மரம்போல் நிற்கிறார்கள். பெண்டிரும், பாலரும், உழவரும், வணிகரும் சித்திர உருவங்களாய் அசையாது நின்று விடுகின்றார்கள். மாளிகையிலிருந்து அன்னை, தந்தை, அண்ணன், அண்ணி காணுகிறார்கள். இளங்கோவடிகள் வெகு தொலைவில் போய் விடுகிறார்.....

எதிரே நிமித்திகன் வருகிறான்.]

நிமித்திகன் : யார்? இளங்கோவா?... என்ன இது?...

இளங்கோ : நீர் பெருமையோடு பேசினீரே அந்த விதியின் வீழ்ச்சி! மதியின் வெற்றி! தோல்வி கண்ட முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு உமது தொழிலையே துறந்து விட்டு என்னைத் தொடர்ந்து வாரும்.

நிமித் : ஆ!...

இளங் : ஏன் முடியாதா?...உள்ளம் பக்குவ மடையவில்லையா? ஊழ்வினை தடுக்கிறதா? வருகிறேன்!

[நிமித்திகன் வியப்போடு தனக்குள்]

நிமித் : இப்போது பிழைப்பே போனது; இனி மாளிகைப் பக்கம் போனால் மானம் போய் விடும். தோல்வி! பெரிய தோல்வி!!

[திகைத்து நிற்கும் நிமித்திகனோடு காட்சி முடிகிறது.]



காவிரி — கடலில் கலக்கும் காட்சி

சேரநாடு

[பேரியாற்றங்கரையை அடுத்துள்ள மலை வளமிக்க பகுதி. தினைப்புனங்களில் கிளிகளை ஓட்டுகின்ற ஒலியும் ஆலோலப் பாடல்களும்... யானைகளும் புலிகளும் நிறைந்த இடமென் பதை விளக்கும் சூழ்நிலைகள்...மலைப்பகுதியில் மலைமகளிரும் ஆடவரும் அவரவர்கள் தலையி லும் தோளிலும் பல பொருள்களைச் சுமந்து நடக்கின்றனர். கூடைகள், மூட்டைகள், மான்குட்டிகள், புலிக்குட்டிகள், குரங்குகள்... இப்படிப் பலவகைப் பரிசுப் பொருள்களுடன் பயணம் நடத்துகின்றனர்.

வரும் வழியில், மலையடிவாரத்தில் நின்று கொண்டிருந்த இளங்கோவடிகளை வணங்கு கின்றனர்.]

இளங்கோவடிகள் : மலைவாழ் தமிழர்களே!... பேரியாற்றங்கரை நோக்கிப் போவதுபோல் தெரிகிறதே...எதற்காகவோ?

ஒருவன் : அடிகளாருக்குத் தெரியாதா? தங் கள் அண்ணன் செங்குட்டுவ மன்னரும் புலவர் சாத்தனரும் இயற்கை வளங் காண் பதற்காகப் பேரியாற்றங்கரைக்கு வந்திருக் கிறார்கள். அவர்களுக்குப் பரிசாக இவை களை...

இளங் : அப்படியா! நானும் வருகிறேன்.

[அனைவரும் பயணத்தைத் தொடருகிறார்கள்.]

[பேரியாற்றங்கரை : இரண்டு யானைகள் போர் நடத்துவதை செங்குட்டுவன், வேண்மாள், சாத்தனர் மூவரும் வேடிக்கை பார்க்கிறார்கள்...

அப்போது—

இளங்கோவும் மலைமாந்தரும் வருகிறார்கள்.]

செங்கு : தம்பி!

இளங் : அண்ணா!

[தழுவிக் கொள்கிறார்கள்]

இளங் : அண்ணி...சுகந்தானே!

[அவள் தலையசைக்கிறாள்]

இளங் : சாத்தனரே...தாங்களும்...

சாத்தனர் : மலைவளங் காணவந்தேன். மன வளம் மிகுந்த தங்களைக் காணும் வாய்ப்பும் பெற்றேன்.

இளங் : அண்ணா! இந்தப் பகுதி மலை மக்கள் தங்களுக்குப் பரிசுப் பொருள்கள் அளிக்க விரும்புகிறார்கள்.

செங்கு : அப்படியா!...

மலைமக்கள் : வணக்கம்!...

[அனைவரும் வணங்குதல்]

யானைத்தந்தம், தேன், சந்தனக் கட்டை, தேங்காய், கரும்பு, மாங்கனி, பலாக்கனி, வாழைக்குலை, சிங்கக்குட்டி, புலிக்குட்டி, யானைக்குட்டி, குறும்பாடு, மான்குட்டி, கீரிப் பிள்ளை, தோகைமயில், புனுகுபூனை, கிளி ஆகிய பரிசுப் பொருள்களை எதிரே குவிக்கின்றனர்.]

செங்கு: மிக்க நன்றி! மகிழ்ச்சி!! தமிழ்நாட்டு வளங்கள் என் றென்றும் வாழ்க! அன்புள்ள வர்களே...இந்தப் பகுதியில் ஏதாவது புதுமை உண்டா?

ஒருவன் : உண்டு, உண்டு! கணவனை இழந்த ஒரு பெண்... கண்ணகி என்ற பெயருடை யவள்... அதோ அந்த வேங்கை மரத்து நிழலிலேயே பல நாட் கள் நின்றுகொண்டிருந்தாள்... கணவன் வருவான் வருவான்

என்று கண் கலங்கக் கூறிக் கொண்டிருந் தாள்...திடீரென ஒருநாள் அவளைக் காண வில்லை...எங்கு போனாளோ, தெரியாது. கணவன்தான், இறந்தவன் திரும்பி வந்தானே...அல்லது அவள்தான் அவ னோடு போய்விட்டாளோ...தெரியாது எங்க ளுக்கு! அவளைப்போல ஒரு பெண்ணை இது வரை நாங்கள் கண்டதில்லை....

செங்கு : கண்ணகி...!

சாத்த : ஆமாம்! கற்புக்கரசி கண்ணகி! நல்ல நேரத்தில் மலைமக்கள் நினைவூட்டினர் கள்...நான் அவள் கதையைச் சொல்லு கிறேன். இளங்கோவடிகள் அதை ஒரு காவியமாக எழுதட்டும்! கண்ணகி காவியம் சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பெருமை களைச் சொல்லும் ஒப்பற்ற கருவூலமாக அமையட்டும்...! முடியுடை மூவேந்தர்க்கும் இக்கதை உரியதாகையால் இளங்கோ வடிகள் இதனை எழுதுவதே பொருத்தமாகும்.

செங்கு : சொல்லுங்கள் புலவரே! இளங்கோ அதற்கு இலக்கியம் படைப்பான்! என்ன தம்பி! சரிதானே?

இளங் : சரியண்ணே!

சாத்தனாரே சொல்லுங்கள், கண்ணகி கதையை...

[சாத்தனார் அங்குள்ள புலிக்குட்டியைத் தடவிக் கொடுத்தவாறு கதையைத் துவங்கு கிறார்...]

[இளங்கோவடிகள் எழுதத் தொடங்கு கிறார்.]

[புலிக் கொடி பறக்கிறது. சாத்தனாரின் குரலுடன் காட்சி மாறுகிறது....

பூம்புகார்ப் பட்டினக் காட்சிகள் துவங்கு கின்றன.]

சாத்த : காவிரி யாறும், கடலும் முத்தமிட்டுக் கொள்ளும் இடத்தில் அமைந்துள்ள அழகுத் திருநகராம் பூம்புகார் பட்டினம்! புலிக் கொடியின்கீழ் ஆட்சி நடாத்தும் சோழப் பேரரசின் தனிப்பெருந் தலைநகரம்!...

காட்சி - 6

பூம்புகார்ப் பொற்றேர்

[சாத்தனார் குரலுடன் பூம்புகார்க் காட்சிகள்]

சாத்தனார் : காவிரியாறும் கடலும் முத்தமிட்டுக் கொள்ளும் இடத்தில் அமைந்துள்ள அழகுத் திருநகராம் பூம்புகார்ப் பட்டினம்! புலிக் கொடியின்கீழ் ஆட்சி நடாத்தும் சோழப் பேரரசின் தனிப்பெருந் தலைநகரம்— ஆங்கே ஆண்டுதோறும் நடைபெறும் இந்திர விழா பெருமை வாய்ந்த திருவிழா!

கடற்கோளுக்கு முன், கடாரம் வரை பரந்து கிடந்த சோழ மண்டிலத்து மூதாதையொருவன் - இந்திரன் என்னும் பழந்தமிழன் - அவன் நிறுவாக நடைபெறும் எழுச்சி விழா!

அவ் விழாவில் நகர மாந்தரும் வெளிநாட்டு வணிகப் பெருமக்களும் பங்கு கொண்டு ஆடிப்பாடி மகிழ்வர்...

பட்டினப் பாக்கம், மருவூர்ப் பாக்கம், நாளங்காடி எனப் பிரிக்கப்பட்டுள்ள பூம்புகாரின் முப் பகுதிகளிலும் மகிழ்ச்சிக் கூத்து!... கரிகால் சோழனுக்கு அவந்தி மன்னன் பரிசாக அளித்த தோரண வாயில்!...

வச்சிர நாட்டு மன்னன் காணிக்கையாகத் தந்த முத்துப் பந்தல்! மகத தேசத்து வேந்தன் கப்பமாக அளித்த பட்டிமண்டபம்! எங்கெங்கும் இன்பப் பெருவெள்ளம்! வீதிகளில் பூரண கும்பம்! பொற் பலகை! பாவை விளக்கு!—எங்கும் விழாக் கோலம்! தெருவெல்லாம் தமிழ் முழக்கம்!

ஆடல், பாடல்

"ஞாயிறு போற்றுதும்.....
"திங்களைப் போற்றுதும்.....
"மாமழை போற்றுதும்.....

[சிலப்பதிகாரப் பாடலும், மகளிர் ஆட்டமும்]

[சாத்தனரின் குரல் தொடர்கிறது]

சாத்: பூரிப்பு மலிந்த அந்த நன்னாளில் புகார்ப் பட்டினத்துக் கடற்கரையின் வெண் மணல் திட்டின் மீது தன்னந்தனியே நின்று, அலைகடலை ஆவலோடு எதிர்நோக்குகிறாள்; ..மழை நிகர் கொடை வள்ளல் மாநாய்கன் திருச்செல்வி ஈகைவான் கொடியன்னாள் இணையற்ற பேரழகி...போதிலார் திருவினாள் .....

மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்—பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ!

[கண்ணகி நிற்கின்ற காட்சி! அவள் கடல் மீது விழியோட்டுகிறாள். கப்பல் வருங் காட்சி! கண்ணகி முகத்தில் உற்சாகம். வந்த கப்பல் சிறிது தொலைவில் நிற்கிறது...கப்பலில் இருந்தோர் சிறுசிறு படகுகளில் ஏறி, கரைப் பக்கம் வருகின்றனர். அவர்களில் கிரேக்கர், ரோமானியர் முதலிய வெளிநாட்டினரும் இருக்கின்றனர்.

கோவலனும் அவனுடன் ஒரு கிரேக்கத்துக் கிழவனும் வருகிறார்கள், சிறிய படகொன்றில் ஏறிக்கொண்டு!

படகு வருவதைக் கண்டு கண்ணகி துடிப்புடன் படகு நோக்கிக் கடலில் நடக்கிறாள்; அலைகளைப் பொருட்படுத்தாமல்!

கோவலனும் படகில் இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறான்!

கிரேக்கக் கிழவன்: யார் அந்தப் பெண்? இவ்வளவு துணிவோடு கடலில் சதிராடுகிறாள்?

கோவலன்: அவள்தான் என் வாழ்க்கைத் துணைவி; கண்ணகி!

கி. கிழவன்: ஆகா...உன் துணைவி! தமிழ் நாட்டு முத்துக்களைப் போலவே தமிழ்நாட்டுப் பெண்களும் அழகிகள் தான்! ஆகா! எங்கள் கிரேக்க நாடு இதுவரை இப்படியொரு அழகியைப் படைக்கவே இல்லை!

[கண்ணகி கடலில் மூழ்கி மூழ்கிப் படகிடம் வருகிறாள். கோவலனும், துடிப்போடு படகிலிருந்து குதித்துக் கண்ணகியிடம் வருகிறான். இருவரும் அலைகளால் தழுவப்பட்டுத் தாங்களும் தழுவிக் கொள்கிறார்கள்.]

கோவ: கண்ணகி!

கண் : எத்தனை நாளத்தான் எண்ணியிருந் தீர்கள்; என்னையிப்படி தனியே தவிக்கவிட!

கோவ : தனிமை எனக்கு மாத்திரம் இனிமை யாகவா இருந்தது! தங்கமே...இந்தா... உனக்காகக் கிரேக்கத்தில்வாங்கிவந்த பரிசு!

[தந்தத்தால் ஆன ஒரு அழகிய பொரு ளைத் தருகிறான்]

கண் : தமிழ்நாட்டு யானைத் தந்தம் கிரேக்கக் கலைஞர்கள் கைபட்டு எவ்வளவு நேர்த்தி யாக மாறி இருக்கிறது, அத்தான்!

கோவ : தமிழகத்து மயில் தோகைகளை ஆடையாக உடுத்திக்கொண்டு, கலாப நடைபயிலும், கட்டழகிகள் ஏராளம், கிரேக் கத்தில்! தமிழ்நாட்டு முத்துக்களை வைத் திருப்பவர்கள் தான் கிரேக்க, ரோமானிய, எகிப்து தேசங்களில் பெருமைக் குரியவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

கண் : அப்படியா?

கோவ : அவர்களுக்குத் தெரியவில்லை தமிழ் நாட்டில் முத்து, பவளம், மயில், அகில் இவை எல்லாவற்றையும் விட, விலை மதிப் பற்ற பொருள் ஒன்று இருப்பது...

கண் : என்னத்தான் அது? எனக்கே தெரிய வில்லை?

கோவ : என் கண்ணகிதான் அந்த ஒப்பற்ற பொருள்! உளி படாச் சிற்பம்! உயிராடும் ஓவியம்! வெளி நாடுகளில் நான் உலாவும் போதெல்லாம் "கண்ணகி பிறந்த தமிழ் நாடு" என்று என் காதல் நெஞ்சம் கவிதை பாடிக்கொண்டே யிருக்கும்.

கண் : அத்தான், இனிமேல் என்னைப் பிரிய மாட்டீர்களே?

கோவ : தமிழை விட்டுச் சுவை பிரியுமா?

கண் : வேற்று மொழி குறுக்கிட்டால்?

கோவ : வீண் கனவு! விழிக்கு ஒளி போல— வீணைக்கு நாதம் போல–விண்ணுக்கு நிலவு போல...என்றென்றும் உன் அருகிருப்பேன்.

கண் : விண்ணுக்கு நிலவா? அத்தான்! அது, கண்ணுக்குத் தெரியாது ஒருநாள்! காரிருள்! அமாவாசை அதன்பேர்! வேண்டாமத்தான் அதுபோல!

கோவ : கண்ணகி! கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதிக் காமன் செயல் எழுதித் தீர்ந்த முகம்—தேன் சிந்தும் திங்கள் முகம்—மறப்பேனா கண்ணே! வா! விழாக் கோலம் பூணுவோம்! பிரிந்திருந்த நாட்களில் அனுபவித்த துன்பத்திற்கு இந்த ஒருநாளில் முடிவுகாண்போம், வா!...

[அப்போது, படகிலிருந்து மெதுவாக இறங்கிக் கிரேக்கக் கிழவர் அருகே வந்து]

கி. கிழவர் : என்ன கோவலா! என்னை மறந்தே விட்டாய் போலிருக்கிறது?...

கோவலன் : மன்னிக்கவும்!..

[கண்ணகிக்கு அவரை அறிமுகப் படுத்து கிறான்]

கண்ணகி : இவர் கிரேக்கத்தில் பெரிய செல்வந்தர்!

[கண்ணகி வணங்குதல்]

தலைசிறந்த வாணிப வேந்தர்! அங்கே நமது பொருள்கள் இவர் மூலமாகத்தான் விற்பனை யாகின்றன—பார்வைக்குக் கிழவரே தவிர— ஒரு வாலிபனுடைய குறும்பு அத்தனையும் இவருக்கு உண்டு!

கி. கிழவர் : இரு! இரு! என்ன அப்படிச் சொல்லி விட்டாய்?...என்னைப் பார்த்தால் கிழவனைக் காதா தெரிகிறது?.....தமிழ்ப் பெண்ணே! நீ சொல் நான் கிழவனா?

கண்ணகி : இல்லை தாத்தா!...

கி. கிழவர் : ஆங்...அப்படிச் சொல்! கோவல! தாத்தா என்றால் என்ன?

கோவலன் : ஆணழகர் என்று அர்த்தம்...

கி.கிழவர்: ஆங்...மகிழ்ச்சி...மகிழ்ச்சி பொருத் தம்...பொருத்தம்...

கோவலன்: என்னிடம்தான் கண்ணகி, இவர் தமிழே கற்றுக் கொள்கிறார்...

கண்ணகி : அப்படியானால் முத்தமிழில் இயல், இசை இரண்டும் தெரிந்திருக்கும்.

கி. கிழவர் : ஆங்...இயல்...இசை...தெரியும்! கூத்துதான் தெரியாது!...



கண் : அத்தான்; இந்திர விழா வையொட்டி, இன்று முத்துப் பந்தலில் மாதவியின் நடனம் இருக்கிறது...மூவருமே சென்று பார்க்கலாமே!...

கி. கிழவர் : நடனமென்றால் ?...

[நடனம் போல் அபிநயங் காட்டி]

கோவலன் : கூத்து!

காட்சி - 7

தலைக்கோடி மாதவி

முத்துப் பந்தல்

[மாதவியின் நடனம் நடைபெறுகிறது...

சோழ மன்னனும் அரச மரபினரும், மற்றும் அரண்மனை மகளிரும், வணிகப் பெருவேந்தர்களும், அமர்ந்திருக்கிறார்கள்.

மாதவியின் தாய் சித்ராபதியும், கூனியும், தோழி வசந்தமாலையும் மேடை முகப்பில் அமர்ந்திருக்கிறார்கள். கோவலன், கண்ணகி, கிரேக்கக் கிழவர் மூவரும் பந்தலில் நுழைந்து அவர்க்குரிய இருக்கைகளில் அமருகிறார்கள்.

அவையினரும் அரசர் முதலானவரும் வியப்பும், மகிழ்வும் அடையும் வண்ணம் மாதவியின் நடனம் நடைபெறுகிறது. கிரேக்கக் கிழவர் நடனங் கண்டு அயர்ந்து விடுகிறார்.]

[இடையே]

கிரேக்கக் கிழவர் : கோவலா! அது ஓவியமா?...சிலையா?...உயிருள்ள பெண்தானே?...

கோவலன் : வயதாகிப் பழுப்பேறிவிட்ட உங்கள் இருதயத்தில் கூட இளமையின் வசந்தத்தை எழுப்புகின்ற இவள் பெயர் மாதவியாம்—நான் கூட இன்று தான் முதன் முதலாகப் பார்க்கிறேன்!...

[ஆட்டம் தொடர்ந்து நடைபெற்று அவையினரின் பாராட்டுதலுடன் முடிவுபெறுகிறது.....

*

மாதவி மேடையினின்றும் இறங்கி வந்து சோழ மன்னனை வணங்கி நிற்கிறாள்...]

சோழன் : எண்ணும், எழுத்தும், இயல் ஐந்தும், பண் நான்கும்,
பண் நிறை கூத்துப் பதினென்றும்
—மண்ணின்மேல்
போக்கினள்; பூம்புகார்ப் பொற்றொடி
மாதவி, தன்
வாக்கினுள் ஆடரங்கின் வந்து!

[எனக் கூறி, சோழன், இலையாலும், பூவாலும் செய்யப்பட்ட ஒரு மாலையும்; தலைக்கோல் ஒன்றும், ஆயிரத் தெட்டு கழஞ்சு பொன் முடிப்பும் பரிசாக அளிக்கிறான். பின் சோழன் அதைவிட்டு அகலுகிறான்.]

(நாட்டியத் தலைவன் கையிலுள்ள கோலுக்குத் தலைக்கோல் என்று பெயர்.)

[சித்ராபதி, கூனியின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லுகிறாள்.....

கூனி, மாதவியிடமுள்ள மாலையைக் கையில் வாங்கிக்கொண்டு மேடைமீது நின்று .....]

கூனி : பெரியோர்களே! சித்ராபதியின் மகள் மாதவியின் கலைத் திறனை இதுவரை சுவைத்தீர்கள். மாதவியை வாழ்க்கைத் துணைவியாகப் பெறும் பாக்கியம் நமக்குக் கிடைக்காதா என்று எத்தனையோ பேர் காத்துக் கிடக்கிறார்கள்! அதற்காக இப்போது ஒரு சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!.



"பூம்புகார்" அகழ்வாராய்ச்சியில் கிடைத்த யானைச்சின்னம் பொறிக்கப்பட்ட கரிகாலன் காலத்துக் காசுகள்.



கி. கிழவர் : அப்படிச் சொல்! அப்படிச் சொல்!! சுயம் வரத்தில் என்ன செய்ய வேண்டும்?

நான் தயார்!.....

[எல்லோரும் சிரிப்பு]

கூனி : அரசரால் மாதவிக்குப் பரிசாக அளிக்கப்பட்ட இந்த மாலையை ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து வாங்குகிறவர்–அவளுக்குக் கணவனாகலாம்!...

[அவையில் ஒருவருக்கொருவர் "ஆயிரத்தெட்டுப் பொன்! ஏ, அப்பா!" எனப் பெரு மூச்சு விடுகின்றனர்.]

கி. கிழவர் : இதோ; ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன்!

[மேடையருகே ஓடுகிறான். சித்ராபதியும், கூனியும்...ஒருவருக் கொருவர் மகிழ்ச்சி!]

கி. கிழவர் : யாருக்கு நூற்று எட்டு? ஆசைப் பார் இளவெட்டு! எனக்கு அறுபத்தெட்டு முடிந்து நாள் எட்டு தான் ஆகிறது ஞாபகம் வைத்துக்கொள்!...

[கோவலனும் கண்ணகியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுதல்.]

வசந்த : அந்தோ! இந்தச் சபையில் ஆயிரத் தெட்டு பொன் தரக்கூடிய வாலிபர்கள் யாருமே இல்லையா?...கிளியை வளர்த்து இந்தக் கிழட்டுப் பூனை கையிலே கொடுப் பதா?...

நான் சொல்வதைக் கேளுங்கள்! மாதவி யின் சுயம்வரத்தை ஒத்தி வைத்து விடலாம்.

சித்ரா : உஸ்! பேசாமலிரு! இந்தச் சித்ராபதி வாக்குத் தவறமாட்டாள்! மாதவி திருமணம் செய்து கொள்ளத் தான் வேண்டும்.

வசந்த : அதை யார் மறுத்தார்கள்! ஆனால் யாரை?...

மாதவி : வசந்தமாலை? ...?...!...!

[தோழியிடம் திரும்பி வந்து]

வசந்த : [திகைப்புடன்] மாதவி!...

[மேடைக்கு வந்த கிழவர் பொன் முடிப்பை அவிழ்த்துக் கொட்டிய வாறு]

கி. கிழவர் : ம்! தமிழ் நாட்டு முத்து வாங்கக் கொண்டு வந்தேன். ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன்! இந்தா—இது இந்த மாலைக்காக அல்ல! மாதவிக்காக! கொடு மாலையை...

[மாதவி, திடுமென கூனியின் கையிலுள்ள மாலையைப் பிடுங்கிக்கொண்டு சித்ராபதியைத் தழுவியவாறு—"அம்மா" என விம்முகிறாள்.]

சித்ரா : மாதவி!...என்ன இது குழந்தை மாதிரி! கொடு மாலையை!...

வசந்த : ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன்னுக் காக.. இந்த நூற்று எட்டு வயதுக் கிழவனை மாதவி மணப்பதா?...

சித்ரா : இந்த மாலை வாங்கியவரை!

வசந்த : அப்படியானால், இவர் இந்த மாலையை வாங்காமல் நான் பார்த்துக்கொள் கிறேன்! ஐயா பெரியவரே!...தயவு செய்து எங்கள் மாதவியைக் காப்பாற்றுங்கள்!...

கி. கிழவர் : காப்பாற்று கிறேன் — வாழ்க்கை முழுதும் அவளை வைத்து நான் காப் பாற்றுகிறேன்; அதற்கு என்னிடமிருக்கிற பொருள் போதும்!

வசந்த : பொருள் போதும்! ஆனால் வயது போதாதே தங்களுக்கு! இன்னும் நாலு வருடமோ, ஐந்து வருடமோ?

சித்ரா : பேசாதே; வசந்தமாலை! மாதவி! வீண் பிடிவாதம் செய்யாதே! கொடுத்துவிடு மாலையை! ஒருவனையே மணந்து வாழ்வேன் என்று நீதான் சொன்னாய்; இப்போது நீயே என்னை அவமானப்படுத்துகிறாய்....

மாதவி : அம்மா...ஒருவரை மணந்து வாழ் வேன் என்றேன்—இப்போது கன்னிப் பெண் ணாகவே காலங் கழிக்கத் தீர்மானித்து விட்டேனம்மா.

சித்ரா : உன் இஷ்டப்படி நாட்டியமாட என் னால் முடியாது!...

[கண்ணகி கோவலனிடம்]

கண் : ஐயோ, பாவம்; மாதவி!...அத்தான்! நீங்கள் தான் போய் அவனைக் காப்பாற்றுங் களேன்!

[மேடையில் கிழவரின் காலில் மாதவி விழுந்து]

மாதவி : பெரியவரே! என்னை மன்னித்து விடுங்கள்!

கி. கிழவர் : இதென்ன வேடிக்கை! ஆயிரத் தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து மாலையை வாங்குகிறவர் உன்னை அடையலாம் என்ரூர் கள்!...அதுவும் சபை நடுவில்! இப்போது மாறுவது என்ரூல்...எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!

[கோவலன் மேடைக்கு வந்து]

கோவ : பெரியவரே! மாலையும் வேண்டாம் மாதவியும் வேண்டாம்; வாருங்கள் போக லாம்.....

கி. கிழவர் : நன்ரூயிருக்கிறது கோவலா; உங்கள் தமிழ் நாட்டு நியாயம்!

கோவ : கிழவனுக்கு இளங் கிளி மாலையிடு வது தமிழ் நாட்டுப் பண்பல்ல!

கி. கிழவர் : பிறகேன் மாலை வாங்குகிறவர் மாதவியை அடையலாம் என்று கூற வேண்டும்?...

கோவ : மாலை வாங்கத் தகுதியுடையவன் மாதவியை அடையலாமென்பது அவள் தாயாரின் நிபந்தனை. மாதவியை அடை யத் தகுதியுடையவனே மாலையை வாங்கலா மென்பது என் தீர்ப்பு. வாருங்கள் போகலாம்.

கி. கிழவர் : முடியாது! என்னைத் தவிர வேறு யாரும் மாதவியை அடைய முடியாது!

கோவ : ஏன்?...

கி. கிழவர் : ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் தரக்கூடிய தகுதி வேறு யாருக்குமில்லை இங்கு!

கோவ : என்ன சொன்னீர்? தமிழகத்தின் தகுதி பற்றி இழித்துரைத்த முதல் மனிதனே நீர்தான். இதோ இதுபோல நூறு மாலை களை வாங்கக்கூடிய ஆற்றலும் செல்வமும் தமிழருக்குண்டு என்பதை மெய்ப்பிக்கிறேன் ...கொடு மாதவி மாலையை! ம்! இதோ ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் பெறுமான முள்ள முத்தாரம்!

[என மாதவி கையிலுள்ள மாலையைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்திலுள்ள முத்தா ரத்தை அவள் கையில் தருகிறான்.

கண்ணகி அதிர்ச்சி]

[கோவலன், மேடையினின்றும் இறங்கி கண்ணகி இருக்குமிடம் வந்து...]

கோவ : கண்ணகி, வா—போகலாம்!...

கண் : அத்தான்!...

கோவ : பயப்படாதே—வா!

[அவையும் கலைகிறது. கூட்டத்தோடு கூட்டமாகக் கிரேக்கக் கிழவரும் நழுவுகிறார். கூட்டத்தோடு கோவலன் – கண்ணகியும் வெளியேறுகிறார்கள்.]

[கோவலன் போய்விட்டது கண்ட மாதவி வசந்தமாலையிடம்]

மாதவி : வசந்தமாலை! அவர் மாலையை வாங்கிக்கொண்டு போய்விட்டாரே!

வசந்த : ஏன்? என்ன செய்ய வேண்டுமென் கிறாய்?...

சித்ரா : இது கூடவா புரியவில்லை? அவரை வீட்டுக்கு அழைத்துவரச் சொல்கிறாள்... ஏனம்மா மாதவி, அப்படித்தானே?...

[மாதவி நாணத்தால் தலைகுனிந்து வசந்த மாலையை நோக்குதல்]

காட்சி - 8

கண்ணகி இல்வாழ்வு

கோவலன் வீடு:—பள்ளியறை

[அழகான மஞ்சம். மஞ்சத்திலே மல்லிகை மலர்கள் பரப்பப் பட்டுள்ளன. பலகணி வழியே நிலவு! நிலவைச் சுற்றி விண் மீன்கள்! நில வொளியில் கோவலனும் கண்ணகியும்]

கண் : அத்தான்! முதலில் நான் பயந்தே விட்டேன். என் நெஞ்சில் நெருப்பு பட்டது போல் இருந்தது அந்த நிகழ்ச்சி.

கோவ : அந்த நெருக்கடியிலிருந்து மாத வியை விடுவிக்க அதைத் தவிர வேறு வழி யில்லாமல் போய்விட்டது.

கண் : பயத்திலே கூட என் இருதயத்தின் ஆழத்தில் கடல் முத்தைப் போல் நம்பிக்கை குவிந்து கிடந்தது அத்தான்!

கோவ : பெண்களே சந்தேகப் பிறவிகள். என் கண்ணகி மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

கண் : போங்களத்தான்; நான் உங்களைச் சந்தேகப் படவே மாட்டேன். நீங்கள் என் ஒருத்திக்கு மட்டுமே உரியவர்!

கோவ : ஆமாம் கண்ணகி! நீ யில்லாமல் என் வாழ்வுக்குச் சுவையே யில்லை!

கண் : ஈடு இணையற்ற என் இன்பப் புதை யலை இடையிலே வந்த மாதவி பறித்துக் கொண்டு போய்விடுவாளோ என நடுங் கினேன். "மாமுது பார்ப்பார் மறைவழி காட்டிடத் தீவலம் செய்து நிகழ்த்திய திருமணம்?? சக்தியற்றுப் போய்விடுமோ எனக் கலங்கினேன்!...

கோவ : கண்ணகி! அன்று, நில விதானத்து நித்திலப்பூம் பந்தலின்கீழ் நீயும் நானும் கரம் பிடித்தபோது நெஞ்சில் எழுந்த உறுதியை என்றும் தளர விடமாட்டேன்.

கண் : உண்மைதானே அத்தான்! என்னை மறக்க மாட்டீர்கள் அல்லவா?...

கோவ : மறக்காதது மட்டுமல்ல, மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!...என வர்ணித் துக் கொண்டே யிருப்பேன். நீ மலையிடைப் பிறவாமணி! அலையிடைப் பிறவா அமிழ்தம்! யாழிடைப் பிறவா இசை!...





கண் : அத்தான்!...

கோவ : கண்ணகி!...

[அப்போது தாழ்வாரத்தில் "கண்ணகி" என்ற குரல் கேட்கிறது. கண்ணகி, கோவலனைப் பிரிந்து, வெளியே செல்கிறாள்.]

[கண்ணகி, தாழ்வாரத்துக்கு வருகிறாள். அங்கே மாநாய்கனும், அவன் மனைவியும்–சோகமுகத்துடன் நிற்கிறார்கள்.]

தாய் : கண்ணகி!

[என ஓடிவந்து தழுவிக்கொண்டு]

கண்ணகி, என்னம்மா! உன் தலை எழுத்து இப்படியாகுமென்று நான் கனவுகூடக் காண வில்லையே!...

[வியப்புடன்]

கண் : அம்மா!!!

மாநாய்கள்: கண்ணகி, கவலைப்படாதே! எல்லாம் நன்மையாகவே முடியும்! நீயும் உன் கணவனும், இணைபிரியாமல் இல்லறம் நடத்துவீர்கள் என்றுதான் நேற்று வரையில் நம்பி யிருந்தேன்...நடுவே இப்படிப் புயல் கிளம்பும் என்று நினைக்கவே யில்லையம்மா!...

[மேலும் வியப்புடன்]

கண் : அப்பா!

[அதற்குள் மாசாத்துவானும் அவன் மனைவியும் வேகமாக வருகிறார்கள்]

[கோபமாக]

மாசாத் : கண்ணகி! எங்கே கோவலன்?

கண் : மாமா!...

மாநாய் : மாசாத்துவான்! பார்த்தீர்களா உங்கள் மகன் செய்த வேலையை! என் மகனை இப்படி வேதனை வடிவமாக்கி விட்டானே?

மாசாத் : மாநாய்கரே! கவலைப்படாதீர்! அவனுக்கு நான் பாடங்கற்பிக்கிறேன்.....

கண்ணகி! பயப்படாதே! இந்த மாசாத்துவானுக்கு மருமகளாக வாய்த்து; மனங் கலங்க உன்னை விடமாட்டேன்!...

கண் : மாமா! சொல்வதைக் கேளுங்கள்!... அவரைப் பற்றித் தவறுக எண்ணுதீர்கள்; அவர் என் தெய்வம்!

மாசாத் : உனக்குத் தெய்வம்; எனக்கு மகன்! ...என் பரம்பரைக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டு, அந்தக் கணிகை மாதவியை மணக்க நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்.

கண் : அவர் ஒன்றும் அவளை மணக்கப் போவதில்லை.

மாசாத் : மணக்கப் போவதில்லை; கற்புக் கனியை யுன்னைத் தாரமாக்கித் தனி வாழ்வு நடத்துவதற்கு வசதி தந்தால், பிணி போலத் தொத்துகின்றான் பிறிதோர் பக்கம்! நன்று! நன்று! இந்த நாச வேலைக்கு இப்போதே முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

கண் : அத்தை!...மாமா! உண்மை உணராமல்.....

அத்தை : உண்மைதான் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிகிறதே கண்ணகி! நீ கவலைப்படாதே யம்மா! கோவலனை உன் மாமா எப்படியும் அழைத்து வந்து விடுவார்!

தாய் : பார்த்தீர்களா! அழுதழுது முகமெல்லாம் வீங்கியிருக்கிறது என் பெண்ணுக்கு! இரண்டு கண்ணும் எப்படிச் சிவந்திருக்கிறது பாருங்கள்! கண்ணகி; இந்தக் கோலத்தில் உன்னைப் பார்க்கவா தவங்கிடந்து உன்னைப் பெற்றேன்....

[அழுகிறாள்!]



ஆண் : அம்மா!...

மாசாத் : ம்! இதோ போகிறேன்; இரண்டி லொன்று பார்த்துவிட்டு வருகிறேன்...

[உள்ளிருந்து சிரித்துக்கொண்டே வந்த வாறு]

கோவ : அப்பா! எங்கேயப்பா போகிறீர்கள்?

மாசாத் : யார்! நீயா?...கோவலா! நீ இங்கே தானு இருக்கிறாய்?

கோவ : ஏன் வேறு எங்கே போகவேண்டும்? [கண்ணகியிடம்]

மாசாத் : என்னம்மா இது; அப்படியானால் நான் கேள்விப்பட்டதெல்லாம் பொய்தானு?

கோவ : கேள்விப்பட்டது உண்மைதான், ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன்னுக்கு மாலை வாங்கிய வரையில்! கிளியைக் கிழவனிட மிருந்து காப்பாற்றிய படலம், அவ்வளவு தான்! அதற்கு மேல் நீங்கள் கேள்விப்பட் டிருந்தால் அது ஏதோ கோள் சொல்லும் கோட்டான்களின் வேலை!...

தாய் : கண்ணகி!

கண் : நீங்கள் எல்லோருந்தான் என்னைப் பேச விடாமல் வளைத்து விட்டீர்களே; வருத்தம் தெரிவிக்க!...

மாநாய்கன் : அப்படியானால்....

கோவ : காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட இல்லறம் இனிது நடைபெறு கிறது மாமா! கடைசி வரையில் கண்ணகி கண் கலங்காமல் பார்த்துக் கொள்ளும் கடமை எனக்கிருக்கிறது!...

மாசாத் : அவசரப்பட்டு விட்டோம் கோவலா!...இந்த நல்ல மகளைப் பெறுவ தற்கு இவன் தந்தை என்ன பாக்கியம் செய் தானோ என்று பார் முழுதும் என்னைப் பாராட்டிப் புகழும். அது போதும் மகனே, எனக்கு!

[தழுவிக் கொள்கிறார் கோவலனை]

கண்ணகியின் தாய் : கண்ணகி! இப்படி யொரு நல்ல குடும்பத்திற்கு மருமகளாகும் பாக்கியம் உன்னைத் தவிர வேறு யாருக் கம்மா கிடைக்கும்?

[கண்ணகி ஆனந்தக் கண்ணீர்]

காட்சி-9

புரியாவிடை தந்த பேதை

கண்ணகி-கோவலன்—கட்டில் அறை

[கண்ணகி கையில் மாலையுடன்! தீபம் எரிந்து கொண்டிருக்கிறது:

மாலையுடன் பாடிக் கொண்டே, மாலையைக் கோவலன் கழுத்தில் அணிவித்து, அவன் கால்களில் கரந்தொட்டு வணங்குகிறாள்.

கோவலன் அவளைத் தூக்கி நிறுத்தியவாறு,

"பெய்யெனப் பெய்யும் மழையே!
கொழுநனைத் தொழுதெழும் நேரிழையே!"

என்ற பொருளில் பாடுகிறான்...இருவரும் மெய்ம்மறந்து தங்கள் பாசத்தை வெளிப் படுத்துகிறார்கள்.

பாட்டு முடிகிறது...

கோவலன் தனியே சென்று வருத்தமாக அமருகிறான். கண்ணகி அருகே சென்று]

கண்: என்னத்தான்...ஏன்?

கோவ: ஊடல்!...

கண்: ஊடலா?...அப்படியென்றால்?...

கோவ: சரிதான் போ...ஊடல் என்றால் தெரியாதா?...திருக்குறள் இன்பத்துப் பாலிலேயே தலை சிறந்தது அது தானே...ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொள்வது; பிறகு சமாதானமாகி, சந்தோஷமாக இருப்பது.

கண்: வேண்டாம், வேண்டாம்; கோபிப்பானேன்; பிறகு சமாதானமாவானேன்?

கோவ: சமாதானம் ஆவதற்காகவே சண்டை போட்டுக் கொள்வதுதான் கண்ணகி; ஊடல்!...

கண்: அப்படியானால் இப்போது ஊடல் ஆரம்பமா?...

கோவ: இது ஒன்றும் ஊடல் இல்லை; கண்ணகி! உனக்குப் பிடிக்காத செய்தி யொன்று சொல்லப் போகிறேன்.

கண்: என்னத்தான் ?...

கோவ: உன்னைப் பிரிந்து செல்லும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது...

கண்: ஆ!

கோவ: ஆமாம்; நாளைக் காலையில் ரோமாபுரிப் பயணம்!

கண்: மறுபடியும் வெளிநாட்டுக்கா?. அத்தான்; விளையாடுகிறீர்களா?

கோவ: இல்லை கண்ணகி; ஐம்பதாயிரம் முத்துக்கள் அகஸ்டஸ் சீமானின் அரண்மனைக்குத் தேவையாம்...அதை ஏற்றிச் செல்ல வேண்டும்...நானே நேரில்!...

கண்: கடல் அலையில் கட்டுமரம் போல் தவிப்பதற்கோ பிறந்தேன், இல்லை; இந்தப் பயணத்தைத் தடுப்பதற்குத் துணிந்தேன்.

கோவ: தடை வேண்டாம்; தணல் வேண்டாம் உன் விழியில்! புனல் கடந்து ஒளி முத்து விற்று வந்தால், மடை திறந்த வெள்ளம் போல் பொற் காசு குவியும், தமிழர் வளத்தைத் தரணி அறியும். விடை கொடு பாவாய் - அத்துடன் விருந்தளிக்கும் உன் இதழ்க் கடையை இங்குக் கொடு!

கண்: முத்துச் சுமை ஏற்றிக் கத்து கடல் கீறிச் செல்கையிலே, குத்து விளக்கொன்றை இங்குச் செத்து மடிய விட்டுச் செல்கின்றேம்... என நினைப் பீரா அத்தான்?...

கோவ: நீங்கமாட்டேன் கண்ணே; உன்னை மறந்தாலன்றே நினைப்பதற்கு! கண்ணகி! மூச்சு வாங்குவதற்கும் விடுவதற்கும் நினைப்பை வைத்துக் கொள்வதில்லை! என் உயிர் மூச்சே! ஏதேதோ எண்ணுதே! நீயின்றி நானில்லை! நிலவின்றி வானில்லை!

கண்: விண் மீன்கள் படையெடுத்தால்?

கோவ: புலால் உண்ணேன்...

கண்: ரோம் நாடு – அழகிகள் வாழ் தேன் கூடாமே!...

கோவ: அங்கு நான் ஓர் முடவனையிருப்பேன். கொம்புத்தேன் தமிழகத்தில் உண்டென்று உன் கொய்யா இதழ் நினைத்து உறங்குவேன்.

கோவ: வருந்தாதே கண்ணகி... விடை கொடு; இந்த ஒருமுறை உன்னைப் பிரிந்து செல்ல! பிறகு என்றென்றும் அணுப் பொழுதும் உன்னைப் பிரியேன்...எங்கே; சிப்பியிலே விளையாத சிரிப்பு முத்தைக் காட்டிடுவாய்; என் சிந்தையிலே உறவாடும் செந்தமிழின் நலம் பாடித் திரும்புகிறேன்.

கண்: பிரிவு தரும் வேதனையால், பலாப் பழத்தின் தோல்மீது படுத்ததுபோல், புரள்வேன் அத்தான் பஞ்சணையில்!...

கோவ: பிரிந்தவர் கூடி விட்டால், பழத்துக்குள் இருக்கின்ற சுளைபோலச் சுவையேறும் செந்தமிழே!...



(சம்பாபதி கோயில் — பூம்புகார்)

கனவுக் கற்பனையில் உன் எழிலை உண்ணுவேன்.

கண்: உறங்குவீர்கள் நீங்கள்; அதனால் என்னைக் கனவில் உண்ணுவீர்கள் நீங்கள். கனவு தன்னில் உம்மைக் காணுகின்ற பாக்கியமும் எனக்குக் கிட்டாதே, அத்தான்!...

கோவ: ஏன் கண்ணகி?...

கண்: தூங்கினால் அல்லவா கனவு காண? நீங்களில்லையேல் என் விழிகளுக்கு உறக்கமேது?

கண்: என்னதான் சொன்னாலும்; என்னை எடுத்துப் பிரிவென்னும் தனல் மீது போடுதற்கே முயல்கின்றீர்!

[அழுகிறாள்]

கொல்லாமற் கொல்லாதீர் கண்ணாளா!...

கோவ: கண்முத்துச் சிந்தாதே கண்ணகி! எண்ணிரண்டு பதினாறு கிழமை; அதன் பின்னர் அகல்வதில்லை உனைவிட்டு என்றுமே!...

கண்: மெய்தானு அத்தான்...

கோவ: பிரியவில்லே...பிரியவில்லே...பிறகென்றும் பிரியவில்லே...

கண்: பிரியவில்லேயா?...பிரியமில்லேயா?...

கோவ: கண்ணகி! ஏன் உனக்கு இப்படிச் சந்தேகம்?...

கண்: அத்தான்!...

[கண்ணீர் வடிக்கிருள். துடைக்கிருன்...]

கோவ: கண்ணகி!...

[தெருக் கதவு தட்டப்படும் ஒலி கேட்கிறது...இருவரும் கவனித்தல்]

கோவ: நீ இரு! நான் பார்த்து வருகிறேன்.

[பள்ளியறை வாயிலைக் கடந்து, கூடத்தைத் தாண்டி, தெருக் கதவைத் திறக்கிருன் கோவலன். வசந்தமாலே வணங்கி நிற்கிருள்]

கோவ: யார்? மறுபடியும் வந்து விட்டாயா?

வசந்த: மன்னிக்க வேண்டும்! மாதவி உயிரையே அர்ப்பணிக்கத் தயாராகி விட்டாள்!

கோவ: நீ எந்த வகையில் கணே தொடுத்தாலும் பதில் ஒன்றேதான். மாதவியை மணப்பதற்காக நான் மாலேயை வாங்க வில்லே.

வசந்த: பிறகு? மாதவியைக் கொல்வதற்காக மாலேயை வாங்கினீர்களா?

கோவ: என்மீது தவறுதான்! அவளே அந்தக் கிரேக்கக்கிழவனிடமே ஒப்படைத்திருக்க வேண்டும்.

வசந்த: மாதவி கேட்கிருள், அழகில் குற்றமா, ஆடலில் குற்றமா, எதில் குற்றம் ஏன் வெறுக்கிறீர் என்று?

கோவ: யார் சொன்னது அப்படி? அவள் அழகுக்கும் ஆடலுக்கும் பொருத்தமான ஆண் மகன் இன்னும் இந்த உலகத்தில் பிறக்கவில்லே!

[கோவலன் தர்ம சங்கடத்தில் துடிக்கிருன். கண்ணகி வந்தவாறு...]

கண்: அத்தான்!

கோவ: மாதவியை மணக்க வேண்டுமாம் நான்...தூது வந்திருக்கிறார்கள்; முடியாது என்று கூறிவிட்டேன்!...

வசந்த: முடியாது என்பதையாவது நேரில் வந்து கூறி விடுங்கள்.

கண்: நீங்களே போய் நிலேமையை விளக்கிக் கூறினுல் அவள் மனத்துக்கும் ஒரு சாந்தி ஏற்படும் அல்லவா?...

கோவ: கண்ணகி!...

கண்: சீக்கிரம் திரும்பி விடுங்கள்! இதோ...

[என்று மேலங்கியை எடுத்து வந்து தருகிருள்...

அவன் காலணியைக் கொண்டு வந்து காலில் மாட்டி விடுகிருள்.]

கோவ: நான் போகவே தேவையில்லே; உன்னுல்தான் எல்லாம்...

கண்: மாதவி நல்ல பெண்! அவள் மனமும் நோகக் கூடாதல்லவா?... "நானே ஒரு நல்ல மணமகனேப் பார்த்து, திருமணம் செய்து வைக்கிறேன்" என்று கூறிவிட்டு, வாருங்கள்!

கோவ: சரி கண்ணகி; வரட்டுமா?

கண்: வரும் வரையில் நான் இங்கேயே நின்று கொண்டிருப்பேன்; சீக்கிரம் திரும்பி விடுங்கள்...

கோவ: சரி! வருகிறேன்...

கண்: சிறிது நேரம் பிரிவதற்கே முடியவில்லே. ...நாளே ரோமாபுரிக்கு எப்படி வழியனுப்பப் போகிறேன்!...

கோவ: வரட்டுமா?...

கண்: அத்தான்!...

கோவ: கண்ணகி!...

[பிரிகிருர்கள்]

[பல்லக்கு போன்ற அழகிய வேலேப் பாடமைந்த வண்டியில் கோவலன் ஏறிக்கொள்ளவே, வண்டி போகிறது...கண்ணகி பார்த்தவாறு நிற்கிருள்...]

காட்சி-10

தலையுரசிகண்ட வெற்றி

மாதவி இல்லம்

[கோவலன் வருகைக்காக இல்லம் அலங்கரிக்கப்படுகிறது, அவசர அவசரமாக...]

தெரு

[கோவலன் வரும் அழகிய வண்டி....

மாதவி வீட்டு வாயிலின் முற்புறத்தில் வண்டி நிற்கிறது.

கோவலன் வண்டியினின்றும் இறங்குகிறான்.

ஆடலழகிகள் எதிர்கொண்டு அழைக்கின்றனர்.

வீட்டுக்கும், முன் வாயிலுக்கும் இடையே உள்ள தோட்டத்துப் பாதையில் மிக உற்சாகமான வரவேற்புத் தரப்படுகிறது.

மாதவி ஓடிவந்து காலில் விழுந்து வணங்குகிறாள். பின், எழுந்து அவனை எதிர் கொண்டழைத்தவாறே அவன் முகத்தை விட்டுக் கண்ணைத் திருப்பாமல் செல்லுகிறாள்.

இரு புறமும் நடனமணிகள் தமது திறமையைக் காட்டுகின்றனர்...

வாயிற் படியண்டை செடியொன்றுக்கு ஊற்றிய தண்ணீர் உடைப்பெடுத்துக் குறுக்கே ஓடுவதைக் கண்ட மாதவி, அதில் கோவலன் கால்படக் கூடாதென்று, தன் தலையில் அணிந்துள்ள நீண்ட பட்டுச் சால்வையை எடுத்து, அந்தச் சிறு சேற்றுநீர் மீது விரிக்கிறாள்.

கோவலனும் அதில் கால் வைத்து நடக்கத் தயங்கி, பிறகு மாதவியின் முகத்தைப் பார்த்து, அவள் கெஞ்சுகிற கண்களுக்கு இரங்கி, பட்டு மீது கால் வைத்து நடக்கிறான்.

வாயிற்படியை மிதித்ததும் சித்ராபதியும், கூனியும் எதிர் வந்து ஆரத்தி எடுக்கிறார்கள்.

வசந்தமாலை கையில் வைத்திருந்த மாலையை மாதவி வாங்கி கோவலன் கழுத்தில் போட, அதை அவன் தானே பெற்றுக் கழுத்தில் போட்டுக் கொள்கிறான்.

நடனக் கூடத்திற்குக் கோவலன் அழைத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள சிறப்புமிக்க இருப்பிடத்தில் உட்கார வைக்கப்படுகிறான்.

கருத்தைக் கவர்கின்ற நடனங்கள் மாதவியின் தலைமையில் நடைபெறுகின்றன.

பெருங் கூட்டமென ஆடிக் கொண்டிருந்த பெண்கள் எப்படியோ ஒவ்வொருவராக அதை விட்டு நீங்கி விடுகின்றனர்.

நடனங்களில் கோவலன் மயங்கி அமர்ந் திருக்கிருன்.

ஆடலழகிகள் ஒவ்வொருவராகக் குறைந்து இறுதியில் மாதவி மட்டுமே ஆடிக் கொண்டிருக் கிருள்.

ஆடுகிருள்.

ஆடுகிருள்.

ஆடிக்கொண்டே இருக்கிருள். விரகதாபம், காதலில் ஏமாற்றம், கோவலன் தன்னை ஏற்றுக் கொள்ளாததால் ஏற்பட்ட விரக்தி, மிதமிஞ்சிய சோகம் அனைத்தும் கலந்த ஆட்டம் ஆடுகிருள்.

கோவலன் திகைப்பு.

அவள் மேலங்கியின் நுனி பட்டு அங்குள்ள கல்தூண்கள் கூட மத்தள ஓசை கிளப்பு கின்றன. பலகணியில் படர்ந்திருக்கும் பச்சைக் கொடியில் அவள் விரல் படுகிறது. அதிலே யாழ் ஓசை-வீணையின் நாதம் அதிர்கிறது! விரகதாபத்தால் கை வளை கழன்று கீழே "தொப்" என்று விழுகிறது. அதுவும் இசையாய் ஒலிக்கிறது.

உணர்ச்சிகள் அனைத்தும் பிறிட்டுக் கிளம்ப ஆடிக்கொண்டே இருக்கிருள். சோகம் உச்ச கட்டம் அடைகிறது. அப்பொழுதும் ஆடுகிருள்.

கோவலன் இதயம் படபடக்கிறது.

அந்த நடனக் கூடத்தில் ஒரே அமைதி.

அந்த அமைதியிலே கொடி போலத் துவள் கிருள் மாதவி.

தளைலில் விழுந்த புழு, துடித்து அடங்கி இறுதியில் மெதுவாக அசையுமல்லவா, உயிர் விடுவதற்கு; அதுபோல நெளிகிருள்.

ஆட்டம் நிற்கவில்லை...இதுபோல ஆடி யதே இல்லை.

"தடால்!"

மாதவி பேச்சு மூச்சற்ற நிலையில் தரையில் விழுந்து விட்டாள். கோவலன் "மாதவி" எனக் கதறி அவளைப் போய்த் தூக்குகிருன். அருகேயுள்ள தண்ணீரை எடுத்து முகத்தில் தெளிக்கிருன்.

பக்கத்தில் உள்ள பழத்தை அவசரமாகப் பிழிந்து பழச்சாறு தருகிருன், அவளுக்கு.

அவள் தலையைத் தன் மடியில் கிடத்திக் கொண்டு]

கோவலன்: மாதவி! மாதவி!!

[சிறிது நேரம் கழித்துக் கண் விழித்த மாதவி தாரை தாரையாகக் கண்ணீர் விடு கிருள்]

கோவ: மாதவி...மாதவி... அழாதே! ஏன் இப்படி நடனமாட வேண்டும்?

மாதவி: பிரபு! இதுதானே என் கடைசி ஆட்டம்!...

கோவ: ஏன் அப்படிச் சொல்லுகிருய்?...

மாதவி: என் கலைத் திறமை முழுவதையும் யாரிடம் காட்ட வேண்டுமோ அவரிடம் காட்டி விட்டுக் கடைசியாகக் கண்ணை மூடவே இந்தத் திட்டம் தயாரித்தேன் பிரபு!...

கோவ: உன் அவசர முடிவால் நாடு போற் றும் நாட்டியக் கலையே அழிந்து விடும்!...

மாதவி: உற்சாகமான உள்ளத்திலேதானே கலை உதயமாக முடியும்!

கோவ: யார் சொன்னது? சோகப் பெரு வெள்ளத்திலும் கலை யென்னும் அலை எழு கிறது மாதவி!...

மாதவி: மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் தமிழகத் தில் மாதவி மட்டும் ஏன் சோகக் கலையை வளர்க்க வேண்டும்; மக்களைத் துன்பத்தில் ஆழ்த்த வேண்டும்?

கோவ: அப்படியென்ன உனக்குத் துன்பம் வந்து விட்டது?...

மாதவி: அப்படியானால்...என் வாழ்வில் சோகக் கறை நீங்கி விட்டதா? சோலைக் குயில் கூவி விட்டதா?...காலைப் பறவை என் வாழ்வின் விடிவுக்கு வாழ்த்து கீதம் பாடி விட்டதா? சொல்லுங்கள் பிரபு!

கோவ: மாதவி!...

மாதவி: பொன் வேண்டேன்...பொருள் வேண்டேன்...மண்ணுலும் மறவேந்தர் தரு கின்ற புகழ் வேண்டேன். எந்நாளும் கண்ணுளன் நீர் அருகிருந்தால்...ஊன் வேண்டேன், உயிர் வேண்டேன், தேன் வேண்டேன், தேவர் வாழ் உலகும் வேண்டேன்.

கோவ: மாதவி!...

மாதவி: படர்கின்றேன் உம்மீது கொடிபோல. தொடர்கின்றேன் அத்தானின் அடிச் சுவட்டை! சுடர் தந்தேன் வாழ்வுக்கு என ஒரு வார்த்தை கூறுங்கள் கண்ணு!

கோவ: மாதவி!...

மாதவி: "மயக்குகின்ற மாதர் வழி வந்தவள் நீ" என மனக் கலக்கம் கொள்ளுகின்றீர்... உண்மைதானே?.

கோவ: இல்லை கண்ணே!...

மாதவி: ஆ!...

கோவ: மாதவி!...

[மாதவி அவன் மடியில் மயங்கிச் சாய்கிருள்]



காட்சி – 11

கற்பரசியின் கிலக்கம்

கண்ணகி வீடு

[கண்ணகி தெருக்கதவின் ஓரம் நின்ற வாறு, கோவலன் வரவு பார்த்திருக்கிருள்.

பல்லக்கு வண்டி மெள்ள அசைந்தாடி வருகிறது.

ஆவலுடன் பார்க்கிருள். வண்டிக்காரன் மட்டுமே இறங்கி வருகிருன்.....]

கண்ணகி : அவர் எங்கே ?

வண்டிக்காரன் : அவர் வரவில்லே!

கண்: ஆ!...

வண் : ரோமாபுரிப் பயணத்தைக் கூட ஒத்தி வைத்து விட்டாராம்.

[கண்ணகி அசைவற்று நிற்கிருள்..... வண்டிக்காரன் போய்விடுகிருன். அப்போது கண்ணகியின் தோழி தேவந்தி வருகிருள்.

கண்ணகி அசைவற்று நிற்பதைப் பார்த்து வியந்து]

தேவந்தி : கண்ணகி!.....

[கண்ணகி மெதுவாகத் திரும்பி தேவந்தியைப் பார்க்கிருன்.]

ஏன் .....என்ன நடந்தது ?

கண் : ஒன்றுமில்லே தேவந்தி!.....

தேவ : பிறகேன் அழறே ?.....

அவர் எங்கே, உன் புருஷன் ?...

கண் : நாளைப் பயணத்திற்காக ஏற்பாடுகள் செய்யப் போயிருக்கிரர்....

தேவ : ஓகோ ... நாளைப் பயணமா ? அந்தப் பிரிவை நினைத்துத்தான் இப்பவே அழறயாக்கும்! அடி அசடு!... வா உள்ளே!

[உள்ளே அழைத்துச் சென்று]

தேவந்தி : ஆமாம்..... அந்த மாதவி உன் புருஷனுக்கு ஆள்மேலே ஆள் விட்டாளே; அது என்னடி ஆச்சு கண்ணகி?....

(இருபொருளில்) கண்ணகி : தோல் வியில் முடிந்தது!...

தேவந்தி : அதானே! அதானே!... சீதையை விட்டு ராமன் பிரிவானே?.... கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிவானே? இடையிலே அந்த மாதவி ஒருத்தி, சூர்ப்பனகை மாதிரி வந்து அவமானப்பட்டாளே ; ஏன்?....

கண்ணகி : மாதவியை இகழாதே ; தேவந்தி! அவள் கொடுத்து வைத்தவள்; பாக்கியசாலி.

காட்சி-12

இன்ப வாழ்வில் கோவலன்

மாதவி வீடு

[பள்ளியறையில்.....

மாதவி மாலை தொடுத்துக்கொண்டிருக்கிருள்...கோவலன் அருகே அமர்ந்து அவள் விரல்களின் அசைவையே பார்த்துக்கொண்டிருக்கிருன்.....

மாதவி, அவனைப் பார்த்து...]

மாதவி : என்ன, விழி அசையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

கோவலன் : உன் விரல் அசைவைத்தான்!... காந்தள் விரல்களிலே நாட்டியம் தன் கலையழகைக் காட்டுகின்ற வித்தையைத் தான் சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.... மாதவி! நாட்டியக் கலைக்கென்றே படைக்கப் பெற்றவள் நீ!.....

மாத : இல்லை!... உங்களுக்காகவே படைக்கப்பட்டவள் நான்!.....

கோவ : தவறு — தவறு... நீ படைக்கப்பட்டவள் அல்ல!... உன்னை யாரும் படைக்க முடியாது!... தங்கநிற ஒளிகாட்டும் மேனியிலே தவழ்கின்ற பேரழகை..... சேற்கெண்டை செவ்வள்போல நிறங்காட்டும் இதழ்களிலே ஊறுகின்ற பாலமுதை... கண்ணுடிப் பேழைக்குள் சிறைப்பட்ட கருவண்டு அலைவதுபோல் காட்சி தரும் விழியிரண்டை — கருவுற்ற மேகம்போல் இருண்டு-கண்பறிக்கும் விதத்தினிலே சுருண்டு — கால்வரையில் எட்டுகின்ற மயில் தோகைபோன்ற மழைக் கூந்தல் அழகை... தேனுற்றில் பலாச்சுளை போல் மிதக்கின்ற நாக்கில் படுகின்ற காரணத்தால் சுவைபெற்றுச் சிந்துகின்ற மொழி வளத்தைப் படைப்பதற்குப் பாரினிலே யாருமில்லை!..... உன்னைப் பார்த்துத்தான் இனிமேல் பாவையர்க்கு அழகைப் படைக்க வேண்டும் எனத் திட்டமிடுவான் படைப்புத் தலைவன்!...

மாத : மன்னா!... மலர் எடுத்து மாலை தொடுப்பது சுலபம்! அதைவிடச் சுலபமாகத் தெரிகிறது ஒரு மங்கையைப் பார்த்து ஆடவர், வார்த்தைகளால் வர்ணனை தொடுப்பது!...

கோவ : கண்ணே! உன்னை வர்ணிப்பதால் வார்த்தைகளுக்கல்லவா அழகு ஏற்படுகிறது! தமிழுக்கு அல்லவா பெருமை உண்டாகிறது!

மாத : அதுபோல, உங்கள் கழுத்தில் இருப்பதால் இந்த மாலைக்கும் பெருமை ஏற்படட்டும்!.....

[மாலையை அவன் கழுத்தில் போடுகிருள். கோவலன், பிறகு மாலையைக் கழற்றி மாதவி கழுத்தில் போடுகிருன். இருவரும் ஆனந்தம்.]

காட்சி - 13

துன்பப் புயலில் கண்ணகி

கண்ணகி வீடு

[கண்ணகி கண்கலங்கியவாறு அமர்ந்திருக்கிறாள். அப்போது மாசாத்துவானும் அவர் மனைவியும் வருகிறார்கள்...]

மாசாத்துவான்: வரமாட்டானம்மா... வரமாட்டான்!.....

கண்: மாமா!.....

[எழுகிறாள் கண்ணீரைத் துடைத்தவாறு]

மாசாத்: அந்த வஞ்சகன் வரமாட்டான் கண்ணகி! வலையிலே விழுந்த மீனைவிட்டான் கோவலன்!... நீயோ தரையிலே விழுந்த மீனைவிட்டாய்!...

கண்: இல்லை மாமா! நீங்கள் நினைப்பது போல் எதுவும் நடக்கவில்லை..... உட்காருங்கள்.....உட்காருங்கள் அத்தை!... இதோ பழம் கொண்டு வருகிறேன்!.....

[ஓடிப்போய்ப் பழத்தட்டை எடுத்து வந்து வைக்கிறாள்.]

மாசாத்: என் அன்பு மருமகளே! தும்பை மலர் போன்ற தூய்மையான உன் இருதயத்தை உணர முடியாத உன்மத்தனை மகனைப் பெற்றேன்! மன்னித்து விடம்மா என்னை!... உனக்கேற்பட்ட கவலையை ஒரு நொடியில் நீக்குகிறேன்—இப்போதே மாதவி வீட்டுக்குப் போகிறேன். எனக்கு மகனைப் பிறந்த மகா பாதகனை விலங்கிட்டு இழுத்து வருகிறேன்!...

கண்: வேண்டாம் மாமா! என் விருப்பத்தோடு தான் அவர் மாதவி வீட்டுக்குப் போயிருக்கிறார்.... நான்தான் அவரை வழியனுப்பி வைத்தேன்..... நீங்கள் அங்கு போய்த் தாறுமாறாக நடந்துகொண்டால்... அவரை அவமானம் சூழ்ந்து கொள்ளும். நான் பதித்துரோகியாகிவிடுவேன்!

அத்தை: கண்ணகி! என் தங்கமே! உன்னைப்போல ஒரு பெண் என் வயிற்றில் பிறக்கவில்லையே!

கண்: அத்தை!... நான் உங்கள் வயிற்றில் பிறந்திருந்தால்... அவர் எனக்குக் கணவனாகக் கிடைப்பாரா?...

மாசாத்: அவனைவிட அழகிலும் குணத்திலும் உயர்ந்தவனை உனக்குக் கணவனாக ஆக்கியிருப்பேன்....

கண்: மாமா! அவரைக் குறைகூறிப் பேசுவதை என்னால் பொறுக்க முடியாது!..... உங்களைப் பற்றிக் குறைவாகப் பேசினால் அத்தை-சும்மாயிருப்பார்களா?.....

மாசாத்: அத்தையா? உன் அத்தையா? கோவலனைப் போல் நான் ஒரு மாதவியைத் தேடிப் போயிருந்தால் இந்நேரம் உன் அத்தை பெரிய இராமாயண – பாரதப் போராட்டமே ஆரம்பித்திருப்பாள். நீதான் வாயில்லாப் பூச்சியாக இருக்கிறாய்!.....

கண்: நீங்கள் யாரும் கவலைப்படாதீர்கள்!... அவர் விரைவில் திரும்பி வருவார்.... அவருக்கு என்மீதுள்ள அன்பு...நெடு வானத்தில் எழுகின்ற மின்னல் அல்ல! தொடுவானத்து எல்லையையும் கடக்கின்ற ஒளிப்பிழம்பு! என்றைக்கும் அவர் என்னுடையவர்!

மாசாத்: சரியம்மா, கண்ணகி!... அவன் திருந்தி... திரும்பி வரும்வரையில் தனியாக இருப்பானேன்? எங்கள் வீட்டுக்கு வந்து விடு!...

கண்: மாமா, எங்களைத் தனி வாழ்வு நடத்த ஏற்பாடு செய்தீர்கள்; தமிழர் வழக்கப்படி!... அதில் நான் தோல்வி கண்டால் அல்லவா இந்த வீட்டை விட்டு அகலவேண்டும்! அவர் என் கண் நெருப்பில் நிற்கவிட்டுப் போனாலும், அவர் வரும் வரை அங்கேயே நின்று கொண்டிருப்பேன்...

மாசாத்: மாநாய்கன் மகளே!... உன் மன உறுதியைப் பாராட்டுகிறேன். தமிழ்க் குலத்தின் பெருமைக்கு நீ யொரு சான்று! உன் இருதயத்தின் ஆழத்தில் படிந்திருக்கும் ஆறாத துயரம் விரைவில் நீங்க ஆசி கூறுகிறேன்... வருகிறேனம்மா.....

கண்: சரி மாமா!.....

அத்தை: கண்ணகி...வரட்டுமா!..தேவந்தி... என் கண்ணகியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்!... தேவை ஏதாவது இருந்தால் என்னிடம் நீயாவது வாம்மா!...

[தேவந்தி தலையசைத்தல்]

கண்ணகி, வருகிறேனம்மா!...

கண்: சரி அத்தை! கவலைப்படாமல் போய் வாருங்கள்!.....

[அவர்கள் போகிறார்கள். கண்ணகி கண் கலங்கியவாறு சிரித்த முகத்தோடு வழி அனுப்புகிறாள்...]

[கண்ணகி அமர்ந்திருக்கிறாள். அப்போது மாநாய்கனும் கண்ணகியின் தாயும் வருகின்றனர்]

மாநாய்கன்: கண்ணகி!

கண்: அப்பா! அம்மா! வாருங்கள்!

மாநாய்: என்னம்மா இது...புருஷனையும் பறிகொடுத்துப் பொருளையும் பறிகொடுக்க ஆரம்பித்துவிட்டாயா?

கண்: பொருள்!... யார் சம்பாதித்த பொருள்! திரை கடலோடி அவர் தேடிய திரவியம் தானே எல்லாம்! அவர் திருப்திக்காகச் செலவிடுவதில் என்னப்பா தவறு?...

மாநாய்: ஐஸ்வரியம்...அள்ள அள்ளக் குறையாத ஆழ்கடல் நீரல்ல!... மெள்ள மெள்ளக் கரைந்துவிடும் என்பதை மறவாதே மகளே!

கண்: செல்வம் குறைந்தால் பிறகு சேர்த்துக் கொள்ளலாம்-என் சிந்தை கவர்ந்த அத்தானுக்கு என்மீது அன்பு குறைந்துவிட்டால்... பிறகு...

மாநாய்: அன்பு!... அவனுக்கு உன்மீது அன்பு!... அன்பு இருந்தால், அவன் ஏன் கணிகை யொருத்தியின் காலடியில் கிடக்கிறான்? மாதவியாம் மாபாதகி யொருத்தியல்லவா அவனுக்கு மகாராணியாகிவிட்டாள்!...

கண்: மாதவியை இகழாதீர்கள்... அவள் என்னைவிட உயர்ந்தவள். அழகில் மட்டுமல்ல; அன்பிலுங்கூட, அவரைப் பிரிந்து நான் உயிரோடு இருக்கிறேன்! அவள் அவரைப் பிரிந்தால் அரைக் கணமும் உயிர் தரிக்கமாட்டாள்!...அதன்காரணமாகத்தான் அத்தான்கூட அங்கேயே தங்கிவிட்டார்... என்மீது அவருக்கு அன்பில்லாமல் இல்லை; கணவனைப் பிரிந்து உயிர்வாழும் கல்மனம் கண்ணகிக்கு உண்டு! மாதவியின் மனமோ உடனே வாடும் மலர் போன்றது என்பதை அவர் நன்றாக அறிவார் அப்பா!...

மாநாய்: அய்யோ...குணக் குன்றையல்லவா என் குலக் கொடியாகப் பெற்றிருக்கிறேன். கோவலா! இந்தக் குளிர் பூங்கொத்தைக் கொடு நெருப்பில் வீசிவிட்டுப் போகலாமா நீ?...

[கண்ணகி கண்களில் நீர் வழிகிறது]

கண்: கவலைப்படாதீர்கள் அப்பா!

தாய்: தங்கமே! உன்னை நாங்கள் தேற்ற வந்தால் நீ எங்களைத் தேற்றுகிறாயா? பதுமைபோல் உன்னைப் பரிதவிக்க விட்டு விட்டு, அந்தப்பாவி.....

[கோபமாக]

கண்: அம்மா! நிதானித்துப் பேசுங்கள். இப்படியெல்லாம் அவரைச் சபிப்பதாயும், திட்டுவதாயும் மிருந்தால் இனிமேல் யாரும் இங்கே வராதீர்கள்....யாரும் இங்கே வராதீர்கள்!... யாரும் இங்கே வராதீர்கள்!...

[விம்மி விம்மி அழுகிறாள்.]

ஃ காட்சி -14 ஃ

மாதவியின் மாண்பு

காவிரி ஆற்றோரம்

[காவிரி யாற்றோரத்துக் கனி குலுங்கும் சோலை யொன்றில்...

மாதவியும், கோவலனும் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடுதல். மாதவியின் எழில் நடனம்...]

*

[மாதவி திடீரெனச் சோர்ந்து உட்காருகிறாள்.]

கோவலன் : ஏன்? ஏன் மாதவி இவ்வளவு கனிப்பு?...

[அருகே வந்து]

மாதவி : ஒன்றுமில்லை...முன்போல என்னால் இப்போதெல்லாம் நீண்ட நேரம் ஆட முடிவதில்லை...

கோவ : இனிமேல் நான் உன்னை ஆடச் சொல்வதேயில்லை...போதுமா?

மாதவி : கோபத்தினாலா?...

கோவ : கோபமில்லை கோகிலமே!...நீ அதிகமாக ஆடக் கூடாதென்று எனக்குத் தெரியும்...

மாதவி : ஏன்?...எதற்காகவாம்?

கோவ : ஊகும்...நான் சொல்ல மாட்டேன்; உனக்கு வெட்கமாயிருக்கும்....

மாதவி : எனக்கென்ன வெட்கம் ...நீங்கள் சொல்லத்தான் வேண்டும்.

கோவ : சொல்லட்டுமா?...

மாதவி : ம்!...

கோவ : சொல்லி விடுவேன்...

மாதவி : சொல்லுங்கள்...

கோவ : ஊகூம் ... சொல்ல முடியாது....

மாதவி : முடியாதல்லவா...சரி; நான் போய் வருகிறேன்!...

[எழ முயலுகிறாள்]

கோவ : மாதவி...

மாதவி : ம்...விடுங்கள் என்னை!...

[எழுகிறாள்]

[கோவலன் தும்முகிறான்]

மாதவி : நூறுண்டு வாழ்க!

[என்று பக்கத்தில் போய், சிறிது தொலைவில் அமர்ந்து முகத்தை மூடி அழுகிறாள்]

கோவ : மாதவி...ஏன் அழுகிறாய்?

மாதவி : நீங்கள் தும்மினீர்கள்...

கோவ : ஆமாம்...தும்மினேன்...நீ வாழ்த்தினாய்...பிறகேன் அதை அழித்து...அழுகிறாய்?...

மாதவி : யாரையோ நினைப்பதால் தானே தும்மினீர்கள்?...என்னை விட வேறு யாரை நினைக்கிறீர்கள்?

கோவ : அய்யோ...நான் யாரையும் நினைக்கவில்லை...மாதவி!...யாரையும் விட நான் உன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறேன்; காதலிக்கிறேன்!...

மாதவி : யாரையும் விட!...யார் யாரை விட? அல்லியை விடவா?... அடுத்த வீட்டுத் தாமரையை விடவா? சொல்லுங்கள்... யார் யாரை விட அதிகமாக என்னைக் காதலிக்கிறீர்கள்?...

கோவ : அடடா! இது என்ன வம்பு? பெண்களுக்கே இது மாதிரி நேரத்தில் இப்படித்

தான் எதற்கெடுத்தாலும் கோபம் வருமோ என்னவோ?...

[வேறு பக்கம் போகிறான். மாதவி, பின் சென்று]

மாதவி : இது மாதிரி நேரம் என்றீர்களே; எது மாதிரி நேரம்?...

கோவ : அதுதான்; நடனமாடினால்...கோபப்பு வருகிறதே; அதுமாதிரி நேரம்...

மாதவி : ஏன்...கோப்பு வருகிறது?...

கோவ : ஓகோ...மறுபடியும் விட்ட இடத்துக்கே வந்துவிட்டாயா?...

மாதவி : நீங்கள் சொல்ல மாட்டீர்களே சரி!.

[போகிறாள்]

கோவ : நில்! மாதாவி!...மாதாவி!...

மாதவி : என்ன!...மாதாவியா?...

கோவ : ஆமாம்...மா...தா...வி...தான்! இனி மேல்—நீ...மாதாவிதான்!... மாதா...மாதா... நீ... மாதா... நான்... பிதா! அதனால்தான் உன்னால் அதிக நேரம் நடனமாட முடிய வில்லை.

மாதவி : போங்கள்...

[வெட்கம்]

கோவ : பார்த்தாயா...பார்த்தாயா!..அதனால் தான் சொல்லமாட்டேன் என்றேன்...

மாதவி : அத்தான்!...

கோவ : மாதவி!...

[சோகக் குரல் கேட்கவே, திடுக்கிட்டுத் திரும்புதல்]

குரல் : பகவானே! என்னை ஏன் இந்தக் கதிக்கு ஆளாக்கினாய்?...கணவனில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா?...அய்யோ... அய்யோ...இந்தக் கோலத்தில் என்னைக் கைவிட்டுப் போக அவர் மனம் எப்படித் துணிந்தது?... கடவுளே!... நீயாவது என் கணவரின் கல் மனத்தை மாற்றி நல்வழியில் திரும்பச் செய்ய அருள்புரிய மாட்டாயா? அய்யோ...யாரும் எனக்கு அபயம் அளிக்கமாட்டார்களா? இந்த ஏழையின் குரல், என் கணவரின் இருதயத்தைத் தொடாவிட்டாலும்; இறைவா! உன் இருதயத்தையுமா தொட வில்லை?...

[கோவலனும் மாதவியும் வியப்போடு குரல் வந்த பக்கம் வருகிறார்கள். ஒரு பிராமண மாது கையில் குழந்தையுடன் தலைவிரி கோலமாக, காவிரி யாற்றைப் பார்த்து நிற்கிறாள்; ஓலமிட்டபடி!...]

[அருகே வந்து]

கோவ : அம்மையே!...தாங்கள் யார்?...தங்களுக்கு என்ன நேரிட்டது?...

பிராமண மாது : அய்யா...அந்தணர் ஒருவரின் துணைவி நான். நான் அறியாமற் செய்த ஒரு குற்றத்தை மன்னிக்க மனமின்றி என் கணவர் என்னை வெறுத்துப் பிரிந்து விட்டார்....

கோவ : அப்படி யென்ன குற்றம்?..

பிராமண மாது : என் கணவர் ஒரு கீரிப் பிள்ளை வளர்த்து வந்தார்!...ஒரு நாள் அவர் ஊரில் இல்லை...நீராடுவதற்குக் குளத்திற்குச் சென்ற நான் குழந்தைக்குக் கீரிப்பிள்ளையைக் காவல் வைத்துவிட்டுச் சென்றேன். அப்போது குழந்தையைக் கடிக்க ஒரு பாம்பு வரவே, அதைக் கீரி கொன்று...அந்த ரத்தத்தோடு வெளியே ஓடிவந்தது... குளத்திலிருந்து திரும்பிய நான், குழந்தையைத்தான் கீரிப்பிள்ளை கொன்றுவிட்டதென்று தவருகக் கருதி, அதன்மீது குடத்தை விசிக் கொன்று விட்டேன்....இந்தக் குற்றத்தைப் பொறுக்க மாட்டாமல்... என் கணவர்... என்னையும் குழந்தையையும் தவிக்க விட்டு...வெளிக் கிளம்பி விட்டார்....

கோவ : ...த்சு...த்சு...அப்படியா?

பிராமண மாது : அதோ... அதோ... படகில் அவர்தான் போய்க்கொண்டிருக்கிறார்.... அய்யா...தயவு செய்து படகை நிறுத்தச் சொல்லுங்கள்!

கோவ : ஏ...படகோட்டி!..படகை நிறுத்து!.. நிறுத்து!...

[சத்தமிட்டு]

கரைக்குக் கொண்டுவா!...

[படகு கரைக்கு வருகிறது]

[படகிடம், பார்ப்பனமாது பிள்ளையுடன் ஓடி]

பிராமணமாது : என்னை மன்னித்து விடுங்கள்; குழந்தை முகத்திற்காகவாவது திரும்பி விடுங்கள்!...

அந்தணர் ; சே!... முடியாது!... என்னை யாரும் தடுக்காதீர்கள்!

கோவ : அந்தணரே!...இவர்களைத் தனியே தவிக்க விட்டு நீர் வெளிச் செல்வதால்; இறந்த கீரிப்பிள்ளை உயிர் பெற்று விடுமோ?

அந்த : அறியாயமாக அதைக் கொன்ற பாவத்திற்கு விமோசனம் தேடவே நான் புறப்பட்டிருக்கிறேன்.

கோவ : உண்மை! கீரிப்பிள்ளைக்காக விமோசனம் தேட; பெற்ற பிள்ளையும், கொண்ட மனைவியையும் விட்டு விட்டுப் போகிறீர்! அவர்கள் ஆதரவற்று அநியாயமாகச் செத்தால், அந்தப் பாபம் வேறு உம்மைச் சுற்றுமே!...அதற்கு விமோசனம் எங்கு போவது?...அந்தணரே பாம்பு குழந்தையைக் கடிக்குமா கடிக்காதா என்று தெரியாமலே கீரி அதைக் கொன்றுவிட்டது! அது போலவே, கீரி குழந்தையைக் கடித்ததா, கடிக்க வில்லையா என்று தெரியாமலே உமது மனைவி அதைக் கொன்றுவிட்டார்கள்! அதனால்...சரிக்குச் சரி ஆகிவிட்டது. நீர் உமது மனைவியோடு வீட்டுக்குப் போவதே முறை....

அந்த : அருமையான விளக்கம்... இந்த அந்தணனுக்கும் புரியாத விளக்கம்;...

கோவ : எல்லாம் தமிழ் மறை தந்த பழக்கம்!..

அந்த : நாங்கள் வருகிறோம்...வாழ்க! வாழ்க!
[போகிறார்கள்...போனதும்]

மாத : அத்தான்... நான் ஒன்று கேட்பேன், கோபிக்கக் கூடாது.

கோவ : கேள்; என் செல்வமே!

மாத : மனைவியை விட்டுப் பிரிந்த மறையவருக்கு அறவுரையாற்றினீர்களே; அது போல் தானே தங்கள் துணைவி...என் அக்காள் வாடிக்கொண்டிருப்பார்கள்... எத்தனை முறை சொல்லுகிறேன்; போய்ப் பார்த்து வாருங்கள் என்று.

கோவ : கண்ணகி முகத்திலே விழிக்க வெட்கமாயிருக்கிறது கண்ணே!

மாத : நீங்கள் என்னைக் காதலிப்பது அவ்வளவு வெட்கக்கேடான காரியமா? அதையாவது சொல்லுங்கள்.

கோவ : சரி...சரி...வா...போகலாம்!

மாத : ஊகூம் – ஊருக்கு உபதேசம் செய்தால் போதாது! நீங்கள் கண்ணகியக்காளைப் போய்ப் பார்த்துவருவதாக உறுதி கூறினால்தான் உங்களோடு பேசுவேன்.

கோவ : சரி, ஆகட்டும்!...

மாத : உண்மையாகவா?..

கோவ : நிச்சயமாக...இன்று போகிறேன். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எனக்கும் போக வேண்டும் போலிருக்கிறது....

மாத : இந்த அந்தணரைப் பிரிவதற்கே அந்த அம்மை அப்படி அழுதாளே; அழகின் வடிவமான தங்களைப் பிரிந்து அக்காள் எவ்வளவு வேதனைப்படுவாள்...அய்யோ அக்காள் கண்ணீர் விட்டால்...அது என் வயிற்றில் இருக்கும் கருவைக் கூடப் பாதிக்கும்!

கோவ : மாதவி! இப்படியெல்லாம் என்னை பயமுறுத்திப் பணியவைக்க வேண்டாம். நான் கட்டாயம் போய் வருகிறேன். சரிதானே?

மாத : அத்தான்!...

கோவ : மாதவி...வா!...

காட்சி - 15

மனமாடிந்த கோவலன்

கண்ணகி வீடு

[கண்ணகி, நகை நட்டு ஏதுமின்றி சோக கீதம் இசைத்துக் கொண்டிருக்கிருள்.

வீட்டில், முன் இருந்த ஆடம்பர நிலை இல்லை. வீட்டின் பல பகுதிகளில்...அவள் நினைவு செல்கிறது...அந்த நினைவில் கோவலனும் அவளும் கொஞ்சி மகிழ்ந்த பழைய காட்சிகள் கண்முன் தோன்றுகின்றன.

பசுவின் முகத்தை அணைத்துக் கண்ணீர் விடுகிருள். பசுவும் கண்ணீர் வடிக்கிறது.

மஞ்சத்தில் வந்து அமர்கிருள். அவள் கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் பொல பொல வென்று மஞ்சத்தில் விழுகின்றன...

மல்லிகை மலர்கள் முன்பு தூவப்பட்ட காட்சி அவள் நினைவில் வருகிறது.

குத்துவிளக்கு. எரியாத திரியிலிருந்து எண்ணெய் சொட்டிக்கொண்டிருக்கிறது— அவள் கண்ணீர் விடுவது போலவே குத்து விளக்கும் கண்ணீர் விடுகிறது போலும்!...

வாயிற்புறம் நோக்கி வருகிருள்; உள் கூடத்திலேயே!...

கோவலன் வந்து கொண்டிருக்கிருன், வீதியில், வீடு நோக்கி! ஒரு சேவல் கதவண்டை வந்து உள்ளே நுழையப் பார்க்கிறது.

கண்ணகி அதை விரட்டிவிட்டு கதவைத் 'தடால்' என்று மூடுகிருள்.

அப்போதுதான் வாயிற்படியை மிதித்த கோவலன் அதிர்ச்சி யடைந்து...தலைகுனிந்து நின்று...திரும்பிப் போய்விடுகிருன்.

கதவை மூடிச் சென்ற கண்ணகி, கூடத்தில் மாட்டப்பட்டிருக்கும் கோவலன் திருவுருவப் படத்தின் அருகே வந்து...]

கண்ணகி : அத்தான்!...நீங்கள் வரவே மாட்டீர்களா?...என்னை அடியோடு மறந்து விட்டீர்களா; என் தேவே! எரிமலையின் பெருமூச்சை என்மீது திருப்பிவிட்டீர்களா?... ஈட்டியிலே கூர்பார்க்க என் இதயந்தான் கிடைத்ததோ! அத்தான்! உங்கள் முத்தார மார்பினிலே முகம் புதைத்துக் கிடப்பதற்குத்; தடந்தோளில் தலை சாய்த்துத் தமிழ்ச் சுவையைப் பருகுதற்குத் தடையேன் அத்தான்!...உற்றரும் பெற்றேரும் உறுமுகின்றர்; உண்ணுமல், உறங்காமல் உங்கள் துணைவி குமுறுகின்றுள். ஒருமுறை வாருங்கள் அத்தான்...! ஒளிமுகம் காட்டுங்கள் அத்தான்...! அத்தான்! வரமாட்டீர்களா? இந்த ஏழையிடம் இரக்கம் காட்டமாட்டீர்களா? அத்தான்!...



× காட்சி – 16 ×

மணிமேகலை பிறப்பு

மாதவி வீடு

[மாதவி வீட்டில் குழந்தைக்கு நன்னீராட்டு விழா...மிகக் குதூகலமாக நடைபெறுகிறது...

குழந்தையைத் தொட்டிலில் இட்டு, மாதவியும் தோழியரும் பாடுதல்.

பாட்டினிடையே...கோவலன் வரவே... குழந்தையைத் தூக்கி, அவனிடம் தருகிறாள்.

அவன் குழந்தையை முத்தமிடுகிறான்.]

மாத : குழந்தைக்குப் பெயர் சூட்டுங்கள்!

கோவ : பெயரா?...

[குழந்தையைப் பார்த்து]

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்த நற்கூட்டே! பொதிகைமலை
விட்டெழுந்து, சந்தனத்தின் பூந்தாது வாரி
வருகின்ற இன்பத் தென்றலே! குழலியும்
யாழையும் வெல்லுகின்ற குறளையும் வெல்லும்
உன் குறுஞ்சிரிப்பு! கோவலன் குலக்
கொடியே; மங்கையர் இனத்துக்கு நீயோர்
மணி!
உன் காலசைவு கையசைவு எல்லாமே கலை!
எல்லாம் மேகலை!...மேகலை!...மேலானகலை!–
அதனால் நீ மணிமேகலை!...வாழிய மணி
மேகலை!!...

[மணிமேகலை என்ற பெயரை வைத்து அனைவரும் வாழ்த்துப் பாடுதல்.

கோவலன், மாதவி, வசந்தமாலை, எல்லோரும் தான தருமங்களை உற்சாகமாகச் செய்தல்! ஒரே கொண்டாட்டம்! கூத்து! பாட்டு..]

[வீதியில் ஒரு மதங்கொண்ட யானை ஒரு மறையவரைப் பிடித்தல்...

பலரும் ஓட்டம்!

ஒரே அல்லோலம்! கோவலன் ஓடிவந்து மிகக் கஷ்டப்பட்டு யானையை அடக்கி வெற்றி பெறுகிறான். அனைவரும் கோவலனுக்கு மாலையிட்டுக் கொண்டாடிப் புகழ்கிறார்கள்....

மாதவி, ஓடிவந்து அணைத்துக்கொள்கிறாள்.]

காட்சி-17

மாசறுபொன்மகிழ்வு

கண்ணகி வீடு

[கண்ணகியிடம் தேவந்தி விழா விவரம் கூறுகிறாள்]

தேவந்தி: அந்த யானையைக் களங்கண்ட தளபதிகள் கூட அடக்கமுடியாதாம்; உன் கணவர் அடக்கி விட்டார்! ஊரெல்லாம் புகழ்கிறது அவரை!

கண்: தமிழரல்லவா?... தேவந்தி! அவர்மீது காயமொன்றும் படவில்லையே?...

[அழுகையும், புன்னகையும் போட்டியிட]

தேவ: அய்யோ, என்ன கவலை? காயம் பட்டால் ஆற்றுவதற்குத்தான் மாதவி யிருக்கிறாளே?...

கண்: மாதவி!... மாதவி!!... என் தங்கை பாக்கியசாலி!!!...

[கண்ணீர் பெருக்கெடுக்கக் கோவலன் படத்தின்மீது சாய்கிறாள்.]



"பூம்புகார்" அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பௌத்தப் பள்ளி

காட்சி - 18

இந்திரவிழா - இருமனைகளில்

[பல உட்காட்சிகள் அடங்கியது]

(புகார் நகரில் இந்திரவிழா ஆரம்பமாகிறது.

புலிக்கொடி வான்நோக்கி ஏற்றப்படுகிறது.

யானைமீது முரசம்...

நகரெங்கும் விழா எடுக்கின்றனர்...

பழந்தமிழ் மன்னன் இந்திரனின் பெரிய சிலையொன்று புலியின்மீது சவாரி செய்வது போல வானைத் தொடும் அளவு கோபுரம்போல் உயர்ந்து நிற்கிறது.

இமயமலையின் உச்சியிலே கரிகாலன் நிற்பதுபோல ஒரு பெரிய சிலை வானளாவி நிற்கிறது.

பட்டி மண்டபம், முத்துப் பந்தர், தோரண வாயில் எங்கெங்கும் கொண்டாட்டம்.

கடற்கரையில் கப்பல்களின் அணிவகுப்புக் காட்சி....

மகளிர், ஆடவர், ஆட்டபாட்டம்.

பல இடங்களில்,

பல வகைகளில்,

கொண்டாட்டங்கள்!)

மாதவி வீடு

மாதவிக்குக் கோவலன் அலங்கரித்து விடுகிறான். ஆங்குள்ள அணிகளில் எது சிறந்தது எனத் தேர்ந்தெடுத்து அவளுக்கு அணிவிப்பதே பெரிய வேலையாகிவிடுகிறது அவனுக்கு!

கோவலனுக்கும் மாதவி அலங்கரித்து விடுகிறாள்... இருவரும் அழகே உருவினராய்ப் புறப்பட்டு.....

கூடத்தில் தொட்டிலில் கிடக்கும் மணிமேகலையைத் தூக்கி முத்தமிடுகிறார்கள்...

மணிமேகலை சிறிது வளர்ந்திருக்கிறாள்...

சிரிக்கிறாள் பொக்கைவாய் திறந்து!]

கோவ: சிரிப்பைப்பார்—சிரிப்பை! மாதவி! மணிமேகலை, உன்னைப் பார்த்து எழுதிய சித்திரம் போலவே இல்லை...?

மாத: இல்லை!... எல்லோரும் சொல்லுகிறார்கள்; மணிமேகலை, கண்ணகியக்காளை உரித்து வைத்ததுபோல் இருக்கிறாளென்று...

கோவ: [கேலியாக] ஹும்.....

மாத: ஆமாம்!... நான்கூட இவளை அக்காளின் குழந்தையாகவே கருதுகிறேன்.

கோவ: சரி ... நேரமாகிறது ... வா... போகலாம்.

[குழந்தையை முத்தமிட்டு ...தொட்டிலில் கிடத்திவிட்டு... ஆங்குள்ள தோழிகளை அருகே விட்டுப் புறப்படுகிறாள்.]

[பல பகுதிகளில் விழாக் காட்சிகள்—கூத்து ... உற்சாகம்!... மாதவியும் கோவலனும் கலந்துகொள்கிறார்கள்.]

கண்ணகி வீடு

விழா நடக்கும் ஒலி, கண்ணகியின் காதைப் பிளக்கிறது!

ஆகாயத்தில் கிளம்பும் வாண வேடிக்கை மின்னல்போல் அவள் கண்ணைப் பறிக்கிறது!...

மகளிர் ஆட்டபாட்டங்கள் ... பேய்க்கூத்து போல் தோன்றுகின்றன. இசைவாணர் இசைவாணிகளின் பாட்டுக்கள்... ஆந்தை, கோட்டான் அலறுவதுபோலத் தெரிகின்றன...

கண்ணகி கண்ணையும், காதையும் பொத்திக்கொண்டு அலறி விழுகிறாள்.

அவள் நினைவில் ... இந்திர விழாவன்று தானும் தன் கணவன் கோவலனும் ஆடிப்பாடி மகிழ்ந்தது—நினைவுக்கு வருகிறது.

இந்திர விழா நிகழ்ச்சிகள் அவளை மேலும் துயரக் கடலில் ஆழ்த்துகின்றன: துடிக்கிறாள்,

...துவளுகிருள்...கோவலன் படத்தருகே ஓடு கிருள்....]

கண்: அத்தான்!... இன்று எப்படியும் விழா வுக்கு வந்திருப்பீர்கள். ஒரு முறையாவது உங்கள் திருமுகத்தைப் பார்த்தால்தான் இனி இந்த உயிர் தங்கும்!... இதோ வரு கிறேன்...நீங்கள் எங்கிருந்தாலும்... தொலை வில் நின்றுவது பார்த்துவிட்டு வருகிறேன்...

அத்தான்!...

அத்தான்!!...

அத்தான்!!!...

[வீட்டுக்கு வெளியே ஓடுகிருள்—தேவந்தி பார்த்துவிட்டுப் பின்னல் ஓடுகிருள்

"கண்ணகி"... "கண்ணகி" என்று அலறியபடியே!...

கண்ணகி "அத்தான்"..."அத்தான்"... என ஓடுகிருள்...

தேவந்தியும் தொடர்கிருள்.]

கடற்கரை

[மாதவியும் கோவலனும் உல்லாசமாக நடை போடுகிறார்கள்; அலைகளைக் கால்களால் உதைத்தவாறு]

[கண்ணகி ஓடிவருகிருள். தேவந்தி தொடர்கிருள்]

தேவ: கண்ணகி!... நில்!...

[என்று பெருங் கூச்சலிடவே, கண்ணகி அப்படியே திரும்பாமல் அசைவற்று நிற்கிருள்]

தேவ: கண்ணகி!... உனக்கு எப்படி ஏற் பட்டது இவ்வளவு துணிவு? ஊரெல்லாம் இந்திரவிழா!...இப்போதா நாள் பார்த்தாய்; குடும்பத்துக்கு இழிவு தேட?

கண்: இழிவு... என் அத்தானை நான் பார்க் கப்போவது இழிவா?

தேவ: இந்தச் சமயத்தில்...இந்தக் கோலத் தில்...வாழ்ந்த குடும்பத்துப் பெண் போக லாமா? யாராவது பார்த்தால் என்ன நினைப் பார்கள்? உன் கணவன் கோவலனே பார்த்து விட்டால் எவ்வளவு கோபம் அடை வார்?

வேதனையை வெளிக்காட்டாமல் நடந்து கொள்கிருயே; தாய் தந்தையரிடம்...அவர் கள் பார்த்தால் உன்னை நினைத்து உருகி விடமாட்டார்களா?...

பெரிய குடும்பத்திலே பிறந்து...பெரிய குடும் பத்திலே புகுந்தவள் நீ; மானங் காக்கும் தமிழச்சி நீ மனம் தளரலாமா?

வா...கண்ணகி!...வீட்டுக்குத் திரும்பு!...

நேரில் பார்த்தால்தானே அத்தான்?... நெஞ் சிலே இல்லையா அவர்!.....

[கண்ணகி பெருமூச்சும் கண்ணீரும்]

வா...கண்ணகி...

[கைப்பிடித்து அழைக்கிருள் தேவந்தி... உயிரற்ற பொருள்போலக் கண்ணகி திரும்பு கிருள்...]

[விழா தொடர்ந்து நடைபெறுகிறது... இருபத்தெட்டு நாள் இந்திரவிழா நடந்து முடிவு பெறுகிறது...புலிக்கொடி இறக்கப்படு கிறது...]

மாதவி வீட்டுப் பள்ளியறை

[மாதவியும், கோவலனும் மஞ்சத்தில்... விளக்கு எரிகிறது. விடியவில்லை இன்னும், கோழி கூவுகிறது...காலைச் சங்கு முழங்கு கிறது...மாதவி விழித்தெழுகிருள்...]

மாத: அத்தான்!...

[என்கிருள்...கோவலன் எழவில்லை...]

(யாழை எடுத்து மீட்டுகிருள்; கோவலன் எழுகிருன்...)

மாத: அத்தான்...இன்றோடு இருபத்தெட்டு நாள்...இந்திர விழா முடிவுறுகிறது...வாருங் கள்...கடற்கரைக்குப் போய் அருணோதயக் காட்சியைச் சுவைக்கலாம்!

கோவ: வருகிறேன்...அங்கு நீ கானல்வரி பாடி என்னை மகிழ்விக்க வேண்டும்...

மாத: நீங்களும் பாடவேண்டும்...

கோவ: உன்னைப்பற்றி யென்ருல்...நான் பாடுவேன்...கடற்கரையைப் பற்றிப் பாடும் கானல் வரி பாடுவதென்ருல்...

மாத: அப்படியானால்...நானும் பாடமாட் டேன்....

கோவ: சரி...சரி...வா! இருவரும் பாடு வோம்....

மாத: வசந்தமாலை!

(வருகிருள்)

யாழ் தயாராகட்டும்...நாங்கள் அருணோத யத்திற்குள் கடற்கரைக்குச் செல்ல வேண் டும்...அதற்குப் புரவி பூட்டிய தேரும் தயா ராகட்டும்!... கடற்கரையில்...நாங்கள் அமர்ந்து கானல்வரி பாடப் புன்னை மரத்து நிழலில்...புதுமணற் பரப்பில்...சித்திரத் திரைகட்டி விதானம் விரித்த வெண்காற் கட்டில் ஏற்பாடாகட்டும்!...

வசந்த: இதோ, ஒரு நொடியில்.....

காட்சி-19

கோவல் வரியும் காதலர் பிரிவும்

புகார்

[கோவலனும் மாதவியும் புரவி பூட்டிய தேரில் ஏறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்...

விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும் புகார் நகரின் தெருக்களில் தேர் போகிறது..

வெளி நாட்டார் வாணிப நிலையங்கள்... பண்டகசாலைகள்...விளக்குகளால் மின்னுகின்றன...

கடற்கரையில், ஆடவர் பெண்டிர்... விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்...

கோவலனும், மாதவியும் புன்னை மரத்தடிக்கு வருகிறார்கள்...

அங்கே அழகிய வேலைப்பாடமைந்த திரை கட்டப்பட்டு அதன் மறைவில்...

கடற்கரையையும், காவிரி கடலில் கலக்கு மிடத்தையும் பார்த்தவாறு...அமைந்த எழில் மிக்க கட்டிலில் அமர்கிறார்கள்.

அமர்ந்ததும்...

வசந்தமாலை...யாழை எடுத்துக் கொடுக்கிறாள்...மாதவியிடம்!...

மாதவி யாழைப்பெற்று...இசை கூட்டுகிறாள், தன் செங்காந்தள் விரல்களால்...சிறிது நேரம் பாட்டின்றி யாழொலியால் கோவலனை மயக்குகிறாள்...

கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் யாழ் ஒலியின் இனிமையில் மெய்ம்மறந்து நின்று விடுகிறார்கள்...

கடல் அலைகூட அமைதி பெறுகிறது—குளத்தைப்போல், கடல் மெதுவாக அலைக் கரங்களை அசைக்கிறது.

யாழ் ஒலி...கடற்கரையையே தன் வயப்படுத்திய பின்...மாதவி, யாழைக் கோவலன் கையில் தந்து...]

மாதவி : ம்...முதலில் நீங்கள் பாடுங்கள்!

[கோவலன், மாதவியின் விரல்களை எடுத்துக் குளிர்பார்வையை அவை மீது வீசி... அவைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு...]

கோவலன் : இந்த விரல்களால் விழிகளைக் கூடக் குத்திக் கொள்ளலாம்...காயம் ஏற்படாது—அவ்வளவு மென்மையான அனிச்ச மலர் விரல்கள்!...

இந்த விரல்பட்ட யாழின் நரம்புகளைத் தொடுவதற்கு...என்...முரட்டு விரல்களுக்குத் தகுதியுண்டா மாதவி?...

மாதவி : இந்த யாழுக்கு மாத்திரம் என்னைப் போல உயிர் இருந்தால்...உங்கள் விரல் மேலே படும்போது ஏற்படும் சுகத்தை—ஒரு கவிதையாகவே பாடிவிடும்.

கோவலன் : அப்படியா? மாதவி...

மாதவி : அத்தான்...பாடுங்கள்...கண் பெற்ற இன்பம்... என் செவியும் பெறட்டும்...

[கோவலன் யாழ் மீட்டிப் பாடுகிறான்]

பாட்டு : "திங்கள் மாலை வெண்குடையான்
சென்னிச் செங்கோலது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய் வாழி! காவேரி!

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற்கண்ணுய்!
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன், வாழி! காவேரி!

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது வோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி! காவேரி!

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற்கண்ணுய்!
மன்னு மாதர் பெருங் கற்பு என்று
அறிந்தேன், வாழி; காவேரி!

மாதவி : அத்தான், அழகான பாடல்...சுவையான இசை...ஆனால்...

கோவலன் : என்ன மாதவி?

மாதவி : பாட்டின் பொருளில்...

கோவலன் : பொருளில்...? சந்தேகமா...? காவேரி வாழ்த்துப் பாடினேன். காவேரிக்கு உரியவனான கரிகாற் சோழன்...கங்கையையும் வெற்றி கொண்டான்...அப்படி அவன் வடநாட்டில் படையெடுத்து கங்கையைத் தன்னோடு சேர்த்துக்கொண்டதைக் கண்டும்...முதல் மனைவியான காவேரி அவனோடு கோபிக்கவில்லை...பிணங்கவில்லை...இது கற்புள்ள பெண்களின் இலக்கணம்...அப்படிப்பட்ட கற்புடைய காவேரி நதியே... நீ வாழ்க...என்பதே கருத்து!

மாதவி : ஓகோ...சரி...காவேரியிருக்கும் போது கங்கையைச் சேர்த்துக்கொண்டவன்...உங்கள் பாட்டின்படி அத்துடன் நிற்கவில்லையே...

[இசையுடன் பாடிக்காட்டி]

"மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அதுவோச்சிக்
கன்னிதன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய், வாழி; காவேரி"

கோவலன் : ஆமாம்...பாடினேன்...காவிரியிருக்கக் கங்கையைக் கூடியவன் அத்தோடு நிற்காமல் பாண்டியரை வென்று...கன்னியாகுமரியையும் சேர்த்துக் கொண்டான். அதைக் கண்டும் கரிகாலனோடு வெறுப்படையாமல்...பிணங்காமல்...இருந்த கற்புக்கரசி காவேரியே...நீ...வாழ்க!

மாதவி : சரிதான்!...கணவன் கங்கையோடும் கூடுவான்...குமரியோடும் ஓடுவான்... அதைக் காவேரி போலப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமோ? அத்தான்! இந்தப் பாடல் உங்கள் பாதுகாப்பிற்காகப் பாடினீர்களோ? கண்ணகியைவிட்டு மாதவி... பிறகு மாதவியை விட்டு...

[குறுக்கிட்டு]

கோவலன் : மாதவி!...தவருகப் பொருள் கொள்ளாதே!..நான் பாடியது கரிகாலன் பெருமையையும்...காவேரியின் வளத்தையும் எடுத்துக் காட்டத்தான்!...

[யாழை வாங்கி]

மாதவி : இதோ...நான் பாடுகிறேன்...

[பாடுகிறாள்]

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்,
கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!

கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்த வெல்லாம், நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன்! வாழி! காவேரி!...

கோவலன் : ஓகோ ?...காவேரி மங்கை வளங் குறையாமல் இருப்பதற்குக் காரணம் அவள் கணவன் சோழனுடைய செங்கோலின் சிறப்புதான் ! கணவன் பண்போடு நடப்பதால்...காவேரி சிரித்து மகிழ்ந்து செழிப்புத் தருகிறாள். இதுதானே உன் பாட்டின் கருத்து?...அதாவது...காதலன் அன்போடு இருந்தால் காதலியும் அன்போடு இருப்பாள். எனக்கு உன்மீது அன்பு குறைந்தால்... உனக்கும் என்மீதும் அன்பு குறைந்து... பிறகு அந்த அன்பு வேரொருவனிட...

[குறுக்கிட்டு, கோபமாக]

மாத : அத்தான் !... நன்றாயிருக்கிறது, நீங்கள் பாட்டுக்குப் பொருள் கூறும் அழகு !...

[யாழைக் கீழே வைத்துவிட்டு எழுந்து போகிறாள்]

கோவ : மாதவி !

[அழைத்தவாறு, பின்னால் போகிறான்]

[மாதவி வேகமாகப் போகிறாள்..."மாதவி, நில்" எனப்பின்னால் விரைகிறான் கோவலன்...

அங்கே வீதிகளுக்கிடையே ஒரு செம்படவப் பெண் நின்றுகொண்டிருக்கிறாள். அவளைக் கோவலன் பார்க்கிறான், செம்படவப்பெண் கோலத்தில், மாதவியே மீன் உலரவைப்பது போல் தெரிகிறது அவனுக்கு ! அப்படி ஒரு கற்பனை அவன் உள்ளத்தில் எழுகிறது.]

கோவ : ஆகா ! தேன் நிறைந்த நீலோற்பலப் பூவின் தண்டுகளைக் கையிலேந்திப் புலால் உண்ண வரும் பறவைகளை ஓட்டுகின்ற இந்தப் பாவையின் கண்களோ மிகக் கொடியன !

ஆகா ! பொழில் தரும் நறுமலர் ! பழுதறு திருமொழி ! முழுமதி புரைமுகம் !

[மாதவி நின்று கவனிக்கிறாள்.

கோவலன் செம்படவப் பெண்ணை, மாதவியெனக் கற்பனை செய்தவாறு]

கோவ : அடடா...நகை நட்டு ஏதுமின்றி எழில் சொட்டும் பருவத்தாள் ! புகையொத்த கொடிபோல நெளிந்தாடும் உருவத்தாள் ! இடையோ ஒருபிடிக்குங் காணாத இளம்பிடி ! இதழ்களிலே தேன் ஒருபடி ! இல்லை, இவளுக்கு குறையென்னும் புகழ்பெற்ற முல்லை !... பேச்சிலோ கிள்ளை ! இவளை விடுமோ காதல் தொல்லை !

[பாடுகிறான்]

திரைவிரி தரு துறையே
திருமணல் விரி இடமே...
விரைவிரி நறுமலரே !
மிடைதரு பொழிலிடமே—
மருவிரி புரி குழலே —
மதிபுரை திருமுகமே !
இரு கயல் இணைவிழியே
எனை இடர் செய்தவையே !

[பாடிக்கொண்டு அருகே போகிறான். அருகே சென்றதும் அவள் மாதவி யல்லள்... செம்படவப் பெண் என்று தெரிகிறது...அவளும் மிரண்டு வேறுபக்கம் போகிறாள்...

அதுகண்ட மாதவி, அதிகக் கோபமுற்று வசந்தமாலையிடம் சென்று...]

மாத : பார்த்தாயா–வசந்தமாலை !

வசந்த : பார்த்தேன்–பார்த்தேன் ! மாதவி ! ஊடலுக்கும் ஒரு அளவு வேண்டும்...

மாத : அவருக்கு என்னைத் தவிர வேறு யாரிடத்திலோ விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதை அவரால் மறைக்க முடியவில்லை. உண்மை வெளிப்பட்டு விட்டது ... இருக்கட்டும், வேண்டுமென்றே நான் அவர் மனத்தை நோக வைக்கிறேன் ! நானும் வேரொரு ஆடவர்பால் காதல் கொண்டதுபோல் நடித்து...

வசந்த : வேண்டாம் மாதவி ! வினையாட்டு வினையாகிவிடப் போகிறது...

மாத : அதெல்லாம் ஆகாது ... நீ போய்விடு; அவர் வருகிறார் !

[அங்கே ஒரு வீரனுடைய சிலை இருக்கிறது. அந்தச் சிலையை மாதவி உற்றுப் பார்க்கிறாள். சிலை, கோவலன் சிலைபோலக் கண்ணுக்குத் தெரிகிறது; சிலையிலுள்ள வீரனுக்குரிய உடைகளுடன்]

மாத : காதல் தலைவரே ! நீர் என்னை உண்மையான காதலோடு தேடி வரவில்லை; என்

பற்னே மெய்யாகவே முத்துக்கள் என்று கருதி, அவைகனே விலேபேசும் வர்த்தகன் போல என்னிடம் வந்தீர்!

இதழ்களிலே பவளமிருக்கிறது; அதை எடுத்துப் போகலாமென்று கள்வனேப்போல் என்னிடம் வந்தீர்! கன்னத்துச் சிவப்பைக் காட்டு ரோஜா எனக்கருதிக், கேட்பதற்கு ஆளில்லே ... பறித்துப் போகலாம் என எண்ணி என்னிடம் வந்தீர்!

நீர் எப்படி நினேத்து வந்திருந்தபோதிலும் என் உள்ளங் கொள்னேகொண்டீர்...உடல்... உயிர்...அழகெல்லாம் உமக்கே சொந்தம்! சிலேபோல நிற்கின்ற ஆருயிரே! தென்னே மரச் சோலேயிலே என்னேத் தழுவிடவே எப்போது வருகின்றீர்?

புன்னே மரத்தில் அன்னம் உட்கார... அதைச் சூழ்ந்திருக்கும் பூக்களெல்லாம் விண்மீன் என்றும்...நடுவில் உள்ள அன்னந்தான் அமுத நிலவென்றும் நினேத்துக்கொண்டு, மலர் பூத்துவிடும்.

அழகிய பூம்புகார் நகரத்துக் கலேப்பெண்ணுள் மாதவியைக் காதலால் துடிக்கவிடாமல்...

கண்ணுளா வந்துவிடும்...
மாவீரா வந்துவிடும்...
மன்னவரே வந்துவிடும்...

[கோபமாக]

கோவ: நிறுத்து... நிறுத்து... மாயக்காரி நிறுத்து!

மாத: அத்தான்!

கோவ: சே! அத்தான்! விலேமகளே! நிலேயில்லா மனம்படைத்த குலம் விளங்க வந்துற்ற குடிகேடி!

கலேகாட்டி...கயல் விழிகாட்டி...மயல் முழுதும்காட்டி... மயக்குகின்ற பெண் பேயே! உனே நம்பி உளமிழந்தேன், வளமிழந்தேன்; உற்றார், பெற்றார், உழுவலன்பு கொண்ட நண்பர் அனேவருமே வெறுக்கின்ற பண்பு கொண்டேன். உத்தமியாம் கண்ணகியின் உயிர் கருக்கி... உளம் வருத்தி... உற்சாகச் சகதியிலே...இது வரையில் வீழ்ந்து கிடந்தேன் ... இன்றுணர்ந்தேன்...நீ யார் ...நின் குலத்தின் பழம் பெருமை யென்ன என்ற சேதி.

மாத: அத்தான்!...போதுமத்தான் போதும்! இந்தப் பொல்லாங்கு நேர்வதற்கோ பொழுது விடிந்தது?

கோவ: பொழுது விடிந்தது... பொற் கோழி கூவிற்று! புனித நன்மலராம் கண்ணகியை வாடவிட்டுப், புழுதியிலே கிடக்கின்ற பொன் கல்தனே உண்னை வந்தேன் ... அந்த இருட்டு மதி நீங்கிடவே பொழுது விடிந்த தடி; பொல்லாதவளே!

மாத: அய்யோ! எனக்கு ஒன்றுமே விளங்க வில்லேயே? நான் என்ன குற்றம் செய்தேன்?

கோவ: ஆகாகா..... கைகாரி! கானல்வரி நான் பாட, நீ யார் மேலோ மனம் வைத்து மாயப்பொய் பல கூட்டும் காதல் மொழி சிந்தியதை இந்தக் காதுகளால் கேட்டிருந்தேன்!

கணிகை வீட்டுக் கட்டுத் தறியும் கண் காட்டி ஆள்மயக்கும் என்ற உண்மைதனே அறியாமல் ஏமாந்தேன்...

மாத: அத்தான்! சகிக்க முடியாத சொல்லம்புகளால் என்னேக் கொல்லாதீர்கள்! மாதவி ... கணிகைதான்! ஆனாலும், மன்னரே; உமையன்றி என் மனம் யாரையும் நினேத்ததுமில்லே ... நினேக்கப் போவதுமில்லே ...நம்புங்கள் என்னே!

கோவ: காலேயரை ஏமாற்றக் காட்சி வரி... கண் கூடு வரி...முதலிய எட்டுவகை நடிப்பு வரியும் கற்றவளடி நீ ...தெரியும் எனக்கு! குமிழம்பூ மூக்கும் குவனேமலர்க் கண்ணும் கொண்டு கொவ்வைப் பழம்போன்ற வாய் மொழியால்...

இனி இந்தக் கோவலனே ஏமாற்ற ஒருக்காலும் முடியாது! அதோ சிலேயாக இருக்கின்றனே உன் இலட்சியக் காதலன்... அவன் வரும்வரை காத்திரு! அவன் பொருள் தரும்வரையில் காதலியாயிரு! பின் காமக்கடையைக் கட்டி ... அவன் எதிரே வேறொரு சீமானிடம் நடையைக் கட்டு! போ...போ...உன் குலத்தொழிலேக் குறைவின்றி நடத்து! கோணல் மதி படைத்தவளே!! போ, போ, என் எதிரே நிற்காதே! போ!...போ!



காட்சி-20

திருந்திய கோவலன்
திரும்பிவருதல்

கண்ணகி வீடு

[கண்ணகி, கோவலன் படத்தின் முன்னே நின்று—

பலகணி வழியிலும் பல திசைகளிலும் பார்வையைச் செலுத்தி.....இறுதியில் கத வண்டை வந்து நின்று...கதவைத் திறக்கிருள். கதவு திறந்ததும் சேவல் ஒன்று உள்ளே வரு கிறது.

கண்ணகி சேவலைப் பார்த்தவாறு நிற் கிருள்...அதனைத் தொடர்ந்து கோவலனும்... எதிர் வந்து நிற்கிருன்...

கோவலனைக் கண்ட கண்ணகி அப்படியே அசைவற்று நின்று விடுகிருள். கோவலனும் மெய்ம்மறந்து தலை குனிந்து நிற்கிருன்.

மரம்போல் நின்றுவிட்ட கண்ணகி... மண்டியிட்டு...கோவலன் காலில் தலை கவிழ்க் கிருள். கண்ணீர்த் துளிகள் அவன் காலைக் குளிப்பாட்டுகின்றன.

கோவலன் அவளைத் தூக்கி நிறுத்தி...]

கோவலன்: கண்ணகி...என்னை மன்னித்து விடு!...

கண்ணகி: அத்தான்!...

[பொல பொலவென்று கண்ணீர் உதிர் கிறது]

கோவ: கற்பின் திருவுருவாம் உனைவிடுத்துக் கணிகையின் மடியிலே சுகங் கண்ட... இந்தக் கல் நெஞ்சக் கயவனை; கற்றறிந்த மூர்க்கனை...

கண்: ...திட்டாதீர்கள்!...என் கணவரை... என் கணவரேகூடத் திட்டக் கூடாது!...

[அவன் வாயைப் பொத்தி]

கோவ: மாதர்குல மாணிக்கமே! ... தமிழ் மறை காத்து...மனைகாக்கும் இன்பப் பெரு மாட்டி நீ யிருக்க...மாதவியாம் விலை மாதின் வசப்பட்டேன்...அவள் வாச மலர்க் கூந்த லிலே வையகமே அடிமையென எண்ணி விட்டேன்...அந்த மோசம் நிறை மூதேவி.. என் குடும்பப் பாசம் அறுத்தாள். தேசமெல் லாம்...தெருவெல்லாம் இகழ்ந்துரைக்க... தேகமிருந்தும் உயிரில்லாப் பாண்டமாக... என்னை ஆக்கிவிட்டாள்!

கண்: அத்தான்! என் தங்கை அவள்! அவளை ஒன்றும் சொல்லாதீர்கள், அத்தான்! குழந்தை மணிமேகலை சுகந்தானே?... அத்தான்!...

கோவ: குழந்தை மணிமேகலை... குவிந் திருந்த பொன்மணிகள்; தங்கக் குன்று நீ... அணிந்திருந்த நகைகள் எல்லாம்...கொட் டிக் கொட்டி...நான்பெற்ற இன்பத்தில் விளைந்ததன்றே அந்தக் குழந்தை!...பாவச்

இராசராசன் காசுகள்.

சின்னம்!...விலைகொடுத்துச் சுவை பார்த்த காதல் விருந்தின் அடையாளம்! கணிகை வீட்டில் உன் கணவனுக்கு ஏற்பட்ட களங் கந்தான் கண்ணகி; அந்தக் குழந்தை!

கண்: அய்யோ...அப்படியெல்லாம் சொல்லா தீர்கள்...மணிமேகலை மாதவிக்குப் பிறந்தா லும்...என் குழந்தை!...என் குழந்தையத் தான் மணிமேகலை!

கோவ: என் தெய்வமே! நீ என் மதிப்புக் குரியவள்! மரியாதைக் குரியவள்! என்னை மன்னித்துவிடு...உன் இதயத்தை உணர முடியாத இந்த இழிமகனை மன்னித்துவிடு கண்ணகி...

கண்: அத்தான்!...

கோவ: கடல் வாணிபத்தில் தமிழருக்கு ஈடில்லை என்ற புகழ் என்னாலே பெருகிற்று... இன்றோ...உடல் வாணிபத்தில் ஈடுபட்ட ஒருத்தியிடம்...அறிவிழந்தேன்; அ ள வி ட முடியாத பொருளிழந்தேன்; புலம்புகின் றேன்...ஏழையாக!...

[கண்ணகியிடம்]

என் செல்வமே!...பூம்புகார்ப் பெரு வணிகன் என்ற பெயர் போயிற்று...புயலதனிலே படகானேம்...கரையேற வழியில்லை...அலை மோதும் கடல் மாதா வயிற்றுக்குள் போய் விடுவோம். வா...வா...

கண்: ஏன் கண்ணு அந்த முடிவு? ஆனை உயரம் அடுக்கி வைத்த தங்கம் உண்டு என் தாய் வீட்டில்...நாம் எடுத்துக் கொண்டால் தடை சொல்ல யாருண்டு?...

கோவ: ஆருயிரே!... மாமன் கை பார்த்துப் பிழைக்கின்றான் என ஊர் பேசும்; மானம் போகும்!...வேண்டாம், வேண்டாம்!

கண்: நெல் மணியை அளப்பது போன்று அளக்கின்றார் முத்துக்களை தங்கள் தந்தை, அவர்கூட ஆதரவு காட்டுவதற்கு மறுப் பாரோ அத்தான்?...

கோவ: தனியாக வாழ்வதற்குத் தகுதியுண்டு என எண்ணிப் பொருள் கொடுத்தார் தந்தை! அதைத் தொலைத்துப் புதுத் தொல்லை கொடுப்பதற்கு மனமே இல்லை! மார்க்கம் வேறு இருந்தால் சொல்! இல்லை யேல் மரணம்தான் மேல்!

கண்: நாவிருக்கும் வரையினிலே சோகத் தால் வாடாதீர்!...என் காற் சிலம்பு இரண்டு உண்டு; கழற்றித் தருகிறேன். விற்றுவிட் டால், புதிதாக வாணிபத்தைத் தொடங்க லாம் அத்தான்!

கோவ: சிலம்பு! சிலம்பை விற்பதா? அய்யோ ...கண்ணகி...இந்த வார்த்தையை என் காதுகள் கேட்கும் காலமும் வந்ததே...உன் காலை அழகு செய்யும் அந்தச் சிலம்புகளை... இந்தக் காமுகன் இதுவரை கழற்றுமல்... கடைசியாக விட்டு வைத்திருக்கும் அந்த ஆபரணத்தை...விற்றுவரச் சொல்லுகிறாயா? கண்ணகி!

கண்: கவலைப்படாதீர்கள்...நான் சொல்வ தைக் கேளுங்கள்...தங்களுக்குப் பயனில்லா மல்...அழகுக்காக எனக்கு ஆபரணமா? விற்று வாருங்கள்! மீண்டும் நமக்கு நல்ல காலம் கட்டாயம் வரும்...சொல்வதைக் கேளுங்கள்...அத்தான்!

கோவ: கேட்கிறேன்!...ஆனால் பூம்புகாரி லேயே சிலம்பை விற்பது அவமான மல்லவா?

கண்: பிறகு?...

கோவ: நம்மை யாரும் அடையாளம் காண முடியாத பாண்டிய நாட்டுக்குச் செல்லலாம். அங்கே மதுரைத் தலை நகரில் சிலம்பு நல்ல விலைக்குப் போகும்!

கண்: தங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்... மதுரைக்கு நானும் தங்களோடு வருகிறேன்.

கோவ: வா, இனிச் சாகும் வரையில் அணுப் பொழுதும் உனைப் பிரியமாட்டேன் கண்ணகி!

கண்: அத்தான்!

கோவ: இன்றைக்கே யாருக்கும் தெரியாமல் புறப்பட வேண்டும்...பயணம் தயார் செய் வோம்!



காட்சி-21

கலைமகள் குங்குரல்

மாதவி வீடு

[மாதவி, தன் அறையில் குழந்தை மணி மேகலையுடன், சோர்ந்து போய் உட்கார்ந் திருக்கிறாள்...வசந்தமாலை வருகிறாள்]

மாதவி : வசந்தமாலை! என்ன ஆயிற்று? பார்த்தாயா அவரை?

வசந்தமாலை : அப்போதே சொன்னேனே விழாயாட்டு விழாயாகுமென்று; கேட்டாயா? கோவலனும் கண்ணகியும் மதுரைப் பக்கம் போய்விட்டார்களாம்...தேவந்தி சொன்னாள்!

மாதவி : ஆ!...போய் விட்டாரா? மணி மேகலை...உன்னையும் என்னையும் பிரிந்து உன் அன்புத் தந்தை, ஊரை விட்டே போய் விட்டார்; என் செல்வமே! வாரி அணைத்து... ''வண்ணப் புது நிலவே...எண்ணச் சோலை உதிர்க்கின்ற தமிழ்க் கனியே'' என்றெல்லாம் முத்தமாரிப் பொழிவாரே! அவர் உன்னையும் என்னையும் வெறுத்து...இந்தப் பாவியிருக்கும் பூம்புகாரிலேயே இருக்கக் கூடாதென்று போய்விட்டாராம்... ''அப்பா!'' என்று எப்போது அழைப்பாய்...''அம்மா'' என்று என்றைக்கு வாய் திறப்பாய் என்று ஆவலோடு கேட்டுக் கேட்டுத் துடித்த உன் தந்தை, உன் செந்தமிழ் மழலையைச் சுவைக்க விருப்பமில்லையென்று உன் தாயைச் சுடு நெருப்பில் எரிந்து விட்டுப் போய் விட்டாரம்மா...போய்விட்டார்!

சித்ராபதி : மாதவி, என்ன இது? என்னமோ கட்டிய கணவன் கைவிட்டுப் போனது மாதிரிக் கதறுகிறாய், அழுகிறாய்?...

மாதவி : போதும் தாயே...போதும்!...உங்கள் வயிற்றிலே வந்து பிறந்ததற்கு நான் அனுபவிக்கும் கொடுமை போதும்...இனியும் என்னைக் கொடுமைப் படுத்த வேண்டாம்...

கூனி : சித்ராபதி...சித்ராபதி...என்ன இது?

மாதவி : நீயும் வந்து விட்டாயா; குடி கெடுக்கும் கூனிக் கிழவி!...இராமாயணத்திலே ஒரு கூனிக் கிழவி...நாட்டையே கெடுத்தாளாம்; நீ...இந்த வீட்டையே கெடுக்க வந்து சேர்ந்தாய்.

கூனி : மாதவி...அடக்கிப் பேசு!...

மாதவி : ஏன்?...எதற்காக?...பாவிகளே! நீங்கள் எல்லாம் சேர்ந்து கொண்டுதானே எனக்கும் தெரியாமல் அவருக்கும் தெரியாமல் அவர் வீட்டுப் பொருளையெல்லாம் கொள்ளையடித்திருக்கிறீர்கள்? பொருளுக்காகவா நான் அவரைக் காதலித்தேன்?

சித் : நீ காதலிக்கவில்லை...ஆனால் நாங்கள் பொருளுக்காகத்தான் உன்னைக் காதலிக்க விட்டோம்.

மாதவி : போதும் போதும்; என்னை உயிரோடு விழுங்க, தாய் உருவில் வந்த பேய்; அதற்கு முன்பே புகார் நகரத்தைக் கெடுக்கப் புறப்பட்ட கூனிப் பூதம்! உங்கள் முகத்திலேயே விழிக்கக் கூடாது; போய் விடுங்கள்... இதை விட்டுப் போய் விடுங்கள்!

[குழந்தையிடம்]

அம்மா மணிமேகலை நம் கதியைப் பார்த்தாயா? நமக்கு யாருமே ஆதரவில்லையம்மா...ஆதரவில்லை!

[என விம்மி அழுகிறாள்]

"மூலன் பேடு அந்தனன் உமண"..... என்ற தமிழ் எழுத்துக்களின் அங்காளைய வரிவடிவம்,
பூம்புகார் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தாழி

காட்சி - 22

மதுரைப் பயணம்

மதுரை செல்லும் வழி

[கவுந்தியடிகளின் பாடல் ஒலி கேட்கிறது.

அந்த ஒலியினூடே...கண்ணகியும் கோவலனும் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

எதிரே கவுந்தியடிகள் வருவதைக் கண்டு

கோவலன் அடிகளைக் கரங்கூப்பி வணங்குகிறான்.]

கோவ : வணக்கம். தாயே!

[கண்ணகியிடம்]

கண்ணகி! இவர்கள்தான் கவுந்தியடிகள்.

சமண மதத் துறவி!

கண் : வணக்கம்....

கவுந்தி : வாழ்க! வாழ்க! குழந்தைகள் நீங்கள்...?

கோவ : வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உயர்ந்த குதிரைகளும்...ஏற்றுமதிக்கெனக் குவியும் மிளகு மூட்டைகளும்...வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்...குடமலையிற் பிறந்த ஆரமும் அகிலும்...தென் கடல் முத்தும், குணகடல் பவளமும்... கங்கையின் பொருளும்...காவிரியின் பயனும் நிறைந்து தோற்ற மலிக்கும் சோழனின் கூடற்கரைப் பட்டினமாம் பூம்புகார்த் தலை நகரே எமது ஊர். என் பெயர் கோவலன். இவள் என் வாழ்க்கைத் துணைநலம்... கண்ணகி!

கவுந்தி : கோவலன்..? பெருவணிகர் மாசாத்துவானின் மகன்?...குழந்தாய் உனக்கு வந்த இடர் யாது?

கோவ : சுடர் விளக்காம் கண்ணகிக்குத் துரோகம் செய்தேன்!...அது போதாதென்று படுகின்ற முட்புதரில் என் பத்தினியின்

பாதம் பட்டுப்...பாகற்பழம் போலச் சிவக்கின்ற பாதகத்தைச் செய்கின்றேன்.

கவுந்தி : வருந்தாதே!...தவறு செய்தவர்கள் தங்கள் தவற்றை உணரும்போது, அதுவே பெருந் தண்டனையாகிறது!...பரவாயில்லை... மதுரைக்குத்தானே போகிறீர்கள்! நானும் வழித் துணையாக வருகிறேன்—பேசிக் கொண்டே போகலாம்.

கண் : அத்தான்...இன்னும் மதுரை எவ்வளவு தூரம்?

கோவ : ஆறு ஐந்து காதம் இருக்கும்...அவ்வளவுதான்.

கவுந்தி : கண்ணே! உன் கணவர் ஏமாற்றுகிறார்...ஆறு ஐந்து காதம் என்றால்... ஆறைந்து முப்பது காதம்...ஏனம்மா?... நடக்க முடியவில்லையா?

[கோவலனிடம்]

கோவலா!

நான் வேண்டுமானால் போய்விடுகிறேன். நீ...கண்ணகியைத் தூக்கிக் கொண்டு

கோவ : என்ன?

கவுந்தி : நீ அவளுக்குச் செய்த குற்றத்திற்குத் தண்டனை வேண்டாமா? அதற்காகச் சொன்னேன்...அதுமட்டுமல்ல;

[நடந்தவாறு]

கண்ணகிக்கு இவ் வழியெல்லாம் நடந்து பழக்கமிருக்காது! வழியில் வள்ளிக்கிழங்கு தோண்டிய குழிகளில், வாடிய சண்பக மலர்கள் குவிந்து மூடியிருக்கும்...கவனமாகச் செல்லாவிட்டால்...அந்தப் பொய்க் குழிகளில் விழுந்துவிட நேரும்...

வாழ்க்கைப் பாதையுங்கூட அப்படித்தானே?

கோவ : நிச்சயமாக! என் அனுபவ உண்மை.

கவுந்தி : வயல் வெளிகளில் செல்வோமானால் நீர் நாயினால் கௌவப்பட்ட வாளை மீன்கள் உயிர் தப்பத் துள்ளி, மேலே விழும். அதைக் கண்டு, கண்ணகி பயப்படுவாள்.

கரும்புத் தோட்டங்களில் நடக்கும்போது.. கரும்பின் மீது தவறி உராய்ந்துவிட்டால் அங்குள்ள பெரிய தேன்கூடுகள் உடைந்து அருவி நீரோடு கலந்து போகும்

கோவ : என் பொருளெல்லாம் அப்படித்தான் பாழாயிற்று!...

கவுந்தி : சோலைவழிச் சென்றால்...கிளைகளில் தாழ்ந்து தொங்கும் பலாப் பழங்கள் எதிரிகள் போல் தலையில் முட்டும்.

கோவ : அய்யோ...நான் சென்ற தவறான வழியில் யாரும்...என் மனச்சாட்சி கூட... அதுபோல என்னைத் தடுக்க வில்லையே!

கவுந்தி : கோவலா! மனச்சாட்சி உறங்கும் போதுதானே மனக் குரங்கு ஊர்சுற்றக் கிளம்புகிறது! நடந்தவைகளை மறந்துவிடு!... இனி நடப்பவை நல்லவைகளாயிருக்கட்டும்!.

[பயணம் நடத்துகிறார்கள்]

[காட்டினிடையே கோவலனிடம், மாதவி தீட்டிய ஓலையைக் கோசிகமாணி தருகிறான்]

[மாதவி குரல்]

பேரன் புடையவரே!... தங்கள் அடி தொழுது வணங்குகின்றேன். பெற்றோர்க்குப் பணி புரியாமல் உற்ற மனைவிக்கும் தீங்கு செய்து பிழைப்பு நடத்த வெளியூர் செல்வதற்கும் நானே காரணமானேன்—என் தவற்றால் வருந்தும் உங்கள் நெஞ்சை ஆற்றிக்கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
உங்கள் அன்பு.

[கோவலன் படிக்கிறான்...திரும்ப ஓலையையே பார்த்துக்கொண்டிருக்கிறான். கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் சிந்தி ஓலையில் விழுகின்றன.]

கோவ : மாதவியிடம் சொல்லுங்கள்...கோவலன் பிழைக்காக வருந்தினான் என்று! அவள் எனக்கு எழுதிய இந்த ஓலை என் தாய் தந்தையருக்கும் பொருந்தும்... அதனால் இதை நான் கொடுத்ததாக என் தந்தையிடம் கொடுத்து விடுங்கள்...

[மீண்டும் ஓலையைப் படிக்கிறான்]

காட்சி-23

மாதவி துறவு

மாசாத்துவான் வீடு

ஓலை மாசாத்துவான் கையிலிருக்கிறது... (கோவலன் குரல்)

"பேரன்புடையவரே! தங்கள் அடி தொழுது வணங்குகின்றேன். பெற்றோர்க் குப் பணி புரியாமல், உற்ற மனைவிக்கும் தீங்கு செய்து, பிழைப்பு நடத்த வெளியூர் செல்வதற்கும் நானே காரணமானேன். என் தவற்றுல் வருந்தும் உங்கள் நெஞ்சத்தை ஆற்றிக் கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்
உங்கள் அன்பு,

[மாசாத்துவான் பெருமூச்சு...

அப்போது மாதவி ... மணிமேகலையுடன் வருகிருள். நாலைந்து பெண்கள் தட்டுகளில் பொற்காசுகளை நிரப்பிக்கொண்டு வருகிறார்கள்.]

மாசாத்துவான் : யார்?

மாதவி : மன்னிக்கவும்...தங்கள் பெருமை வாய்ந்த குடும்பத்தின் சீரழிவுக்குக் காரண மான பாதகி...மாதவி நானேதான்! இதோ! எனக்கும் தெரியாமல் எங்கள் வீட்டில் குவிக்கப்பட்டிருந்த தங்கள் வீட்டுச் செல் வம். ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாசாத் : என்ன மாதவி...நீ மாற்றுக் குறை யாத பசும் பொன் என்று இப்போதே உணர்ந்தேன்!

மாதவி : இனி யார் உணர்ந்தென்ன உணரா விட்டால் என்ன? நான் உதிர்ந்த மலராகி விட்டேன்!

மாசாத் : மாதவி! இந்தப் பொற்குவியல் என் மகன் உனக்காக அளித்தது. இதை நான் தீண்ட மாட்டேன்...திரும்பப் பெறுவது தீங் கானது.

மாதவி : எனக்கு ஏன் பொருள்? என் அன்புச் செல்வமே பறிபோய் விட்ட பிறகு...அழி கின்ற இந்தச் செல்வம் எதற்காக? எங்கே...என்னை மன்னித்தேன் என்று ஒரு முறை சொல்லுங்கள்!

மாசாத் : மாதவி...நீ என் அன்பு மருமகள்!

மாதவி : அய்யோ...மணிமேகலை! எவ்வளவு நல்ல குடுமபத்தை உன் தாய் நாசமாக்கி விட்டாள் பாரம்மா! பாரம்மா!!

[அழுகிருள்]

மாசாத் : அழாதேயம்மா...எங்கே, குழந்தை யைக் கொடு!

[குழந்தையை வாங்குகிறார். குழந்தை சிரிக்கிறது...அவர் கண்களிலும் கண்ணீர் தேங்குகிறது.]

காட்சி-24

கவுந்தியுடன் கண்ணகி கோவலன்

வழியில்

[கவுந்தி, கண்ணகி, கோவலன் மூவரும் வயல் வெளியில் பசுமை நிறைந்த பயிர்களுக்கு இடையே நடந்து செல்கிறார்கள்.

மலைத் தொடர்களும் காட்சியளிக்கின்றன—]

காலில் முள்குத்த ... கண்ணகி உட்கார்ந்து எடுக்கிறாள்.]

கோவ: கண்ணகி...உனக்கு நான் எவ்வளவு கொடுமை செய்துவிட்டேன். அய்யோ... இப்படி யெல்லாம் நடந்து உனக்குப் பழக்கமேயில்லையே!

[முள்ளைக் கோவலன் எடுத்துவிட்டு]

இந்த முள்ளைவிடக் கொடுமையானவன் நான்!...இதாவது உன் காலில் காயத்தை உண்டாக்கியது; இந்தப் பாவி உன் நெஞ்சத்திலே அல்லவா...ஆறாத காயத்தை ஏற்படுத்தி விட்டேன்?

இந்த முள்ளை விடக் கொடுமையானவன் நான்...

[குத்திக் கொள்ளப் போகிறான்]

கொடுமையானவன் நான்...என் கண்ணகி படும் கஷ்டத்தைப் பார்க்காமல்.. ஏ... முள்ளே! நீயே என் கண்களைக் குருடாக்கி விடு!

[தடுத்து...அலறி]

கண்: அத்தான்!...என்னத்தான் இது! உங்கள் அழகைப் பார்த்துப் பார்த்து என் துயரங்களை மறக்கிறேனே, அது கூடப் பிடிக்க வில்லையா உங்களுக்கு! என்னை ஆறாத துயரத்தில் அமிழ்த்தி விடாதீர்கள்!

கவுந்தி: கோவல!

"இடுக்கண் வருங்கால் நகுக!"
என்ற திருக்குறளை மறந்தாயா? துன்பங்களை வெற்றி காணுவதுதான் வீரனுக்கு அழகு—புறப்படு!...இதோ...மதுரைத் தென்றல் கூட வீச ஆரம்பித்து விட்டது....
பாண்டியர் தலைநகர் இன்னும் சிறிது தொலைவுதான்...வாம்மா கண்ணகி—

[நடக்கிறார்கள்]

*

[நடைபாதையில்—வயல் மடையிலேயிருந்து ஒரு மீன் துள்ளி வரப்பில் விழுந்து துடிக்கிறது!]

கவுந்தி: ஆகா! ஆபத்தை உணராமல் உற்சாகத்தில் இப்படித்தான் குதிக்கிறார்கள்... சில மனிதர்கள்!

கோவ: என்னைப் போல!

கவுந்தி: எவ்வளவு அழகான மீன்! பாண்டிய நாட்டுக் கொடியின் சின்னமல்லவா மீன். அதனால்தான் பயமில்லாமல் துள்ளுகிறது!

[என்றவாறு அதைத் தண்ணீரில் விடுகிறார்...தண்ணீரில் மீன் நீந்திச் செல்லுகிறது...

அதிலிருந்து பாண்டியநாட்டு மீன் கொடி பறக்கும் காட்சி]



காட்சி-25

நீதி வழுவா நெடுஞ்செழியன்

164596

பாண்டியன் அவை

[பாண்டிய நாட்டு மீனக் கொடி பறக்கும் கோட்டை ... அதைத் தொடர்ந்து கொலு மண்டபத்திலேயுள்ள மீன் சின்னம் ... நெடுஞ் செழியப் பாண்டியனின் குரல்!...]

குரல்: பாண்டியன் நெடுஞ்செழியனின் கொலு மண்டபத்தில் அநீதிக்கு இடமில்லை! வழக்குரைக்க வந்திருக்கும் நீங்கள் இரு வருமே தமிழில் புலமை மிக்கவர்கள். உங்கள் வழக்கின் போக்கு கண்டு நான் மிகக் குழப்ப மடைகிறேன்.

[தொடர்ந்து ... நெடுஞ்செழியனும் கோப் பெருந்தேவியும் காட்சியாதல்]

[சுவடியைக் கையில் பிடித்தவாறு]

புலவர் அருளாளரே! இந்தக் காவியம் உம்முடையதுதான் என்பதற்கு உமது கை யெழுத்தை ஆதாரமாகக் காட்டுகிறீர்! அதை ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்! இதற்குப் புலவர் மலைவாணரின் மறுப்பு ஏதோ?...

மலைவாணர்: கையெழுத்து அருளாளருடை யது என்பதற்காகக் காவியம் அவருடைய தாகி விடுமோ?...அரசே! நான் சொல்லி என் மாணவரான அருளாளர் எழுதினர் என்பதே உண்மை! ... ஆகவே காவியம் என்னுடையதே!

பாண்டியன்: அருளாளரே?

அருளாளர்: தமிழ்ச் சங்கம் வளர்க்கின்ற பாண்டிய மன்னா!...தமிழின் மீதாணையிட்டுக் கூறுகிறேன். என் சிந்தனையின் விளைவே இச் சிறு காவியம்! நான் என்றைக்கும் மலை வாணருக்கு மாணவனாயிருந்ததே யில்லை!

[யோசித்து]

பாண்டி: ம்!...சிக்கலான வழக்கு! சரி நான் ஒன்று முடிவாகக் கூறுகிறேன் ... காவியம் உங்களில் யாருக்குமே சொந்தமில்லை. உங் கள் கண் எதிரே இதை நெருப்பிலே போட் டுக் கொளுத்தி விடுகிறேன்...சரிதானே?



"பூம்புகார்" அகழ்வாராய்ச்சி–
கி.மு. 3ஆ-ம் நூற்றாண்டின்
படகு கட்டும் துறை.

O-, 2NKRI, C
N67

அருளா: வேண்டாம்; வேந்தே வேண்டாம்! தமிழைக் கொஞ்சும் தகாத செயல் தமிழ் காக்கும் பாண்டியன் அவையில் நடைபெற வேண்டாம்! நாட்டுக்காகவே நான் காவியம் எழுதினேன். எனக்காக அல்ல; அது யார் பெயரால் வந்தாலும் வரட்டும்! மலை வாணர் பெயராலேயே காவியம் இருக்கட்டும்...அதை அழித்து விடாதீர்கள்!

பாண்டி: பெற்றவருக் கல்லவா பிள்ளையின் அருமை தெரியும் — அவையோர்களே! இதிலிருந்தே காவியத்தின் தாய் அருளாளர் என்பது தெளிவாகி விட்டது. மலைவாணர் உழைக்காமல் ஊரார் பொருளைத் திருடிப் புகழ் வாங்க ஆசைப்படும் ஒரு போலிப் புலவர் என்பதும் விளங்கிவிட்டது! அதனால் தான் காவியம் அழிவதைப்பற்றிக் கவலைப் படவில்லை அவர்!... அருளாளரே! நீரே வென்றீர்! இது உமது காவியமேதான்!... இதோ!...

[அருளாளர் வாங்குதல்]

அமைச்சரே! இவருக்குப் பரிசாக ஐயாயிரம் கழஞ்சு பொன் தருவீராக!

அருளா: வாழ்க தமிழ்! வாழ்க பாண்டியன் நெடுஞ் செழியன்!

[மன்னரும், அரசியும் அவையை வணங்கி விட்டு எழுந்து செல்லல்...கொலு மண்டபத்தை யடுத்த தாழ்வாரத்தில் நடந்து செல்லும்போது,

அரசியின் காற்சிலம்பு ஒன்று கழன்று விடுகிறது...

அரசி, நின்று குனிகிறாள்]

பாண்டி: என்ன?...

அரசி: சிலம்பு பழுதாகி விட்டது!

பாண்டி: [சிலம்பை எடுத்து] யாரங்கே!...

[தோழியும், ஒரு அதிகாரியும் வணங்குதல்]

பாண்டி: இந்தச் சிலம்பை அரண்மனைப் பொற்கொல்லரிடம் கொடுத்துப் பழுது பார்த்துக் கொண்டு வரச்சொல்!

இன்னொரு சிலம்பையும் கொடேன்!

அரசி: காலிலே சிலம்பில்லாமல் இருப்பதா... வேண்டாம்; இதை மாத்திரம் சீர்செய்தால் போதும்!

[இருவரும் போய்விடுதல்]

[அதிகாரி, கையில் சிலம்புடன் நிற்க...]

தோழி: என்ன சிலம்பையே விழுங்கிவிடுவது போல் பார்க்கிறீர்கள்?

அதிகாரி: விழுங்கி விடலாமா என்றுதான் பார்க்கிறேன்! பைத்தியம்!...இது அரசாங்கச் சிலம்பு-தொட்டால் தொங்கிவிடும் தலை!

[என்றபடி அவளைப் பிரிந்து நடக்கிறான். நடக்கும்போதே சிலம்பைப் பார்த்தவாறு தனக்குள்]

அதிகாரி: எத்தனை ஆயிரம் பொன் பெறுமோ இந்தச் சிலம்பு!

[பெருமூச்சுடன்]

த்சு...த்சு...த்சு.....இதுமாத்திரம், எனக்குச் சொந்தமாயிருந்தால்.....ம்...என் வீண் கனவு?...

[தானே சமாதானப் படுத்திக்கொண்டு நடக்கிறான்]



காட்சி - 26

அரசியின் சிலம்பு

பொற்கொல்லர் வீடு

[அரசியின் உடைந்த சிலம்பை எடுத்துக் கொண்டு அதிகாரி தலைமைப் பொற்கொல்லரிடம் வருகிறான்.]

பொற்: வாருங்கள், வாருங்கள்! இப்படி உட்காருங்கள்! எங்கே இவ்வளவு...?

அதி: அரசி கோப்பெருந் தேவியின் சிலம்பு இது. இதை விரைவில் பழுது பார்த்து அனுப்பச் சொன்னார்...மன்னர்.

[சிலம்பைக் கொடுக்கிறான், பொற் கொல்லர் பெட்டியில் வைக்கிறார்.]

பொற்: அதற்கென்ன...நானேக்கே கொண்டு வருகிறேன்.

[ஒரு பொற் கொல்லர் வேலை செய்வதைத் திருத்த, தலைமைப்பொற் கொல்லர் எழுந்து செல்லும்போது, அதிகாரி அந்தச் சிலம்பைத் திருடிவிடுகிறான்]

பொற்: ஏன் அவ்வளவு பலமாகத் தட்டுகிறாய்? எவ்வளவு நுட்பமான வேலை இது; மணி மோதிரம் என்றால் மலையிலே கல் செதுக்குவது போலவா செதுக்குவது? இதை நீ செய்ய வேண்டாம்! அவரிடம் கொடு; அய்யா, இதைக் கொஞ்சம் பார்த்துச் செய்யுங்கள்.

பொற்: (அதிகாரியிடம்) பிறகு...

அதி: ஆகா, வந்த வேலை முடிந்துவிட்டது! நான் அரண்மனைக்குப் போகிறேன். நானேக் குள் சிலம்பை...

பொற்: கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்.

அதி: நான் வருகிறேன்.



காட்சி-27

ஆய்ச்சியர் அறிமுகம்

மதுரை எல்லை

[கவுந்தியடிகள், கண்ணகி, கோவலன் வருதல்...மாடு ஆடுகளை ஓட்டி வரும் சிறுவர் சிறுமியரின் பாட்டொலி கேட்கிறது ... அந்த இளங் கூட்டத்திற்கு ஐயை என்னும் அழகிய பெண் தலைமை வகித்து வருகிறாள். அவள் கவுந்தியடிகளைப் பார்த்து...]

ஐயை: அடிகளே...வணக்கம்! வணக்கம்!

கவுந்தி: வாழ்க ... வாழ்க ... ஐயை! உன் தாயார் மாதரி எங்கே யம்மா?

ஐயை: அம்மா ... ச.மணத் துறவிகளுக்குப் பாற்சோறு படைத்துவரப் போயிருக்கிறார்கள்...வாருங்கள் வீட்டுக்குப் போகலாம்!

கவுந்தி: கோவல!...வாருங்கள். மாதரி என்னும் ஆயர்குல மங்கை மிகவும் நல்லவள்... அவளை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.

[அனைவரும் பசுக் கூட்டத்தோடு அதை விட்டு நகர்தல்]

மாதரி வீடு...

[கவுந்தி,கண்ணகி,கோவலன், ஐயை,...]

ஐயை: அதோ அம்மாவும் வந்துவிட்டார்கள். ...அம்மா...அம்மா...

மாதரி: ஆ! கவுந்தியடிகளா!...வரவேண்டும் ...வரவேண்டும்...

கவுந்தி: மாதரி! இவர்கள் ... கோவலன், கண்ணகி...இவர்களுடைய பெற்றோரின் பெயரைக் கேட்டாலே மதுரையிலுள்ளோர் ஓடி வந்து தங்கள் தங்கள் வீட்டுக்கு விருந்தினராக அழைப்பார்கள்...அவ்வளவு சிறப்பு மிக்க குடும்பத்தினர்! மதுரையில் இவர்களது வேலை முடியும் வரை உன் வீட்டிலேயே தங்க வைத்து...

மாதரி: தடையா சொல்லப் போகிறேன்? தாயே...தாராளமாக இருக்கட்டும். அம்மா... கண்ணகி! இதோ என் மகள் ஐயை உன்னை விட்டு நீங்காத துணையாக இருப்பாள்!

கவுந்தி: என் கடமை முடிந்து விட்டது. கோவல!...கண்ணகி...என் கண்ணே! போய் வருகிறேன் நான்...

கண்: தாயே...நீங்கள் எங்கள்கூட இருந்தது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது!

கவுந்தி: எனக்குப் பதில்தான் மாதரி இருக்கிறாளே...மாதரி! கண்ணகியை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவள் உன் அடைக்கலம்! அவ்வளவுதான் சொல்வேன்...

காட்சி - 28

பொற்கொல்லர் முறையீடு

பாண்டியன் தனிமாடம்

[நெடுஞ்செழியனும் கோப்பெருந் தேவியும் இருக்கிறார்கள்...]

கோப்பெருந்தேவி கேட்டுக்கொண்டே வருகிறாள்.]

கோப்: எங்கே இன்னும் சிலம்பு வரவில்லையா?...இன்னுமா பழுது பார்க்கிறார் பொற்கொல்லர்?

[நெடுஞ்செழியன் ஓலையில் எழுதிக்கொண்டிருக்கிறான்.]

கோப்: ஊகூம்...நான் கேட்பதற்குப் பதில் கூறாமல் அப்படியென்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்களாம்?

[ஊடல்]

நெடுஞ்: கல்வியின் பெருமை பற்றிப் புறத்துறைப் பாடல் ஒன்று எழுதிக் கொண்டிருக்கிறேன்.

கோப்: ஆமாம்!...புறப்பாடல்...போர் முழக்கம்! இதைத் தவிர வேறு பேச்சேயில்லை! இது...பள்ளியறை. பள்ளிக்கூடமுமல்ல ... பாசறையுமல்ல...தெரியுமா?

நெடுஞ்: தமிழ்...ஒரு தென்றல்! அது எல்லா இடத்திலும் நுழையும். பாட்டைக் கேள்...

"உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்"...

[அதற்குள் தோழி வந்து...]

தோழி: அரசே; அரண்மனைப் பொற்கொல்லர் தங்களை அவசரமாய்க் காணவேண்டுமாம்!

நெடுஞ்: வரச் சொல்!

[என்று வெளியே செல்லல்...வாயிற் படியில் நின்றவாறு...]

நெடுஞ்: என்ன?

தலைமைப் பொற்: வணக்கம்...மன்னவா!

[நடுங்குகிறார்]

நெடுஞ்: ஏன் நடுங்குகிறீர்? என்ன காரணம்?

தலைமைப் பொற்: மன்னிக்க வேண்டும்... அரசே;...மன்னிக்க வேண்டும்!

நெடுஞ்: செய்தியைச் சொல்லும்... பொற் கொல்லரே!

தலைமைப் பொற்: அரசியாரின் சிலம்பைப் பத்திரமாகத்தான்...பாதுகாப்பான இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டித், திறவுகோலையும் நானே வைத்திருந்தேன். இன்று காலை பெட்டியைத் திறந்தால், சிலம்பைக் காணவில்லை அரசே; காணவில்லை!

நெடுஞ்: காணவில்லையா? ம்...காணவில்லை என்ற செய்தியைச் சொல்லவா இங்கு வந்தீர்? பெட்டியில் பூட்டிய சிலம்பு எங்கே போகும்? பொற் கொல்லரே! உமக்கு யார் மீது ஐயப்பாடு?

தலைமைப் பொற்: நான் யாரைச் சொல்ல வேன்? என்னிடம் வேலை பார்க்கும் நூறு கொல்லர்களில் நான் யாரைக் குறிப்பிட்டுச் சொல்வது மன்னவா!

நெடுஞ்: சரி, நூறு கொல்லர்களையும் நாளை நமது நீதி மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும்! நானே விசாரணை செய்து கள்வனைக் கண்டு பிடிக்கிறேன்.

தலைமைப் பொற்: உத்திரவு, மன்னவா! என்னை மன்னிக்கவும்; வருகிறேன்.

நெடுஞ்: ம்!

[பொற்கொல்லர் போகிறார்]

காட்சி-29

ஒற்றைச் சிலம்பின் ஒலி

மாதரி வீடு

[கண்ணகி அடுக்களையில் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். கோவலன் வாட்டமாக அமர்ந்திருக்கிறான். கண்ணகி கோவலனிடம் வந்து]

கண்ணகி : அத்தான்!

கோவலன் : ம்!

கண் : ஏன் வாட்டமாயிருக்கிறீர்கள்?

கோவ : மீண்டும் வாணிபத்தைத் தொடங்குவதற்கு என்ன வழி யென்று தேடிக் கொண்டிருக்கிறேன்!

கண் : மதுரையில் நம்முடைய உறவினர்கள் நிறைய இருக்கிறார்கள்; கொற்கை முத்துக்களை விற்றுக் கோட்டைபோல் வீடு கட்டிக் கொண்டிருக்கும் அவர்கள் யாரும் நமக்கு உதவி செய்ய மாட்டார்களா?

கோவ : என் தந்தையிடமோ...உன் தந்தையிடமோ கூடப் பெற வேண்டாமென்ற உதவியை, உறவினர்களிடம் போய்ப் பெறுவதா?

கண் : வேறு வழி?

கோவ : பாண்டி மண்டிலத்தில் வாணிபம் செய்ய வழியில்லாமல் இல்லை! தொண்டி, கொற்கைத் துறைமுகங்களிலேயிருந்து சங்குகளும், முத்துக்களும், எலி மயிரினால் செய்யப்பட்ட பட்டு நூல் ஆடைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. சங்கை அறுத்து வளையல் செய்யும் தொழில்; தங்கநிற ஆடை நெய்யுந் தொழில்; உப்பு விளைவிக்கும் தொழில்! இப்படிப் பலதொழில் உண்டு பாண்டியத்தில்! எந்தத் தொழிலில் ஈடுபடவும் பொருள் வேண்டும்!

கண் : அத்தான்! நான் ஒரு வழி சொல்லுகிறேன், கோபிக்கமாட்டீர்களே?

கோவ : என்ன கண்ணகி?

கண் : என் திருமணப் பரிசாக ஐம்பதாயிரம் கழஞ்சு பொன்னுக்கு வாங்கித் தந்தீர்களே; அழகான காற்சிலம்புகள்! அவைகளை விற்று...

கோவ : சிலம்புகளையா? கண்ணகி! சிலம்பு களை விற்பதா? அய்யோ; இந்த வார்த்தையை என் காதுகள் கேட்கும் காலமும் வந்ததே! மத்தளம், சங்கு, முரசுகள் முழங்க, மன்னர் பவனிபோல் வெண் பொற்குடையின் வரிசைகள் விளங்க, மணவிழா கண்ட சுவை மிகு நாளில் அணிந்த சிலம்பை அழிப்போம் என்று, ஆருயிரே; நீ சொல்வியதற்கு... நானே காரணம்! நானே காரணம்!!

கண் : தங்களுக்குப் பயனில்லாமல் அழகுக்கேன் ஆபரணம்?

கோவ : உன் கமல மலர்ப் பாதங்களில் கணீர் கணீர் என ஓசை யெழுப்பி, இந்தக் கயவன் இதுவரையில் கழற்றாமல்

விட்டு வைத்திருக்கும் ஆபரணம் அது ஒன்று தான் என்று இடித்து இடித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறதே; அந்த சுந்தரச் சிலம் பையா விற்றுவரச் சொல்லுகிறாய்?

அய்யோ...எப்படிப்பட்ட கஷ்ட காலம் வந்து விட்டது!

கண் : நீங்கள் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை. நீங்கள் கஷ்டப்படவே மாட் டீர்கள்!

கோவ : எல்லாவற்றையும் சேர்த்துத்தான் உனக்குப் பெரிய தீங்கு செய்து விட்டேனே, கண்ணகி!

கண் : போனதை யெல்லாம் நினைத்து மனத் தைப் புலம்ப விடாதீர்கள்!

கோவ : கண்ணகி!

கண் : வாருங்கள் சாப்பிடலாம்! வெகு நாட் களாயிற்று, என் கையால் சமைத்து உங்க ளுக்கு உணவு பரிமாறி! வாருங்கள்!

[அவன் கைதொட்டு அழைக்கிறாள்.]

[எழுகிறான்.]

[உணவு படைக்கிறாள். கோவலன் சாப் பிடுகிறான்.]

கண் : சமையல் எப்படி யிருக்கிறது?

கோவ : மதுரைக்கத்தைவிடக் கொஞ்சம் அதிக மாகவே சுவைக்கிறது! கண்ணகி! இதுதான் உன்னுடைய கடைசிச் சமையல்!

கண் : ஏன்?

கோவ : மீண்டும் வாணிபம் தொடங்கி விட்டால், உன்னைப் பிறகு சமைக்க விட மாட்டேன். சமையலுக்கு ஒரு தனி ஆள்! நாமிருவரும் தனி உலகம்! சரிதானே?

[கண்ணகி வெட்கித் தலை குனிந்தவாறு...]

கண் : சரி சரி! அதற்குள் கோட்டை கட்டா தீர்கள்! சாப்பிடுங்கள்!

[கண்ணகி வெற்றிலையில் சுண்ணாம்பு தடவுதல்; மடித்தல்; கணவனுக்குத் தாம்பூலம் தருதல்]

கண் : சிலம்பு விற்ற பொருளில் வாணிபத் துக்குத் தேவையானது போக மீதியில் உங்க களுக்கு வேண்டிய பட்டாடைகளும், அணி மணிகளும் வாங்கி வாருங்கள்! நீண்ட நாட்களாகிறது; உங்களுக்கு நான் அலங் காரம் செய்து அழகு பார்த்து!

[கேலியாக]

கோவ : ம்!

[நாணத்துடன்]

கண் : ம்!

[அப்போது ஐயை உள்ளே ஓடிவந்து]

ஐயை : அண்ணா! அண்ணா!

கோவ : என்னம்மா?

ஐயை : அண்ணியையும் அழைத்துக் கொண்டு போய்விடாதே, தலைநகருக்கு!

கோவ : ஏன்?

ஐயை : நாங்களெல்லாம் குரவைக் கூத்து நடத்தப் போகிறோம்... அதை அண்ணி பார்க்க வேண்டுமென்று எனக்கும் என் தோழிகளுக்கும் ஆசை!

கோவ : கண்ணகி என்னோடு வருவதாயில்லையம்மா! நான் மாத்திரமே தலைநகருக்குப் போகிறேன். உங்கள் குரவைக் கூத்தைக் குதூகலமாக நடத்துங்கள்!

ஐயை : சரியண்ணா! அண்ணி! தயாராக இருங்கள்; கொஞ்ச நேரத்தில் வருகிறோம், அழைக்க!

[கண்ணகி தலையசைக்க, ஐயை போய் விடுகிறாள்.]

கோவ : கண்ணகி! நான் தலைநகருக்குப் புறப்படுகிறேன்!

கண் : இதோ!

[என்று சிலம்புகளைக் கழற்றப் பார்க்கிறாள். தடுத்து]

கோவ : வேண்டாம் கண்ணகி! அய்யோ... நீ சிலம்பில் கைவைப்பது என் தலையைத் துண்டிப்பது போல் இருக்கிறது!

கண் : நான் சொல்வதைக் கேட்க மாட்டீர்களா அத்தான்? நாம் ஆரம்பிக்கும் வாணிபம் வளரத் தொடங்கிவிட்டால் இதுபோல் எத்தனையோ சிலம்பு வாங்கிக்கொள்ளலாம்!

[என்று கழற்றப் போகிறாள்]

கோவ : இரு இரு கண்ணகி! சிலம்புகள் உன் காலில் இருக்கும் போதே ஒரு முறை நடந்து காட்டு! அந்தக் காட்சியைக் கடைசித் தடவையாக நான் பார்த்துக் களிக்கிறேன்.

கண் : அத்தான்?

கோவ : ஆமாம் கண்ணகி! சிலம்பை விற்று விட்டால் பிறகு அந்தக் காட்சியைக் காண முடியுமா? எங்கே, நட! நட கண்ணே!

[கண்ணகி கண்களில் நீர்!]

[நடக்கிறாள்]

[கோவலன் கண்கள் குளமாகின்றன]

கண் : அத்தான்! என்னென்னவோ சொல்கிறீர்கள், எனக்குப் பயமாயிருக்கிறது!

[அழுதவாறு தழுவிக் கொள்ளுதல்]

கோவ : பயப்படாதே கண்ணகி! நமக்கு நல்ல காலம் வருமென்று நீதானே எனக்குச் சொல்லிக் கொண்டே இருக்கிறாய்?

[தழுதழுத்த குரலில்]

கண் : கட்டாயம் நல்லகாலம் வருமத்தான்... வரும்!

கோவ : சரி, நேரமாகிறது!

[கண்ணகி ஒரு சிலம்பைக் கழற்றிவிட்டு, இன்னொன்றைக் கழற்றப் போகும்போது]

கோவ : கண்ணகி இரண்டையும் விற்க வேண்டாம்! ஒன்றை மாத்திரம் கொடு!

கண் : ஒன்று மட்டுமா?

கோவ : ஆமாம்; ஒரு சிலம்பு உன் காலிலேயே இருக்கட்டும்! அந்த ஒற்றைச் சிலம்பு ஒலி யெழுப்பும் போதெல்லாம்... உத்தமியாம் உனக்குக் கேடு நினைத்த இந்த உன்மத்தனின் உள்ளத்திலே ஆயிரமாயிரம் சம்மட்டியடிகள் விழுந்து கொண்டே யிருக்கட்டும்!

அற்பனே! அறிவற்ற பதரே! ஆவிநிகர் மணியாளை ஆலியிட்ட கரும்பாக்கி, அணு அணுவாய்ச் சித்ரவதை செய்திட்ட கொடும் பாவி! கொலைகாரா! என்றெல்லாம் அந்த ஒற்றைச் சிலம்பு என்மீது கவி பாடட்டும்; அதைப் புவி கேட்கட்டும். இந்தப் புன்மதியாளனுக்கு அப்போதாவது புத்தி வரட்டும்; கண்ணகி, புத்தி வரட்டும்!

கண் : அத்தான்! உங்கள் நீல விழி சிந்துகின்ற நீர்த்துளியால் கோலமுகம் நனைவதற்கோ பாவி நான் வழி சொன்னேன்? கவலைப் படாதீர்கள் அத்தான்! நம்பிக்கை நிறைந்த எதிர்காலம் நம்மை நோக்கி ஒளி விடுகிறது.

கோவ : நான் போய் வரவா கண்ணே!

கண் : [தன் கண்களையும் அவன் கண்களையும் துடைத்துவிட்டு] எங்கே! கவலைப்படாமல்,

மகிழ்ச்சியோடு, எங்கே! எங்கே! என்னை மயக்க வைக்கும் அந்த மந்தகாசப் புன்னகை! ஒரு முறை பத்தான்!

கோவ : [புன்முறுவலுடன்] கண்ணகி!

கண் : அத்தான்! சீக்கிரம் திரும்பி வாருங்கள்!

கோவ : மாதவி வீட்டுக்குப் போனது போல் வராமலே போய்விடுவேன் என்று பயப்படுகிறுயா?

கண் : அதுதான் திரும்பிவந்து விட்டீர்களே..

கோவ : சரி கண்ணகி! நேரமாகிறது.

கண் : அத்தான் அதிகப் பழக்கமில்லாத ஊர். பத்திரமாகப் போய் வாருங்கள்!

கோவ : குழந்தைக்குச் சொல்வதுபோல் சொல்கிறுயே?

கண் : அதையும் சொல்லத்தானே போகிறேன்!

கோவ : குழந்தைக்கா! ஹும்; வரட்டுமா கண்ணகி!

[கேலியாக]

கண் : அத்தான்!

கோவ : கண்ணகி!

[குரவைக் கூத்து ஆரம்பமாகி விட்ட ஒலி கேட்கிறது]

கோவ : குரவைக் கூத்து ஆரம்பமாகிவிட்டது உனக்கு அழைப்பு வந்துவிடும். வருகிறேன்.

[கோவலன் நகர - மாதரி பூ, மாங்காய், பழம் உள்ள தட்டு ஒன்றைக் கண்ணகியிடம் தருகிருள்.]

கண் : அத்தான்! இந்த மல்லிகைப் பூ வாடுவதற்குள் வந்து விடுங்கள்!

கோவ : அவ்வளவு சீக்கிரமா? இயலாது! இந்த மாங்காய் அழுகுவதற்குள் வந்து விடுகிறேன்!

கண் : அவ்வளவு நாட்கள் ஆகுமா?

கோவ : ம்...கண்ணகி! சிலம்பை விற்று வாணிபத்திற்கு ஏற்பாடு செய்து...எல்லா முயற்சிக்கும் கொஞ்ச நாட்கள் ஆகாதா?

[மாதரி வருகிருள், அவளிடம்]

அம்மா! கண்ணகி உங்கள் அடைக்கலம்.

[கண்ணகியின் கரம் பிடித்து அவளிடம் கொடுத்தல்]

சுருக்கமாகச் சொன்னுல் என் உயிர் உங்கள் வீட்டில் அடைக்கலம். வருகிறேன் கண்ணகி! வருகிறேனம்மா!

[ஐயை முதலியோர் கண்ணகியிடம் ஓடி வந்து, குரவைக் கூத்துக்கு அவளை இழுத்துச் செல்கிருர்கள்]



''பூம்புகார்'' அகழ்வாராய்ச்சி—கரிகாலன் காலத்துப் பொற்காசுகளும் அவற்றில் பொறித்துள்ள சின்னங்களும்.







காட்சி-30

சிலம்போ சிலம்பு

பொற்கொல்லர் நிலையம்

[நூறு பொற் கொல்லர்களையும் நிறுத்தி வைத்துத் தலைமைப் பொற்கொல்லர் கேட்கிறார்]

பொற்: ம்...நீதி மன்றத்துக்குச் செல்லும் நேரம் நெருங்கிவிட்டது. இப்போதாவது உண்மையைச் சொல்லுங்கள்...யார் சிலம்பை எடுத்தது?...

நூறு பேரும்: நாங்களில்லை! ..நாங்களில்லை!...

பொற்: பிறகு...சிலம்புக்குச் சிறகு முளைத்தா பறந்து விட்டது!...சரி...சரி...அந்தப் பகற் கொள்ளைக்காரன் யார் என்பதைப் பாண்டிய மன்னரே கண்டு பிடிக்கட்டும்...ம்...புறப் படுங்கள்...என்னோடு!...

[அனைவரும் பின்தொடரப் பொற்கொல்லர் புறப்படுகின்றார்]

சாலை

[கோவலன் ஒரு வீட்டில் சிலம்பை விலை கூறுகிறான்]

வீட்டுக்காரர்: எவ்வளவு விலையானாலும் சரி எடுத்துக் கொள்கிறேன். இரட்டைச் சிலம் பாக இருந்தால் கொடு.

கோவலன்: ஐயா! இதிலுள்ள மாணிக்கப் பரல்களுக்காக இதைத் தனியாக வாங்கக் கூடியவர் யாரும்...

வீட்டு: அதற்கென்றுல் அரண்மனைப் பொற் கொல்லரைப் போய்ப் பாரும்...அவருக்கு ஒரு வேளை தேவைப்படலாம்.

கோவ: வணக்கம் அய்யா...

வீட்டு: யாரோ வாழ்ந்த வீட்டுப் பிள்ளை—

[கோவலன் வேறு இருவரிடம் சிலம்பை விற்க முயல்கிறான்]

ஒரு: அடேயப்பா; விலை மதிக்க முடியாத சிலம்பு! சரி, நீ இதை எடுத்துக் கொண்டு அரண்மனைப் பொற் கொல்லரிடம் போ... அவர் விற்றுத் தருவார்!...

இரண்: அடேடேடே...இதோ அவரே வருகிறாரே...பொற் கொல்லரே!

[பொற் கொல்லர் வருதல்]

பொற்: என்ன?...

ஒரு: பொற்கொல்லரே, இவரிடம் ஒரு அழகான சிலம்பு இருக்கிறது.

பொற்: சிலம்பு?

ஒரு: ஆமாம்...விலை மதிப்பில்லாத சிலம்பு; இதை விற்றுத் தர வேண்டுமாம்.

பொற்: தருகிறேனப்பா. ஏனப்பா, நீ எந்த ஊர்?

கோவ: பூம்புகார்.

பொற்: தேடி அலைந்தது தானாகவே கிடைத்து விட்டது! நீ இந்தச் சிலம்போடு இந்த மண்டபத்திலேயே இரு; நான் அரசருக்குத் தெரிவித்து விட்டு உன்னை வந்து அழைத்துப் போகிறேன்.

கோவ: மிகவும் நன்றி!

[வணங்கி உட்காருகிறான். பொற்கொல்லர் மற்றவர்களை அழைத்துச் சைகை செய்தவாறு]

பொற்: நீங்கள் இருவரும் இவருக்குத் துணை யாக இங்கேயே இருங்கள். நான் வந்து விடுகிறேன்.

[பொற் கொல்லர் செல்கிறார்]



காட்சி - 31

வுலைந்தது செங்கோல்

நெடுஞ்செழியன் பள்ளியறை

[அவைக்களம் செல்லுதற்குரிய உடை புனைந்து புறப்படத் தயாராகிவிட்ட பாண்டியன், அரசியை நோக்கி...]

பாண்டியன்: நேரமாகிறதே! நீ புறப்பட வில்லை நீதி மன்றத்துக்கு?...

அரசி: நான் வரவில்லை, சிலம்பில்லாத காலோடு!

பாண்: இன்று நீதி மன்றத்தில் சிலம்புத் திருடனையுந்தான் கண்டு பிடிக்கப் போகிறேனே!

அரசி: ஆகா...எவ்வளவு அக்கறை? உங்களுக்குப் புறப்பாட்டு எழுதவும், போர்த் தளவாடம் சேகரிக்கவும், பொழுதெல்லாம் பாண்டி மண்டிலத்துச் சேதி கேட்கவும் நேரமிருக்குமே தவிரப், பொலிவிழந்து கிடக்கிறதே துணைவியின் பாதம்...என்ற கவலை வேறு இருக்கிறது?...

நெடுஞ்செழியன்: உன்னையும் என்னையும்விட நாடு பெரியது என்பதை மறந்து விடாதே!... அற்பச் சிலம்புக்காக...ஒரு அரசி இவ்வளவு கவலைப்படுவதா?

அரசி: அற்பச் சிலம்பாகத்தானிருக்கும் தங்களுக்கு! நானே அற்பமாகிவிட்டேனல்லவா; அதனால்!

நெடுஞ்: சரி...சரி...நீ வருகிறாயா இல்லையா; நீதி மன்றத்துக்கு?

அரசி: சிலம்பில்லாமல் இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைக்கமாட்டேன்...

நெடுஞ்: ம்...சரி...வருகிறேன்!

[என வேகமாகப் போகிறான்!

[வெளியே அதிகாரி (சிலம்புத் திருடன்) தயாராக இருக்கிறான். வணங்கிப் பின்னால் செல்கிறான்]

நாழ்வாரம்

[அதிகாரி பின் தொடர வேகமாக வரும் அரசன் முன்னே...பொற் கொல்லர் வணங்குகிறார்]

நெடுஞ்: என்ன?

பொற்: சிலம்பு திருடிய கள்வன் அகப்பட்டு விட்டான் மன்னவா!

நெடுஞ்: எங்கே அவன்?

[அதிகாரி தடுக்கிட்டு விழித்தல்]

பொற்: சிலம்பைப் பழுது பார்த்து விற்பதற்கு முயன்று கொண்டிருந்தான்...அவனைப் பிடித்துப் பத்திரப்படுத்தி விட்டுச் செய்தி சொல்ல ஓடி வந்தேன்...

நெடுஞ்: அப்படியா?

[அதிகாரியிடம்]

பாண்டிய நாட்டில் கள்வனா? ம்...உடனே அவனைக் கொன்று வருக!...

[அதிகாரியும் பொற் கொல்லரும் புறப்படுதல்]

காட்சி - 32

மதுரை மண்ணில் கோவலன் திருத்தி

வீதியிலுள்ள மண்டபம்

[பொற்கொல்லர், அதிகாரி, வீரர்கள்; கோவலன் இருந்த மண்டபத்திற்கு வருகின்றனர்]

கோவலன்: பொற்கொல்லரே, போன காரியம் வெற்றி தானே?

பொற்கொல்லர்: நான் போன காரியம் வெற்றிதான்! ஆனால் நீ வந்த காரியம்தான் தோல்வியில் முடிந்து விட்டது.

கோவ: அப்படியானால் மன்னருக்குச் சிலம்பு தேவையில்லையா?

பொற்: மன்னருக்கேன் சிலம்பு? மகாராணிக்கல்லவா வேண்டும்.

கோவ: (புரியாமல்) பொற் கொல்லரே!–

பொற்: சிலம்பை அவரிடம் கொடு.

[சிலம்பைக் கோவலன் அதிகாரியிடம் கொடுக்கிறான்]

அதிகாரி: உனக்கேது இந்தச் சிலம்பு?

கோவ: என் மனைவியின் சிலம்பு!

அதி: இதை விற்க வேண்டிய காரணம்?

கோவ: வாங்குபவருக்குத் தேவை இல்லாத கேள்வி!

அதி: திறமையான திருடன்!

கோவ: [திடுக்கிட்டு]...திருடன்... பொற் கொல்லரே! ஏன் இந்தப் பழி என்மீது? இது என்ன அநியாயம்?

பொற்: அரசியின் சிலம்பைத் திருடியது மட்டும் நியாயமோ?

கோவ: யார் திருடியது உங்கள் அரசியின் சிலம்பை? அதைக் கண்டுபிடிக்கத் திறனற்ற வர்கள்...வழியிலே போகிறவன் மீது பழியைப் போடுவதா?

அதி: அடக்கடா வாயை! பஞ்சமா பாதகங்களின் நிழல்கூட நுழைய முடியாத பாண்டி மண்டலத்தில் ஓர் பாதகம் உன்னுருவிலே நுழைந்திருக்கிறது என்பதைக் கேட்டு மன்னர் பதைக்கிறார்...துடிக்கிறார்!

கோவ: அந்த மன்னரை நான் காணுகிறேன். கள்வனல்ல காவலரே நான்...கருத்தழிந்த காரணத்தால் கைப்பிடித்த மனைவிதனைக் கண்ணீரில் மிதக்கவிட்டுக் கனக மலை, வைர மலை, கணக்கிடவே முடியாத வெள்ளி மலை, அத்தனையும் அழித்துவிட்டுப், பிழைப்புக்கு வழி தேடிப் பிற நாடு வந்திட்ட மா பாவி! என் சீதளச் செந்தமிழாள்...சிந்தைக்குப் பெரு விருந்து...அவள் செந்தாமரைக் கால்களிலே அணிந்திருந்த சிலம்புதனை விற்பதற்கும் துணிந்துவிட்ட கொடுமையாளன் என விளக்குகின்றேன். ஐயா! தமிழ் படிந்த நெஞ்சமிது...தமிழ்த் தாயின் வயிற்றினிலே கருவாகி உருவாகித் திருநாட்டின் மண்மீது தவழ்ந்தவன் நான்...இருட்டு மதி படைக்கவில்லை; திருட்டுத் தொழில் நடத்துவதற்கு என்பதனைக் கூறுகின்றேன். எந்நாடும் புகழ்கின்ற பெரு வேந்தன் நெடுஞ்செழியன் அவைக் களத்தில் நீதிதனைப் பெறுகின்ற உறுதி எனக்குண்டு, உடன் அழைத்துச் செல்வீர் வேந்தரிடம்!

அதி: வேந்தரென்ன உன் வீட்டுக் காவலனா?

கோவ: நாட்டுக்குக் காவலன்! நீதிக்கு—நேர்மைக்கு–அறத்துக்கு–அன்புக்கு–தமிழுக்குக் காவலன் நெடுஞ்செழியன்! அநீதி, அணுவிலோர் பாதி அவன் ஆட்சியில் நடைபெறவும் அனுமதிக்கமாட்டான் என்றகிலம் புகழக் கேட்டிருக்கிறேன். அந்தப் பாண்டியத்துப் பெரு வேந்தன் பார்க்கட்டும் என் முகத்தை! கள்வருக்குரிய இலக்கணத்தைக் காண்பானா? களங்கத்தின் சாயல்தனை எடுத்துக் காட்டுவானா? முகக்குறியால் நீதி சொல்லும் முடிவேந்தன் நெடுஞ்செழியன் முன்னிலையில்

நிற்கின்றேன். அவன் முடிவுகளே ஏற்கின்றேன். இட்டுச் செல்வீர் மன்னரிடம்!

அதி : கைகாரக் கள்வனே; உன் போன்ற பாவிகளின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்.

கோவ : ஏன், உன் முகத்தைப் பார்ப்பவர் என் முகத்தைப் பார்க்கமாட்டாரா?

பொற் : ஏனப்பா, உனக்கு இவ்வளவு வாய்த் துடுக்கு? திருடியதுமல்லாமல் திமிர் வாதம் வேறு? எதிர்த்துப் பேசாமல் உண்மையைக் கூறி விடு!

கோவ : பொற் கொல்லரே, நான் கள்வனு?

பொற் : கள்வன்தான்; நீ கள்வன்தான்!

அதி : ஆம்; நீ கள்வனேதான்.

கோவ : கள்வன்; நான் கள்வன்! கண்ணகி, உன் கணவன் கள்வன்! என் பத்தரை மாற்றுத் தங்கமே, பாண்டிய நாடு தீர்ப்பளிக்கிறது அப்படி. நான் கள்வனு கண்ணே! அய்யோ! கண்ணீர் தும்ப விடை கொடுத்து அனுப்பினையே கண்ணகி! இப்படி ஒரு களங்கம் எனக்கு வருமென்று தெரிந்துதானே கண்மணி...! தித்திக்கும் செந்தேனே! தெருப் புழுதியில் விணையென உன்னை வீசி விட்ட கயவனுக்குச் சரியான பரிசு! கள்வன்! கள்வன்! கள்வன்! அய்யோ! ஏற்கனவே ஏக்கத்தால் வாடிவிட்ட உன் இதயம் இந்த இழிசொல் எனக்குக் கிடைத்த செய்தியை எப்படித்தான் தாங்கிக் கொள்ளுமோ? கண்ணகி! எனை மணந்தாய்; இன்பம் பெறலாம் என இருந்தாய்! எரிமலையாய் ஆக்கிவிட்டேன் உன்னுடைய வாழ்வை! அது போதாதென்று கள்வனின் மனைவியடி. கண்ணகி என்று ஊரார் தூற்றுதற்கும் உனை ஆளாக்கி விட்டேன். உதய தாரகையே! ஒப்பில்லா மாணிக்கமே! மாட மாளிகை கூட கோபுரத்திலே அமர்ந்து மகர யாழ் நீ மீட்ட-மந்த மாருதம் தாலாட்ட-உன் மடிதனிலே உறங்க வேண்டிய நான், மதுரை மாநகரில் கள்வன் எனும் கணை தாக்கக் கதறுகின்றேன்; புலம்புகின்றேன்; நான் கள்வனும்! நீ சொல் நான் கள்வனு? நான் கள்வனு?

அதி : ஏ; இத்தோடு உன் வாழ்வு முடிந்து விட்டது.

[கோவலன் கழுத்தில் தளபதியின் வாள் பாய்கிறது]

காட்சி - 33

கணவன் கள்வனா?

குரவைக் கூத்து

[கூத்தின் முடிவில் ஐயை, ஒரு சோக கீதத்தை வேதனை அசைவுகளோடும் உச்சக் குரலில் பாடியும், அபிநயம் பிடித்து முடிக்கின்ற கட்டம்!

பக்கத்தில் தோழிகளும் வான் நோக்கி முகத்தையும் கையையும் உயர்த்தி, சோக அபிநயம் காட்டுதல்.

கண்ணகி, அந்தச் சோகக் கட்டத்தில் தன்னை மறந்து மூழ்கி விடுகிறாள்.

அப்போது மாதரி ஓடி வருகிறாள்!]

மாதரி : [அலறியவாறு] கண்ணகி! கண்ணகி!

கண் : [திடுக்கிட்டு] ஆ!

மாதரி : சிலம்பு கவர்ந்த கள்வனென்று குற்றம் சாட்டிக் கோவலனைக் கொன்று விட்டார்களாம், அம்மா!

கண் : ஆ!

[என அலறி விழுகிறாள். அனைவரும் கண்ணகி! கண்ணகி! எனச் சூழ்தல்!

குப்புற வீழ்ந்த கண்ணகி, கண் விழிக்கிறாள். கண்களிலேயிருந்து அருவி யென நீர் பெருக்கெடுக்கிறது!

உணர்ச்சிகளே அற்றுப் போன வெற்றுடம்பு மெல்ல எழுகிறது. கண்கள் ஏதோ நினைவில் பெயர்க்க முடியாதபடி பதிந்திருக்கின்றன!]

[நினைவுத் திரையில் பழைய காட்சி]

கோவ : நான் போய் வரவா, கண்ணே!

[உணர்ச்சிகள் புத்துயிர் பெறுகின்றன!

கண்ணகியின் இதழ்கள் அசைகின்றன!

உரக்க ஒலி எழுப்புகிறாள்]

கண் : போகக் கூடாது! நீங்கள் போகக் கூடாது! போனால் கொன்று விடுவார்கள்!...

[என்ன உளறுகிறோம் என்று தனக்குத் தானே சிந்திக்கிறாள் போலும்]

கண் : கொன்று விட்டார்கள்! கள்வன் என்று குற்றம் சாட்டிக் கொன்றுவிட்டார்கள்! அத்தான், நீங்கள் கள்வனா? கள்வனா? இல்லை! இல்லை! இல்லை!

[என முழங்குகிறாள். உணர்ச்சி, குமுறும் கடலாகிறது. ஓடத் துவங்குகிறாள்! ஓடும் வேகத்தில் பெரிய குத்து விளக்கு குடிசையின் மீது சாய்கிறது.

அதை யார் அந்த நேரத்தில் கவனிப்பது?

அனைவரும் கண்ணகியைத் தொடர்ந்து ஓடுகிறார்கள்.

கண்ணகி,

கண்ணகி என்று கதறியவாறு!

அத்தான்,

அத்தான் என்று அவள் ஓடுகிறாள். சாய்ந்த குத்து விளக்கிலேயிருந்து தீ பற்றுகிறது குடிசையிலே! குடிசை எரியத் துவங்குகிறது!

பல இடங்களில் தீ பரவுகிறது. கண்ணகி ஆவேசமாக ஓடிக்கொண்டே யிருக்கிறாள்.]

காட்சி - 34

வஞ்சினங் கூறுதல்

வீதியிலுள்ள மண்டபம்

[கோவலன் வெட்டுண்ட செய்தி அறிந்த கண்ணகி துடித்துக் கொண்டு ஓடிவருகிறாள். வெட்டுண்ட கணவனின் உடல் மீது விழுந்து கதறி அழுகிறாள்]

கண் : அய்யய்யோ அத்தான்! அத்தான்! அத்தான்! உங்களைப் பிணமாக்கி விட்டார்களா அத்தான்? நல்ல காலம் வருமென்று மதுரைக்கு அனுப்பி வைத்தேனே! இதுதானா அந்த நல்ல காலம், அத்தான்! ஏன் அத்தான் அநியாயமாகக் கொலையுண்டீர்கள்? செய்யாத குற்றத்தை ஏன் அத்தான் ஒப்புக்கொண்டீர்கள்? கண்ணகி கதறி மடியட்டும், கண்ணீரில் மிதக்கட்டும், எண்ணெயிட்ட கடுகு போல் இதயம் வெடித்துச் சிதறட்டும் என எண்ணி இப்படியொரு காட்சிக்குப் பொருளானீரோ அத்தான்? நிலவின் ஒளி காட்டும் திருமுகமும், நீல விழி காட்டும் பெரு நோக்கும், நித்திலப் பல்வரிசை காட்டும் பேரழகும் நீங்கள் களங்கமற்றவர்கள் என்பதைத் தெரிவிக்க வில்லையா? தேனமுதே, தென்னகத்துப் புகழ் முத்தே, என்னுயிரே, பொன் விளக்கே ஏன் உயிர்விட்டீர்? இதற்குத்தானு; சிலம்போடு நடந்து காட்டு கண்ணகி, கடைசி முறையாகக் கண்டு களிக்கிறேன் என்று சொன்னீர்கள்? அய்யோ! அப்போதெல்லாம் தெரியாதே இப்படியொரு கொடுமை காத்திருக்கிற செய்தி! அப்போதெல்லாம் தெரியாதே அத்தான்! அகிற்புகையால் மணமேற்றி, பொதிகை மலைச் சந்தனத்தைப் பொன்னவிர் மேனியெங்கும் பூசிவிட்டு, கிளிப்பச்சை இலை எடுத்துப், புதுக் கிழிஞ்சல் சுண்ணும்பும் பாக்கும் சேர்த்துத் தாம்பூலம் மடித்துத் தந்து, சிரிப்பு தழைக்கின்ற செவ்விதழின் இன்பமெல்லாம் சுவைத்த பின்னர், வழியனுப்பிவைத்தேனே! 'வருவீர், வருவீர்' என்று வழிமேல் விழி வைத்து நின்றேனே. என்னை ஏமாற்றிவிட்டீர்களே அத்தான், என்னை ஏமாற்றி விட்டீர்களே! அத்தான்! நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கேன் பிரபு இந்தத் தண்டனை? சொல்லுங்கள் அத்தான், சொல்லுங்கள்! பேச மாட்டீர்களா அத்தான்? மாசறுபொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே என்றெல்லாம் என்னைக் கொஞ்சுவீர்களே, அந்தக் கொவ்வைக் கனிவாய் திறந்து பேசுங்கள் அத்தான்! அத்தான், ஒருமுறை பேசுங்கள் அத்தான்! அத்தான்! அத்தான்! உங்கள் கண்ணகி வந்திருக்கிறேன் அத்தான்! பேசுங்கள் அத்தான்! பேசமாட்டீர்களா! பேசமாட்டீர்களா? வேண்டாம்.

[சினங் கொண்ட புலிபோலக் கண்ணகி எழுகிறாள்.]

கண் : வேண்டாம்! உங்களுக்காக இந்த உலகத்தையே பேச வைக்கிறேன். நீங்கள் கள்வரல்ல. என் உள்ளம் கவர்ந்த கள்வரே, நீங்கள் கள்வரல்ல. இதை உலகம் ஒப்புக் கொள்ள வேண்டும். வீழ்ந்த செங்கோலைக் கையில் வைத்திருக்கும் பாண்டியன் தலை குனிய வேண்டும். உங்களை ரத்தச் சகதியிலே புரளவிட்ட அநியாயக்காரர்களைப் பழி வாங்க வேண்டும். மதுரை மூதூர், மாசற்ற உங்களை குற்றவாளியாக்கித் தன் புகழைக் குறைத்துக் கொண்ட மதுரை மூதூர் அழிய வேண்டும். அடியோடு அழிய வேண்டும். பழிக்குப்பழி! பழிக்குப்பழி! அத்தான்! உங்கள் ரத்தத்தின் சாட்சி.

[வெட்டுண்ட கோவலன் மீது வடிந்துள்ள ரத்தத்தை எடுத்துத் திலகமிட்டுக்கொள்கிறாள்]

வருகிறேன். நொடியில் வருகிறேன்.

[கண்ணகி கனல் கக்கும் விழிகளுடன் தனது காலில் இருந்த மற்றொரு சிலம்பைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு, சினங் கொண்ட வேங்கையெனப் பாண்டியன் அரண்மனை நோக்கி ஓடுகிறாள்]

காட்சி - 35

வழக்குரை படலம்

பாண்டியன் கொலு மண்டபம் (வெளியே)

[கண்ணகி வருகிருள், கையிற் சிலம் புடன்! காவலர் அவனீ அதிகாரத்துடனும் வியப்புடனும் நோக்குகின்றனர்.]

கண்ணகி : காவலரே! காவலரே! காவியுகு நீருங் கையில் தனிச் சிலம்பும் ஆவி குடி போன வடிவுங் கொண்டு ஒருத்தி வந்திருக் கிருள், உம்மைச் சந்திக்க; என்று உமது மன்னனிடம் சென்று உடனே கூறுவீர்! உடனே கூறுவீர்!!

[காவலர் உள்ளே செல்லுதல்]

காவல : மன்னவா! கண்ணீரும் கம்பலையு மாக ஒரு பெண்மணி தங்களை அவசரமாகக் காணவேண்டு மென்று துடிக்கிறர்கள்!

பாண்டி : அப்படியா!?

அழைத்து வா உடனே!

[கண்ணகி வருகிருள் எரிமலை போல! அவைக்களம் திகைப்பில் ஆழ்கிறது!]

பாண் : யாரம்மா?... வேதனை உருவமாகக் காட்சி தரும் நீ யார்?

கண் : புருவுக்கு உடல்தந்து புகழ் பெற்ற மன்னவரின் வரலாற்றைத்-தேர்க் காலில் மகனையிட்டு நியாயம் காத்த மனுநீதிச் சோழனது பெருங்கதையை நீதியின் இலக் கணமாய்ப் பெற்றுப் பெருமை கொண்ட திருமாவளவன் கரிகாற் சோழனது பூம் புகாரே எனது ஊர்!

பெருவணிகன் மாசாத்துவானின் மருமகள்!

என் பெயர் கண்ணகி!

பாண் : உன் முறையீடு என்னவோ!

கண் : முத்து விளைகின்ற மூன்று கடல் சூழ்ந் திருக்கும் தென்னகத்தில், மும்முரசு கொட்டி, முச்சங்கம் வளர்த்து, முக்கொடியின் நிழ லிலே, முத்தமிழைக் காப்பாற்றும் மூவேந்தர் பரம்பரையின் பெருமைதனை மூளியாக்க முடிபுனைந்த மன்னவனே! என்றன் முறை யிட்டைக் கேட்பதற்குமுன் நான் யாரென்று முழுவதும் தெரிந்து கொள்க!

பாண் : யார் நீ!

கண் : கண்ணகி!

கையில் தனிச் சிலம்போடு வந்திருக்கும் கண்ணகி! மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும் நெறித்த புருவமும்கொண்டு நீதி வழுவா நெடுஞ்செழியப் பாண்டியனைத் துணிந்து இகழ்ந்துரைக்கும் கண்ணகி! அவ் வளவுதான் உனக்குத் தெரியும்!

பாண்டிய மன்னு! ரோமாபுரியின் கொலு மண்டபத்திலே உனது தூதுவர் இருக்கிறர் கள்! இதோ, பாண்டியத்துப் பேரவையிலே ரோமானியர் வீரர்களாகவும் தூதுவர்களா கவும் வீற்றிருக்கிறர்கள்! கடல் கடந்து கொடி கட்டி ஆளுகின்றாய்!

அந்தக் கொடிக் கம்பம் முறிந்து விழ...

அயல் நாட்டார் இகழ்ந்துரைக்க...

உன் கொடுங்கோல் அளித்த அவசரத் தீர்ப்புக்கு ஆளாகிக் கொலையுண்ட கோவலன் மனைவி கண்ணகி நான் என் பதையும் அறிந்திடுக அரசே, அறிந்திடுக!.

பாண் : கோவலன் மனைவி!!! சிலம்பு திருடிய கள்வனின் மனைவி!

கண் : போதும்! யாகாவாராயினும் நாகாக்க மன்னு! நாகாக்க! யார் கள்வன்?
என் கணவனு கள்வன்? இல்லை!
அவரைக் கள்வனென்று குற்றம் சாட்டிய கயவர்களே கள்வர்கள்!

பாண்டி : ஆத்திரத்தில் அறிவுக் கண்ணை மூடி விடாதே கண்ணகி! கையும் களவுமாகப் பிடிபட்டான் உன் கணவன்! கள்வனைத் தமிழகத்து நீதி கொல்லாமல் விடாது என்பது உனக்குத் தெரியுமல்லவா?

கண் : நீதியின் இலக்கணம் உரைக்கும் நெடுஞ்செழியப் பாண்டியனே! உன்னுடைய நாட்டில் எதற்குப் பெயர் நீதி?

நல்லான் வகுத்ததோ நீதி? அல்ல! அல்ல! வல்லான் வகுத்ததே இங்கு நீதி! அதனால் தான் என் வாழ்வுக் கருவூலத்தைச் சாவுப் படுகுழியில் கொட்டிவிட்டீர்! கொற்றவனே! குடைநிழலில் குஞ்சரம் ஊர்பவனே!

கொலு மண்டபத்தில் விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு, கோயில் மண்டபத்தோடு முடிவானேன்?

குற்றம் சாற்றப் பெற்றவரின் மறுப்புகளுக்கு மதிப்புத் தராமல், கொலை வாளின் வேலை அவ்வளவு அவசரமாக நடைபெறுவானேன்?

இதற்குப் பெயரா நீதி?

இதற்குப் பெயரா நேர்மை?

இதற்குப் பெயரா நியாயம்?

இதற்குப் பெயரா அரசு?

உனக்குப் பெயரா அறங்காக்கும் மன்னன்?

பாண்டி : கண்ணகி! உன் கணவன் கையிலே யிருந்தது அரசி கோப்பெருந் தேவியின் சிலம்பு!

கண் : இல்லை! கோப்பெருந் தேவியின் சிலம் பில்லை—கோவலன் தேவியாம் என்னுடைய சிலம்பு!

பாண்டி : நம்பமுடியாது என்னால்!

கண் : நீ யார் நம்புவதற்கு? உன்னை யார் நம்பச் சொல்கிறார்கள்? உன் மீது வழக் குரைக்க வந்தவள் நான்! குற்றவாளி நீ! அதனால் தீர்ப்பளிக்கும் உரிமை உன் கையில் இல்லை! இதோ இருக்கிறார்கள்—பெருங் கேண்மைப் பெரியோர்கள்! அவர்களே

இப்போது நீதிபதிகள்! அவர்கள் உரைக் கட்டும்—நல்ல தீர்ப்பு! ஆன்றோர்களே! அறிவு மிகுந்த சான்றோர்களே! அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படைகொண்டவன் பாண்டியன் என்பதற்காக நீதியின் பாதையை வளைக்காமல்... ஆரியப்படை கடந்தான்... அவனி யெல்லாம் புகழ்பெற்றான்... என்ற கீர்த்தித் திரையால் அவன் செய்த குற்றத்தை மறைத்து விடாமல்... தாய்மேல் ஆணையாகத்-தமிழ்மேல் ஆணையாகத்-தாய கத்து மக்கள்மேல் ஆணையாகத் தீர்ப்புக் கூறுவீர்! தீர்ப்புக் கூறுவீர்!

கோப்பெருந் தேவியின் சிலம்பைக் கோவலன் திருடினர் என்பது குற்றச்சாட்டு!

அதற்கு மரண தண்டனை! அது ஆராயாமல் அளித்த தீர்ப்பு... அதற்கு மன்னன் பொறுப்பு... என்பது என்னுடைய வழக்கு!

அமைச்: வழக்கிற்கு ஆதாரம்?

கண்: இதோ, இந்தச் சிலம்பு! இதற்கு இணையான மற்றொரு சிலம்பைத்தான் என் மணவாளர் விற்க வந்தார்... மாபாவிகள் அவரைக் கொன்று குவித்து விட்டார்கள்!

பாண்டி: அப்படியானால் தேவி அணிந்திருக்கும் சிலம்பு...?

கண்: அவைகளில் ஒன்று என்னுடையது... அதற்கு அடையாளம் வேண்டுமா? ஆயிரம் கேள்வி எனைக் கேட்டு உன்னைக் குற்றமற்றவனாய் ஆக்கிக்கொள்ளத் துடிக்கிறாயே; நீதி மன்றத்தின் தூய்மையை அழித்த பாண்டியனே!...இப்படி ஒரு கேள்வி நேருக்கு நேர் என் அத்தானைக் கேட்டிருந்தால், நீதி வழுவா நெடுஞ்செழியன் என்ற பெயர் உனக்கு நிலைபெற்றிருக்கும்!

என் அத்தான் உயிரும் தங்கியிருக்கும்!

அமைச்: பெண்ணே! தேவி அணிந்திருப்பதில் ஒரு சிலம்பு உன்னுடையது என்பதை மெய்ப்பித்துக் காட்டுவாயா?

கண்: மெய்ப்பித்து என்ன பயன்? இறந்த என் கணவரை எழுப்பித் தருவீர்களா?

வெட்டுண்ட தலைதனை ஒட்டித் தருவீரோ? முடியாது உங்களால்...முடியாது உங்களால்! ஆனால் ஒன்று...உயிர் போனதால் தொங்கி விட்ட என் அத்தானின் தலைபோல உங்கள் தலைகளையும் தொங்க வைக்கிறேன்...உங்கள் மானம் போனதால்... உங்கள் நேர்மை போனதால்... உங்கள் நீதி அழிந்ததால்... இதோ, உங்கள் தலைகளையும் தரைநோக்கித் தொங்க வைக்கிறேன்...

மதுரைப் பாண்டியா! உனது மனைவியின் பழைய சிலம்பிலே உள்ள பரல்கள் முத்துக்களா; மாணிக்கங்களா?

பாண்டி: முத்துக்கள்! கொற்கை முத்துக்கள்!

கண்: என் சிலம்பிலே உள்ளவை மாணிக்கப் பரல்கள்!

பாண்டி: எங்கே பார்க்கலாம்... தேவி! கொடு இப்படி!

[அரசி சிலம்புகளைத் தருகிறாள்]

பாண்டி: [கீழே ஆத்திரமாக வீசி உடைத்தவாறு] இதோ பார்...

[முதற் சிலம்பு-முத்துப் பரல்கள் தெறிக்கின்றன]

பாண்டி: இதோ, கோவலன் திருடிய சிலம்பு!

[அதையும் உடைக்கிறான்.]

[அதில் மாணிக்கப் பரல்கள் சிதறுகின்றன...]

பாண்டி: ஆ!



"பூம்புகார்" அகழ்வாராய்ச்சியில் கண்ட படகுத்துறை

அவையோர் : ஆ!

கண் : இன்னும் சந்தேகமா? இதோ என்னுடைய மற்றொரு சிலம்பு!

[உடைக்கிருள், ஆவேசமாக...மாணிக்கப் பரல்கள் சிந்துகின்றன,]

கண் : என்ன சொல்லுகிறுய் பாண்டியா, இப்போது? அமைச்சர்களே! அறங் கூறும் சான்ருேர்களே! இதற்கென்ன பதில்? தலை தொங்கி விட்டதா? நெடுஞ்செழிய பாண்டியனின் அறம்...மறம்...திறன்...அத்தனையும் மண்ணோடு மண்ணுகக் கலந்து விட்டதா? அய்யோ, ஏனிந்த வாட்டம்? தமிழகம் சிரிக்கின்றது பாண்டியா; நீ தலை குனிந்து நிற்பதைப் பார்த்து!

தமிழ் நாட்டு மறைநூல் திருக்குறள் கேலி புரிகிறது பாண்டியா; உன் நீதி வளைந்த செய்தி கேட்டு!

ஆனை, சேனை ஆயிரமாயிரம் எதிர்த்து வந்தாலும் அண்ணுந்து தலைகுனியாமல் படை நடத்தும் உன் வீரமெங்கே?
கம்பீரமெங்கே?

வெற்றித் திருப்பார்வை எங்கே? எல்லாம் பாழ்! எல்லாமே பாழ்! பாழ்! மானமெல்லாம் போன பின்பு உனக்கு மாட மாளிகை...மணி மண்டபம் ஒரு கேடா? மாணிக்கமிழைத்த அரியாசனம் ஒரு கேடா? மாசு படரவும் மாநிலம் இகழவும் நீதி வழுங்கிய உனக்குச் செங்கோல் எதற்காக? வெண்குடை எதற்காக?
வேற்படை...
வாட்படை...
வேழப்படை எதற்காக?
வீணனே!
வீரர் குலத்துக்கு இழிவு கற்பிக்க வந்தவனே!

இமிழ் கடல் வேலித் தமிழக மெங்கும் நீங்காமல் நிறைந்திருந்த நீதியனை நொடிப் பொழுதில் அழித்துவிட்ட பாதகனே!

அழு! அழு! நன்ருக அழு! என்னைக் காலமெல்லாம் அழவைத்த காவலனே; நன்ருக அழு!

என்றன் காதலனைக் - கண்ணனைக் - கண்ணை நிறைந்த மணவாளனைத் துடிக்கத் துடிக்கக் கொன்று விட்ட பாவி; அழு! அழு! அழு!

பாண்டி : கண்ணகி!

உன் கணவன் கள்வனல்ல! ஆராயாமல் அவசரத்தில் "கொண்டு வருக அவனை!" என்பதற்குப் பதில்... "கொன்று வருக அவனை" என்று ஆணையிட்ட

நானே கள்வன்!
நானே கள்வன்!
தமிழே!
தாயகமே!
என் தாயே!
என்னை மன்னித்து விடு!
மன்னித்து விடு!

[அடியற்ற மரமென விழுந்து சாகிறுன்... கோப்பெருந் தேவியும் அவனைத் தழுவி]

கோப் : அரசே!
அரசே!!
அரசே!!!

[என அவன் மீது உயிர் விடுகிருள்]

கண் : அழியட்டும்! வீழ்ந்து

ஒழியட்டும்!!

நீதி தவறிய பாண்டியா! உன் களங்கத்தைக் கழுவக் கூடிய சாதனம் சாவு ஒன்றுதான்!
சாவு ஒன்றுதான்!!

அழியட்டும்!

ஒழியட்டும்!!

என் கணவன் சாவைத் தடுக்க முடியாத மதுராபுரியே, அடியோடு அழியட்டும்!

மாளிகைகள் மண்மேடுகளாகட்டும்!
பூமி பிளக்கட்டும்!
புழுதி பறக்கட்டும்!
நெருப்பு பரவட்டும்!
நியாயத்தின் பிழம்பு தெரியட்டும்!

[பயங்கரச் சிரிப்பு...நகரெங்கும் கேட்கிறது! நகரில் தீ பரவுகிறது! தெருவில் மக்கள் ஓட்டம்]



காட்சி-36

தீயுண்ட திருநகர்

தெருக்கள்

[பொற் கொல்லர் வீடு எரிகிறது!

தெருவில் மரமென நிற்கும் பொற்கொல்லர்]

பொற் : என்னுல் அன்ருே பாண்டியனின் நீதி கவிழ்ந்தது! அதனுல் நெருப்புக்கு நானே இரையாகிறேன்!

[என எரியும் வீட்டுக்குள் நுழைந்து தனலாகிருர்!]

★

[ஒரே தீக்காடு! அரண்மனே அழிகிறது பெரு நெருப்பால்! அரண்மனேயின் இடிபாடு களில் சிலம்பு திருடிய அதிகாரி சிக்கி அழி கிருன்!]

[கண்ணகி—ஆவேசக் குரலும், புயல் நடையும்!]

கண் : பரவட்டும்...தீ பரவட்டும்! என் மனம் எரிவது போல் மதுரை எரியட்டும்! என் நெஞ்சிலே மூண்ட நெருப்பே! அழித்து விடு மதுரையை! என் கணவனேப் பலி கொண்ட மதுரை அழியட்டும்! அழியட்டும்!! கோவ லரைக் கொன்றபோது வாய்மூடிக் கிடந்த கூடல் நகரத்தாரே! இப்போது கூவுங்கள்! அழிவைக் கண்டு அலறுங்கள்! கதறுங் கள்! அ ல ற று ங் க ள்! காற்றே வீசு! கனலே கிளம்பு...!அழிவே புறப்படு! பழிக் குப் பழி வாங்கு! பழிக்குப் பழி! பழிக்குப் பழி!

[நெருப்பிடையே கண்ணகி பெருஞ்சிரிப்பு]

[மதுரை தீயிலே மறைகிறது]

[நீதி தவறிய பாண்டிய மண்டலம் அழி வதை மக்களே விரும்பினர்கள்]



சேரன் செங்குட்டுவன் அவை

சேரன் : வாளேந்தி, தமிழகத்தில் புகழேந்தி வாழும் வேங்கைப் புலிகளே! வந்து விட்டது உங்களுக்கு எல்லாம் அழைப்பு! மீண்டும் ஓர்முறை நம் வீரத்தை நிலை நாட்ட நல்லதோர் வாய்ப்பு! இமயத்திலே பொறித்திருக்கும் நம் சின்னங்களைப் பழித்தார்களாம், சிறுமதி கொண்டோர் சிலர் – புலியைக் கேலி செய்தான் போர்முனை காணுப்புல்லன் - வில்லை இகழ்ந்தான் வீரத்தை விலை கேட்கும் வீணன். கயலைப் பழித்தான் களம்புகு கதைகளைக் கேட்டறியாக் கசடன். உத்திரனும் - விசித்திரனும் - சிவேதனும் - பைரவனும்; விழிக்காதீர்கள்! மனிதர்களின் பெயர்கள்தான் இவைகள் – இந்த மண்டுக மன்னர்களுக்குத் தலைவர்களாம் கனகனும் விசயனும்! கங்கைக்கரை வாழ் காவலர்கள் காவிரிக் கரைக்கு அறை கூவல் விடுத்தார்களாம்! தோழர்களே! புத்தி புகட்டுவோம் அவர்களுக்குப், புறப்படுங்கள்!

புரோகிதர் : சோழனுக்கும் பாண்டியனுக்கும் இல்லாத ஆத்திரம் தங்களுக்கு மட்டும் ஏன் மன்னவா?

சேர : தமிழன் என்பதால்! தன் மான உணர்ச்சி குன்றுததால்! சோழனே பாண்டியனே என்னுடைய பகைவனுக இருக்கலாம்; அதற்காக பிற நாட்டார் வாலாட்ட விடமாட்டேன், என் உயிருள்ள வரையில்! என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள்; தருக்கர்கள்! ஆகா...குறள் தந்த கோமானே, வள்ளுவனே! உன்னை இகழ்ந்தார்கள்! அத்தாணி மண்டபத்தில் சத்தான கருத்துரைக்கும் சாத்தனரே, உம்மை இகழ்ந்தார்கள்! பாவாணரே! ஐந்தாம் பத்துப் பாடிய அன்புப் பரணரே! அரங்கின் அண்ணலே உம்மை இகழ்ந்தார்கள்! முத்துக் கடலே, முல்லைக் கொல்லையே, உன்னை இகழ்ந்தார்கள்! எட்டுத் திக்கும் முரசு கொட்டி வாழும் சிங்கத் திருவிடமே, உன்னை இகழ்ந்தார்கள்!...அன்னை நற்சோணையே, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகன் செங்குட்டுவனின் வெற்றியை இகழ்ந்தார்கள்! ஈடற்ற புலவனே இளங்கோ! ஆசைத்தம்பி, உன்னை இகழ்ந்தார்கள்! நீதிக்கு உயிர் தந்த பாண்டியா! ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியனே! உன்னை இகழ்ந்தார்கள். செந்தமிழ் வளங்குறையாச் சிற்றரசுகளே! சிங்க ஏறுகளே! அறிஞரே! கவிஞரே! கலைஞரே! கலைவாணரே! உம்மையெல்லாம் இகழ்ந்தவர்கள் உயிரோடு இருக்கிறார்கள், மன்னர்களாய்! பொருநை நதியும் பொழிலும் சூழ்ந்த எழில்மிகு வஞ்சித் தலைநகரே, உன்னை இகழ்ந்தார்கள்! இகழ்ந்தார்கள்!! இழிகுணம் படைத்தோர் இகழ்ந்தார்கள்! அமைச்சர் அழும்பில் வேள் இருக்க - வீரன் வில்லவன் கோதை தளபதியாயிருக்க-உங்கள் திரண்ட தோள்களில் எல்லாம் வலிமை வளர்பிறையாயிருக்க - அந்தப்புரத்திலே உலவிக் கிடக்க வேண்டியவை ஆவேசக் கூச்சலிட்டனவாம்—வீரர்களே! பார்ப்போம் ஒரு கை அந்த நாகாக்கத் தெரியாத நாடோடிகளை! தும்பிவாடி - தோரணங்கற்பட்டு - வேட்டமங்கலம் கோட்டைகளிலுள்ள வீரரெல்லாம் கிளம்பட்டும்! காளையரே! காதலியருக்குக் கடைசி முத்தம் இதுவாக இருக்கலாம் என்று கூறிவிட்டுப் புறப்படுங்கள்! நாமென்ன சாகப் பயப்படும் சமுதாயமா? சமருக் கஞ்சும் இனத்தவரா, அந்தச் சாமரமேந்திகளிடம் சரணடைய! இல்லை! இல்லை! களத்திலே உங்கள் தலைகள் பறிபோகலாம்! ஆனால் கனல் கக்கும் கண்களோடு அவை கொய்யப் படட்டும். தசைகள் கிழித் தெறியப்படலாம்! ஆனால் சுயமரியாதை ரத்தத்தின் சூடு தணியாமல் அவை கிழிக்கப்படட்டும்! முரசு தட்டுங்கள், இமயத்தை முட்டுங்கள், தமிழன் தோற்றதில்லை, தோற்றதில்லை! தோழர்களே! புறப்படுங்கள்!'

இமயத்தில் - குயிலாலுவம்

[சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விஜயருக்கும் நடைபெற்ற போரில், செங்குட்டுவன் வெற்றி பெறுகிறான்.]

சேரன்: வில்லவா! வெற்றி முழங்கும் இந்த இடத்திற்குப் பெயர் என்ன?

வில்லவன்: குயிலாலுவம்.

சேர: குயிலாலுவம், குறித்துக்கொள்! இந்தப் பாறைகள் அனைத்தும் பைந்தமிழ் வீரம் தீட்டிய ஏடுகள். வெற்றி மட்டும் போதாது வில்லவா, அந்த வீரர்களை விடக்கூடாது!

வில்: காஷாய உடையிலே ரிஷிகளைப் போல் எங்கேயோ ஓடி விட்டார்களாம் கனக விஜயர்கள்.

சேர: இது புதுமையல்ல, அவர்களுக்கு உரியதான ஒரே பழக்கம் அதுதான்.

[கனக விஜயர்கள் முனிவர் உடையில் கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்படுகிறார்கள்.]

சேர: யார் இவர்கள்?

வில்: கனக விஜயர்!

சேர: கனக விஜயர்! கனக விஜயர்! ஆகா வீராதி வீரர்களே, நன்றாக இருக்கிறது போர்த்திறமை! முதுகு காட்டுவது - முக்காடு போடுவது—மறைந்திருந்து தாக்குவது—மகானைப் போலவே! அமைதியான முனிவர் வேடத்தில் இருக்கிறீர்களே; இதற்குப் பதில் சொல்லுங்கள்! புராணத்திலே தேவாசுர யுத்தம் எவ்வளவு நாள் நடந்தது?

கன: பதினெட்டு ஆண்டுகள்.

சேர: ராமராவணப் போர்?

கன: பதினெட்டு மாதங்கள்.

சேர: பாரதப் போர்?

கன: பதினெட்டு நாட்கள்.

சேர: வீரர்களே! நீங்களிருக்கட்டும், சேரன் செங்குட்டுவன் வடநாட்டிலே நடத்தியபோர் பதினெட்டே நாழிகையில் முடிந்துவிட்டது!

கன: மன்னவா, மண்டியிடுகிறோம். மன்னித்து விடுங்கள்.

சேர: மன்னிப்பதா? நான் மன்னிப்பதா? தமிழ்நாட்டு மண்ணில் வந்து மண்டியிடுங்கள். அது உங்களை மன்னிக்கட்டும்.

வில்: மன்னவா, தமிழகம் திரும்ப வேண்டாமா? புறப்பட்டு முப்பத்திரண்டு திங்கள் ஆகின்றனவே.

சேர: புறப்படுவோம் - வில்லவா; அதற்குள் கண்ணகிக்குச் சிலை நாட்ட இங்குக் கல் எடுக்க வேண்டுமல்லவா?

வில்: ஆமாம்.

சேர: அந்தக் கல்லைச் சுமப்பதற்குச் சரியான எருதுகள் கிடைத்து விட்டன. கனக—விஜயா, தமிழரின் வீரத்தின் மீது வீசினாயே ஒரு சொல்; இப்போது தூக்கு கல்!

வீரர்கள்: சேரன் செங்குட்டுவன் வாழ்க!

* * *

வஞ்சிமூதூரில்
கண்ணகி சிலை நாட்டு விழா

[சேரன் செங்குட்டுவன், இலங்கைக் கயவாகு முதலிய மன்னர்களும், இளங்கோவடிகள், சாத்தனார் முதலிய புலவர்களும் நிற்கிறார்கள்.

மாதவி, துறவுக் கோலத்தில், கண்களில் நீர்வழிய, குழந்தை மணிமேகலையைக் கொண்டுவந்து சிலையின் காலடியில் வைக்கிறாள்.]

164596

07.21NKRI,C
N67